REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஏப்ரல் 9 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY
தினகரன்
வரு. 92 இல. 86 | Tuesday 09, April, 2024 | 20பக்கங்கள் | 50/-




## ஸ்ரீ.சு.க பதில் தலைவராக அமைச்சர் நிமல் நியமனம்



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அவசர அரசியல் குழுக்கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த அவசரக் கூட்டத்தில் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பங்கேற்றிருந்தார்.

இதன்போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா நியமிக்கப்பட்டார்.

# கொம்பனித்தெரு இரட்டை மேம்பாலம் நேற்று ஜனாதிபதியால் திறந்து வைப்பு

### அடுத்த கட்ட நிர்மாணப் பணிகள் செப்டெம்பருக்குள் நிறைவு





கொம்பனித்தெரு, நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை பகுதிகளை இணைக்கும் வகையில் ரயில் பாதைக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இரட்டை மேம்பாலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (08) மக்களின் பாவனைக்காக திறந்து வைத்தார்.

இந்தத் திட்டத்தின் அடுத்த கட்ட நிர்மாணப் பணிகளை செப்டெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டு 06

யார் என்ன சொன்னாலும்
நாடு முழுவதும் குறைந்த விலையில் தருவது
காகில்ஸ் மட்டுமே
ரூ.265 வெள்ளை சீனி 1kg
ரூ.299 மைசூர் பருப்பு 1kg
ரூ.255 பொன்னி அரிசி 1kg
ரூ.189 வெள்ளைப் பச்சரிசி (உள்நாடு) 1kg
2024 ஏப்ரல் 09 வரை மட்டுமே செல்லுபடியாகும்.
ரூ.950 ப்ரீமா முழு சிக்கன் (தோலுடன்) 1kg
2024 ஏப்ரல் 15 வரை மட்டுமே செல்லுபடியாகும்.
ரூ.895 மில்க்கா முழு ஆடைப் பால்மா 400g
சாதாரண விலை ரூ.450 எங்களின் விலை ரூ.396 கொகா-கோலா 2L
சாதாரண விலை ரூ.650 எங்களின் விலை ரூ.585 ப்ரீமா கொத்து மீ (ஹொட் எண்ட் ஸ்பைசி) 5 இன் 1 பெக்
சாதாரண விலை ரூ.1,550 எங்களின் விலை ரூ.1,395 கிஸ்ட் மெஜிக் குக்கி அஸ்றோனமன்ட் புளு 330g
சாதாரண விலை ரூ.880 எங்களின் விலை ரூ.748 சன்லைட் பேல்ஸ் மெட்டிக் லிக்குயிட் 1L
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
ஏனைய சலுகைகள் 2024 ஏப்ரல் 30 வரை மட்டுமே.
இருப்பு உள்ளவரை மட்டுமே.
எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி விலைகள் மாற்றப்படலாம்.
Cargills FOOD HALL | Cargills XPRESS | Cargills food city வீடு செல்லும் போது

### தரமற்ற Human Immunoglobulin ஊசி மருந்து செலுத்திய

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 03 நோயாளர் மரணம்

### நளிந்த திஸ்ஸ PC மாளிகாகந்த மாஜிஸ்திரேட் முன்னிலையில் நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் மூவர் தரமற்ற Human Immunoglobulin ஊசி மருந்தை பெற்றுக் கொண்ட பின் மரணமடைந்துள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்ததிஸ்ஸ மாளிகாகந்த மாஜிஸ்திரேட் நீதவான் லோச்சனி அபேவிக்கிரம முன்னிலையில் நேற்று தெரிவித்துள்ளார்.

அந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி, அந்த விடயத்தை சமர்ப்பித்து இந்த விடயங்களை மேற்படி வழக்கில் உள்வாங்குமாறு கேட்டுக் கொண்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விஷேட மருத்துவர் ஜெ. இப்ராஹிமின் பொறுப்பிலுள்ள 16ஆம் இலக்க வார்ட்டில் கடந்த ஆகஸ்ட் 13ஆம் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட உதய பெரேரா, ஜோயோனிகா அபேவர்தன, மற்றும் அசோக்க பலிசேன ஆகிய மூன்று நோயாளிகளும் மேற்படி தடுப்பூசியை பெற்றுக் கொண்டதன் பின்னர் கடும் சுகவீனத்துக்குள்ளாகி மரணமடைந்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இதன்போது சட்ட மாஅதிபரை பிரதிநிதித்துவப்படுத்தி நீதிமன்றத்தில் ஆஜராகி விடயங்களை முன்வைத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வழக்கு தினத்தில் இந்த சிவில் அமைப்பு மூலம் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்ட இந்த ஆவணங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் அந்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட கொழும்பு தேசிய வைத்தியசாலையின் டாக்டர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் மரணமடைந்துள்ள ஒரு நோயாளி மேற்படி ஊசி மருந்தை பெற்றுக் கொண்டுள்ளதுடன் கடும் நோய்க்கு உள்ளாகியதன் பின்னர் மருத்துவர்கள் அவரின் உயிரை பாதுகாத்துள்ளனர். எனினும், அதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாகவும் அதன் போது உடனடியாக டாக்டர்கள் சம்பந்தப்பட்ட மருந்தை பாவனையிலிருந்து நீக்கியுள்ளதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் நாட்டுக்கு கொள்வனவு செய்துள்ள Human Immunoglobulin மற்றும் புற்றுநோய்க்கான 06

## ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 06-11 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.35 |
| ஸுபஹ் | 04.50 |
| சூரிய உதயம் | 06.07 |
| ழுஹர் | 12.14 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

### 6,000 மாணவர்களுக்கான

## ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் மே மாதம் முதல்

### மார்ச், ஏப்ரல் நிலுவைத்தொகையும் வழங்க ஏற்பாடு



2022/2023 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பொருளாதார சிரமங்களுக்கு முகம்கொடுக்கும் 6,000 மாணவர்களுக்கு 06



## 06

### நெடுஞ்சாலை வலையமைப்பின் மூலம்

## இலாபம் ரூ. 05 பில்.ஆக இருப்பினும் நிலுவைக் கடன் ரூ. 800 பில்லியன்



## 03

### கெஹெலியவின் விளக்கமறியல்

## ஏப்ரல் 22 வரை மீண்டும் நீடிப்பு

## 1445: ஷவ்வால் தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று

### கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது

**ஸாதிக் ஷிஹான், எஸ்.எம். ஜாவித்**

ஹிஜ்ரி 1445 ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறையை (நோன்புப் பெருநாளை) தீர்மானிக்கும் மாநாடு இன்று 09ஆம் திகதி கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு தலைவர் கலீபதுல் குலபா மௌலவி எம்.பி.எம் ஹிஷாம் பத்தாஹி தலைமையில் இன்று மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து நடைபெற்றவுள்ள இந்த மாநாட்டில் 06

### வறுமையில் உள்ளவர்களை வலுவூட்டும்

## வரலாற்றில் மிக உயர்வான சமூக பாதுகாப்பு திட்டம் நடைமுறையில்

### 2023 இல் மட்டும் ரூ. 200 பில். நிவாரணம்



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 200 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாக சமூக விவகாரங்களுக்கான ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

2024 மார்ச் 31 வரையில் நிவாரணம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 18,54,308 ஆக காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமூக அலுவல்களுக்கான ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் நேற்று (08) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே 06

### மஹிந்த, துமிந்த, லசந்தவுக்கு எதிரான மைத்திரியின் முடிவு

## SLFPயில் இருந்து மூவரை நீக்கும் தீர்மானத்துக்கு தடை நீடிப்பு

### 24ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்றம் தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து அமைச்சர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த 06

## மூன்று மாதங்களில் 635,784 சுற்றுலா பயணிகள் வருகை

### 102.5 கோடி டொலர் வருமானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதாகவும் அந்த வகையில் இந்த வருடத்தின் முதல் 03 06

## பொலிஸ் துப்பாக்கி சூடு; விமானப்படை வீரர் பலி

### 02 பேரை கொலை செய்தவரென சந்தேகம்

பாதுக்கை அங்கமுவ பகுதியில் பொலிஸாருடன் நேற்றுக் காலை (8) இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது, பொலிஸ் வீதித் தடைக்கருகில், உத்தரவை மீறிசென்ற மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து பொலிஸார் பதிலுக்கு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மோட்டார் 06

## மைத்திரி கட்சியையும் நாட்டையும் அழித்து விட்டார்

### சரிசெய்வோம் என சந்திரிகா ஆதங்கம் வெளியீடு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியையும் அழித்து நாட்டையும் 06

### தமிழர் தரப்பு பொது வேட்பாளர்

## தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாட தீர்மானம்

**வவுனியா விசேட நிருபர்**



ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிப்பதற்காக தமிழ் தேசியப் பரப்பிலுள்ள தமிழ் கட்சிகளுடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கலந்துரையாடவுள்ளதாக கூட்டணியின் 06

# நகர்வலம்



அரசாங்கத்தின் அரிசி நிவாரணத் திட்டம்

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 54,800 மெற்றிக் தொன் அரிசி கொள்வனவு

### திறைசேரி மூலம் பணம் ஒதுக்க நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படும் என்றும் அதற்காக 54,800 மெற்றிக் தொன் அரிசி விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க மாவட்டச் செயலாளர்களே அதற்கான அரிசி கொள்வனவை மேற்கொள்வர் என்றும் அதற்கான நிதியை திறைசேரி மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த வகையில் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் விரிவாக முன்னெடுக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வீதம் வழங்குவதற்கு அமைச்சரவை அண்மையில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் குடும்பங்களுக்கான அரிசிப் பொதிகள் விநியோகம் பிரதேச செயலக மட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அஸ்வெசும பயனாளிகள் நலன்புரி திட்டத்திற்காக மேன்முறையீடு செய்த மக்களில் நலன்புரி நன்மைகள் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அஸ்வெசும திட்டத்தின் மூலம் பயன்பெறாத சமுர்த்தி பயனாளிகள், அஸ்வெசும அல்லது சமுர்த்தி நலன்புரி கொடுப்பனவுகள் கிடைக்காத மேலதிக நிதியுதவிகள் பெறும் முதியோர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் நாட்பட்ட நோயுற்றோர்களுக்காக இந்த அரிசி வழங்கப்படவுள்ளதாக அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான 54,800 மெட்ரிக் தொன் அரிசியை விநியோகஸ்தர்களிடமிருந்து மாவட்டச் செயலாளர்கள் கொள்முதல் செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தெளிவத்தை ஜோசப்பின் நூல் வெளியீடு





தெளிவத்தை ஜோசப் "கனடா தாய் வீடு" இதழில் எழுதிய நெடுங்கதை "மாறுதல்கள்" எனும் நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் (7) ஞாயிற்றுக்கிழமை மாலை சாகித்யரத்ன தி.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்ற போது, நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் விழா தலைவரிடமிருந்து பெறுவதையும், விழா ஏற்பாட்டாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்புசந்தி திலகர் மற்றும் தெளிவத்தை ஜோசப்பின் புதல்வர்களான, ரமேஷ் மற்றும் ரவீந்திரன் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

## புதையல் தோண்டிய மூவர் சந்தேகத்தில் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை எஹட்டுவெவ பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றிரவு எஹட்டுவெவ பொலிஸ் பிரிவின் மீகலாவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 23,45,52 வயதுடைய கல்கமுவ, மிஹிந்தலை மற்றும் மீகலாவ பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எஹட்டுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## இரத்மலானை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் இப்தார்





தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில், வரலாற்றில் முதல் தடவையாக தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் முஸ்லிம் ஊழியர்களுக்கான இப்தார் நிகழ்வு (04) வியாழக்கிழமை இரத்மலானையில் அமைந்துள்ள நீர் மற்றும் சுகாதாரத்திற்கான மேம்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். நபீல், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உபதலைவர் சஞ்சீவ விஜயகோன், மேலதிக பொது முகாமையாளர் எம்.ரி.எம். ராஸில் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் முஸ்லிம் ஊழியர்களுடன் மாற்று மத சகோதர ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டுறவு தொடர்பாடல் பிரிவின் முகாமையாளர் சரத்சந்திர முத்து பண்டா வரவேற்புரை நிகழ்த்தினார். இரத்மலானை ஜும்ஆ பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி முஹம்மத் ஹிபதுல்லாஹ் (பாரி) சிங்கள மொழியில் மார்க்க சொற்பொழிவுடன் துஆ பிரார்த்தனையும் நிகழ்த்தினார். அதனையடுத்து சபையின் உபதலைவர் சஞ்சீவ விஜயகோன் சிறப்புரையாற்றினார்.

இறுதியாக உதவிப் பொது முகாமையாளர் எம்.ரி.ஏ. பாவாவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. கூட்டுறவு தொடர்பாடல் பிரிவின் முகாமைத்துவ உதவியாளர் பிறவ்ஸ் முஹம்மட் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

## கொட்டராமுல்ல அஹதியாவின் இப்தார் நிகழ்வு

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொட்டராமுல்ல அஹதிய்யாப் பாடசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார்

நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ( 2 ) அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் இஸ்தான்

( மின்ஹாஜி ) தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், அஹதிய்யாப் பாடசாலையின் தவிசாளர் அல்ஹாஜ் ஏ.டபிள்யூ.எம்.

இல்யாஸ், செயலாளர் எம்.எப்.எம். முர்ஷித், கொட்டராமுல்ல ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஜே.எம். லியாஸ், செயலாளர் எம்.எச்.எம். பஸ்ரி (ஆசிரியர்), கொட்டராமுல்ல மகளிர் சங்கத்தின் தலைவி ஆசிரியை ஹைரிய்யா உட்பட பிரதேச உலமாக்கள், கல்விமான்கள், அஹதிய்யாப் பாடசாலையின் மாணவ மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுக்கு புதிய நம்பிக்கையாளர் சபை

### அலிசப்ரி ரஹீம் எம்.பியினால் நியமன பத்திரங்கள் கையளிப்பு

புத்தளம் தினகரன் நிருபர்



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் விசேட இடைக்கால நம்பிக்கையாளர் நியமன பத்திரங்கள் வெள்ளிக்கிழமை (05) வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நியமன பத்திரங்கள் 2024 ஏப்ரல் 01ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூன் 15ஆம் திகதி வரை (இரண்டரை மாத காலத்திற்கு) வழங்கப்பட்டுள்ளது.

பின்வருவோர் புதிய இடைக்கால விசேட நம்பிக்கையாளர்களாக நியமனம் பெற்றனர்.

தொழிலதிபர் எம்.டீ.ரூஹுல் ஹக், சட்டத்தரணி எம்.ஏ.எம்.அஸீம், அஷ்ஷெய்க் எச்.எம்.மின்ஹாஜ் (இஸ்லாஹி), ஆசிரிய ஆலோசகர் ஏ.டீ.எம்.நிஜாம்,

அஷ்ஷெய்க் எம்.எம்.முஹ்சின், கிராம சேவையாளர்களான என்.எம்.ரஸ்மி, எம்.எப்.எம்.முஜாகித், எச்.ஆர்.எம்.ஜிப்ரி மற்றும் புத்தளம் வர்த்தக சங்க தலைவர் வை.எம். நிஸ்தார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். நியமனம் வழங்கப்பட்டமைக்கான பிரதியை பெரிய பள்ளியின் முன்னாள் நம்பிக்கையாளர் பஸால் ஹாஜியார் ஒப்பமிட்டு பெற்றுக் கொண்டார்.

பெரிய பள்ளியின் பழைய நம்பிக்கையாளர் சபையினால் வேண்டிக் கொண்டதற்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி புதிய நம்பிக்கையாளர் சபை ஒன்றை உருவாக்கும் வரையில் விசேட இடைக்கால நிர்வாகம் ஒன்றை நிறுவி அதற்கான நியமன பத்திரங்களையும் கையளித்தார்.

## ஜனநாயக மக்கள் காங்கிரஸ் – இந்திய துணைத்தூதுவருடன் சந்திப்பு

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தலைமையிலான உறுப்பினர்கள் அண்மையில் இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவரை தூதரக அலுவலகத்தில் சந்தித்தனர். இதன்போது இந்திய வம்சாவளி மக்கள் சார்பான கோரிக்கைகளை முன்வைத்ததோடு அதில் முக்கியமாக தாழ்நில பெருந்தோட்டம் சம்பந்தமாக குறிப்பாக, காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை வாழ் மக்களின் நிலைகள் சம்பந்தமாக இதன்போது ஆராயப்பட்டன. மேலும் இந்திய வீட்டுத் திட்டத்தில் இவர்கள் முறையாக உள்வாங்கப்படாமை சம்பந்தமாக காங்கிரஸ் உறுப்பினர்கள் இதன்போது தெரிவித்தனர்.



அதேபோல், 2014 ஆம் ஆண்டு நான் பிரதியமைச்சராக இருந்த போது சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு இலவச இந்தியா விசா 5000க்கும் அதிகமானவர்களுக்கு பெற்று கொடுத்ததாகவும் பிரபா கணேசன் இதன்போது சுட்டிக்காட்டினார். தனது பதவிக் காலத்திற்குப் பின்பு இதனை சரியாக யாரும் முன்னெடுக்கவில்லை. ஆகவே மீண்டும் இவர்களுக்கு இலவச விசா கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் பிரபா கணேசன் இந்திய துணைத் தூதுவரிடம் முன்வைத்தார்.



எதிர்வரும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் நிதி ஒதுக்கீட்டில் புத்தளம் நகரம் முழுவதும் வர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதை படங்களில் காணலாம்.

(படங்கள்: புத்தளம் தினகரன் நிருபர்)

ஒன்லைன் ஊடாக கடன் வழங்கும்

## நிதி நிறுவனங்களுக்கு எதிராக இணையத்தில் போலிப் பிரசாரம் முன்னெடுப்பு

### 03 சமூக செயற்பாட்டாளர்களுக்கு நீதிமன்றில் ஆஜராக பணிப்பு

டிஜிட்டல் மற்றும் ஒன்லைன் ஊடாக கடன் வழங்கும் நிதி நிறுவனத்தை அவமதிக்கும் வகையில் தவறான மற்றும் சட்டவிரோத கருத்துக்களை இணையத்தில் வெளியிட்ட மூன்று சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

டிஜிட்டல் ஆல்டர்நேட்டிவ் லெண்டிங் அசோசியேஷன் (DALA) சங்கத்தில் உள்ள நிறுவனங்களால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு வெயங்கொடையைச் சேர்ந்த திவங்க சதுரங்க லக்ஷ்மன் எனப்படும் டுடு, கம்பளையைச் சேர்ந்த தரிந்த பண்டார திஸ்குமார மற்றும் மஹவையைச் சேர்ந்த நிலந்த குமார ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

டலா நிறுவனத்தைச் சேர்ந்த ஏ வி பிஸினஸ் சொலூசன் கேஷ் (A V Business Solutions CashX), ,பின்டெக் சொப்ட் வெயார் (Fintech Software Solutions Loanme),, செபர் சொலூசன் தனியார் நிறுவனம்லோடஸ் கடன் (Zephyr Solutions (Pvt) Ltd. Lotus Loan),ஒன்கிரடிட் (Oncredit) மற்றும் எஸ்.எப்.குரூப் (S F GroupFino.lk) என்பனவே இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளன.

பிரதிவாதிகளிடம் இருந்து 4250 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு அமுலில் உள்ள சட்டத்திற்கு அமைவாக ஒன்லைன் ஊடாக கடன் வழங்கும் மேற்படி நிறுவனங்களுக்கு எதிராக பேஸ்புக் மற்றும் சமூக ஊடகங்களில் பிரதிவாதிகள் பொய்யான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு பிரதிவாதியிடம் இருந்தும் தலா 500 மில்லியன் ரூபா வீதம் கோரப்பட்டுள்ளதோடு இது வரை மேற்கொண்ட சேதத்திற்காக 350 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது. சுதத் பெரேரா சட்ட நிறுவனத்தின் ஊடாக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுதாரர்கள் போலந்து, கசகஸ்தான், யுக்ரேன்,செக் குடியரசு,ரூமேனியா, ஸ்பெயின், மோல்டோவா,வியட்நாம், பிலிபீன்ஸ், கென்யா இந்தியா, மெக்சிகோ, நைஜீரியா, கொலம்பியா, மறறம் தென்ஆபிரிக்கா போன்ற நாடுகளிலும் செயற்பட்டு வருவதோடு சட்டரீதியாகச் செயற்படும் வர்த்தகத்திற்கு எதிராக சட்டவிரோதமாக திட்டமிட்டு பிரசாரம் மேற்கொள்ளும் பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்குமாறும் தொடர்ந்து செயற்பட பிரதிவாதிகளுக்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுவை ஆராய்ந்த அத்தனகல்ல மாவட்ட நீதவான் கேசர சமரதிவாகர, எதிர்வரும் 22 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2024 ஏப்ரல் 9 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் பங்குனி 27
ராகுகாலம் : மாலை : 3.06 - 4.36வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.06வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக கைதிகளின் சிறைப்படாத உழைப்பு

## நாட்டின் உற்பத்தித்துறைக்கு கைதிகளின் பங்களிப்பை பெறுவதற்கான ஒப்பந்தம்



சிறைக் கைதிகளின் உழைப்பைக் கொண்டு இலங்கையின் உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருட்களை சிறைவளாகத்திலும் உற்பத்தி நிறுவனங்களிலும் உற்பத்தி செய்யும் பாரிய வேலைத்திட்டத்தை இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளன.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன மற்றும் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் விளைவாக, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கும் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சிறைக் கைதிகளின் உழைப்பை நாட்டின் உற்பத்தித் தொழிலுக்குப் பெற்று, அவர்களை நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்கெடுக்கச் செய்யும் வேலைத் திட்டத்தில் கையெழுத்திடும் நிகழ்வு, நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சில் அண்மையில் நடைபெற்றது.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலைமையில், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ, கலாநிதி சாரங்க அழகப்பெரும மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது தேவையான உற்பத்தித் துறையில் தொழில்துறையினரின் பங்களிப்பை வழங்குவது, கைதிகளுக்கு பொருத்தமான பயிற்சிகளை வழங்குவது மற்றும் சிறைக் கைதிகளுக்கு தொழிலாளர்களை வழங்குவதற்காக நிறுவனங்களை ஒருங்கிணைக்கும்.

இந்தத் திட்டத்தின் மூலம், சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் தங்கள் நேரத்தை அர்த்தமுள்ளதாகச் செலவழிக்கவும், தொழில்முனைவோர் பயிற்சியுடன் உற்பத்திக்கு உழைப்பை வழங்கவும், வாழ்க்கைக்கு ஏற்ற ஊதியத்துடன் மதிப்பைப் பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கவும் தொழில் அமைச்சும் மற்றும் நீதி அமைச்சும் எதிர்பார்க்கின்றன.

இந்த நிகழ்ச்சித் திட்டம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைச்சாலைகள் ஆணையாளர் (நலன்) ஜகத் வீரசிங்க, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் ஐ.எம்.ஜே.இளங்ககோன், பிரதிப் பணிப்பாளர் அமர்நாத் விமலசிங்க ஆகியோரால் ஒருங்கிணைக்கப்பட்டது.

இந்த சிறைச்சாலை கைதிகளின் கைத்தொழில் திட்டத்தின் முதற்கட்டம் மஹர, வடரெக, குருவிட்ட, வீரவில, மீதிரிகல, பல்லன்சேன, பல்லேகலை, அனுராதபுரம், கந்தேவத்த, அகுனகொலபலஸ்ஸ மற்றும் பதுளை தல்தென ஆகிய 11 இடங்களில் இது ஆரம்பிக்கப்படவுள்ளது.




## ஸகாதுல் பித்ரை நிறைவேற்றுவோம்

ஸகாதுல் பித்ர் என்பது வசதியுள்ள அனைவர் மீதும் ரமழானில் கடமையாகும் ஒரு வணக்கமாகும். பெருநாள் தினத்தில் தன் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவு வசதியிருந்தால் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடில்லாமல் ஸகாதுல் பித்ரை கொடுப்பபது வாஜிபாகும். தன்னுடைய பராமரிப்பின் கீழுள்ள அனைவருக்குமாக ஸகாதுல் பித்ராவை நிறைவேற்றுவது, அவர்களின் பராமரிப்பாளர்கள் மீதுள்ள கடமையாகும். 'நீங்கள் உணவளித்து வரும் சிறியோர், பெரியோர், சுதந்திரம் பெற்றவர், அடிமை ஆகியோரின் ஸதகதுல் பித்ரை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள் என்று இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: அல் பைஹகீ)

இந்த நபி மொழி ஸகாத்துல் பித்ரை நிறைவேற்றுவது சகல முஸ்லிம்களின் மீது கடமை என்பதையும், அதனை நிறைவேற்றும் பொறுப்பு பராமரிப்பாளரின் மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

குறிப்பாக, வீண் பேச்சுக்கள் மற்றும் ஆபாச பேச்சுக்களை விட்டும் நோன்பாளியைத் தூய்மைப் படுத்துவதற்காகவும், ஏழைகளின் உணவுக்காகவும் 'ஸகாதுல் பித்ரை' ரஸூல் (ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள்.

மேலும் அதனைத் தொழுகைக்கு முன் யார் நிறைவேற்றுகின்றாரோ, அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸகாத்தாகும், எவர் அதனை தொழுகைக்குப் பின்னர் நிறைவேற்றுகின்றாரோ, அது ஏனைய தர்மங்களில் ஒரு தர்மமாகிவிடும்' என்று இப்னு அப்பாஸ் (ரழி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(ஆதாரம்: அபூதாவூத்) ஆகவே ஸகாத்துல் பித்ரை உரிய ஒழுங்கில் நிறைவேற்றி இயைருளைப் பெற்றுக்கொள்வோம்.

முஹம்மத் பகீஹுத்தீன்

# மோ. சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் பாதெனிய தலாவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர் தலாவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இசைக் கலைஞராவார். நேற்று (08) அநுராதபுரத்தில் இருந்து தலாவ பகுதிக்கு குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது தலாவ பகுதியில் குறித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதாக தலாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஐக்கிய ம.சக்தி 10 கூட்டணிகளை அமைத்தாலும் பிரச்சினை இல்லை

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச

லோரன்ஸ் செல்வநாயகம்



ஐக்கிய மக்கள் சக்தி ஒரு கூட்டணியை அல்ல பத்து கூட்டணிகளை அமைத்தாலும் தமது கட்சிக்கு அது தொடர்பில் எந்தவித பிரச்சினையும் சவாலும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவரிடம் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் அதுவும் எமக்கு பிரச்சினை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தற்போதைய உள்ளகப் பிரச்சினைகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள அவர், அந்த கட்சியின் உள்ளக பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ச எம்பி போட்டியிடுவதாக தெரிவிக்கப்படுகிறது என அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள அவர், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்சவுக்கு இன்னும் காலம் அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

# கெஹெலியவின் விளக்கமறியல் ஏப். 22 வரை மீண்டும் நீடிப்பு



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிர்வரும் ஏப்ரல் 22 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் சந்தேகநபர்கள் 07 பேரும் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (08) ஆஜர்படுத்தப்பட்டனர்.

06

# பண்டிகைக் காலத்தில் விசேட தபால் சேவை

தமிழ், சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகை ஆகிய நீண்ட வார விடுமுறை நாட்களை முன்னிட்டு நாடு முழுவதும் தபால் மூலமான பொருட்களை விநியோகிப்பதற்கான விசேட சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை தபால் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக தபால் மாஅதிபர் எஸ்.ஆர். டபிள்யூ எம்.ஆர்.பி சத்குமார விடுத்துள்ள அறிக்கையில், அரச பொது விடுமுறை நாளான ஏப்ரல் 12 ஆம் திகதி, நாடு முழுவதுமுள்ள தபால்/உப தபால் அலுவலகங்கள் மூலம் விசேட சேவை CashonDelivery, வெளிநாட்டுபொதிகள் சேவை மற்றும் பொது பார்சல் விநியோகத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# வருடாந்தம் நீரில் மூழ்கி 800 பேர் உயிரிழப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நீரில் மூழ்கி நாளாந்தம் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றா நோய், விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தலைவர் பொது மருத்துவ நிபுணர் சமித்த சிறிதுங்க அது தொடர்பில் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வருடமும் நீரில் மூழ்கி சுமார் 800 பேர் உயிரிழப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நாளாந்தம் இரண்டு அல்லது மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர். அந்த வகையில் எமது தகவல்களின்படி வருடாந்தம் 700 800 பேர் இவ்வாறு மரணமடைகின்றனர். பண்டிகைக் காலங்களின் போது இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அறிமுகமில்லாத இடங்களில் நீராடும் போது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவ்வாறான இடங்களில் நீராடுவதை தவிர்த்துக் கொள்வது நல்லது என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 29



## குறள் தரும் சிந்தனை

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்

இல்வாழ்க்கைக்கு தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால், ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை.

# பொருளாதார மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்

நாடு பிரதான தேர்தல்களை எதிர்நோக்கியுள்ளது. இவ்வருடம் பிரதான தேர்தல்கள் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

அதற்கேற்ப நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தலை இலக்காக வைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன, காய்களை நகர்த்துகின்றன. கட்சித் தாவல்களும் அணிதிரட்டல்களும் இடம்பெற்று வருகின்றன. தமது கட்சி பலமானது என்பதைக் காட்டிக் கொள்வதில் ஒவ்வொரு கட்சியும் சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளது.

ஆனால் கடந்த காலத்தைப் போன்ற ஒரு காலகட்டத்தில் தற்போது நாடு இல்லை. சுதந்திரம் பெற்ற பின்னர் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்த இந்நாடு, மிக முக்கியமான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் ஏற்பட்ட இப்பொருளாதார நெருக்கடி, நாட்டின் தலைமையையும் ஆட்சியையும் கூட மாற்றியமைக்க வித்திட்டது. அத்தோடு இந்நெருக்கடிக்கு முன்பாக நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுக்க எவரும் முன்வராத நிலையும் கூட தோற்றம் பெற்றிருந்தது. அவ்வாறான பொருளாதார நெருக்கடிக்கு முன்பாக மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி, நாட்டைப் பொருளாதார ரீதியில் மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் முன்னெடுக்கத் தொடங்கினார். அந்த வேலைத்திட்டங்கள் கட்சி அரசியல் நலன்களுக்கு முன்னுரிமை அளித்தவையானவை அல்ல. நாட்டின் நலன்களே அவ்வேலைத் திட்டங்களின் இலக்காக அமைந்திருக்கின்றது.

இதன் பயனாக அந்த வேலைத்திட்டங்கள் குறுகிய காலம் முதல் நாட்டுக்கும் மக்களுக்கும் பலனளிக்கத் தொடங்கின. அதனால் பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாடும் மக்களும் எதிர்கொண்ட நெருக்கடிகளும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின.

இந்தப் பின்புலத்தில் பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டங்கள் குறித்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் உருவாகின. அதற்கேற்ப இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதை இலக்காகக் கொண்டு பொருளாதார வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த சூழலில் தான் இந்நாடு பிரதான தேர்தல்களை எதிர்நோக்கியுள்ளன. என்றாலும் இச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்கள் தங்கள் நலன்களை முன்னிலைப்படுத்தி இத்தேர்தலை எதிர்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவ்வாறு கட்சி நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவதற்கான காலமல்ல இது.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இந்நாடு தற்போது நம்பிக்கை தரும் வகையில் மீட்சி பெற்று முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் பொருளாதார நெருக்கடியினால் அதலபாதாளத்தில் விழுந்திருந்த நாட்டை மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி மீளக் கட்டியெழுப்ப முன்வராத சில அரசியல் கட்சிகள், தம் கட்சியின் தேவைக்கு ஏற்ப நாட்டின் பொருளாதாரத்தை உருவாக்க முயற்சிக்கக் கூடாது. அதுதான் மக்களின் கருத்தாக உள்ளது.

இவ்வாறான சூழலில் அநுராதபுரம் மாவட்ட சட்டத்தரணிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'நாட்டின் தேவைக்கு ஏற்ப கட்சி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். கட்சியமைப்பின் விருப்பப்படி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அவ்வாறு செய்யப் போனதால்தான் கடந்த காலங்களில் பல சவால்களை நாடு எதிர்கொள்ளும் நிலைக்கு உள்ளானது. பாரம்பரிய அரசியலின் காரணமாகவே இந்த இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் கட்சிகளைப் பற்றிச் சிந்திக்காமல் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டிய காலமிது' என்று வலியுறுத்தியுள்ளார்.

அதுதான் உண்மை. பிரதான தேர்தல்களை எதிர்கொண்டுள்ள போதிலும் நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவது குறித்தே கட்சிகள் சிந்திக்க வேண்டும். அதற்கு ஏற்பவே கட்சி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

நாடு பொருளாதார ரீதியில் சிறப்பாக இருக்கும் போதுதான் மக்கள் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக்கொள்வார்கள். அதுவே கட்சி அரசியல் செய்வதற்கு ஏற்ற காலமாக இருக்கும். இதைவிடுத்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுள்ள போதிலும் அந்நெருக்கடியின் தாக்கங்கள் காணப்படும் போது பிரிந்து நின்று கட்சி அரசியலை முன்னெடுப்பதால் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மை ஏற்பட்டுவிடாது. அது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிப்பதாகக் கூட அமைந்து விடலாம்.

ஆகவே நாட்டின் மீது உண்மையான பற்றுக் கொண்டவர்களாக செயற்பட வேண்டியது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# முஸ்லிம்களின் ஜனாஸா மதநம்பிக்கையின் அடிப்படையில் நல்லடக்கம் செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## கண்டி, கட்டுக்கலை ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் ஜனாதிபதி









முஸ்லிம்களது ஜனாஸாக்களை அவர்களது மதநம்பிக்கையின் பிரகாரம் நல்லடக்கம் செய்வதை உறுதி செய்வதற்கு புதிய குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"எந்த மதமாக, எந்த இனமாக இருந்தாலும் எந்த ஒரு நபரின் இறுதிச் சடங்கையும் அவரது இறுதி விருப்பத்திற்கு அமைய மேற்கொள்ள இடமளிப்பது தொடர்பிலும் இந்தக் குழு ஆராயும்" என்று தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் இவை தொடர்பான சட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

கண்டி, கட்டுக்கலை ஜும்மா பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் (07) நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது: "கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் ரமழான் நோன்பைக் கூட சரியாக நோற்க முடியவில்லை.

கடந்த வருடம் முதல் பொருளாதாரம் மேம்பட்டு வருவதால், இன்று வழக்கம் போல் ரமழான் நோன்பு காலத்தை கழிக்கவும், ரமழான் நோன்பை நோற்கவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ரமழானின் போது முஸ்லிம் சமூகம் சிறப்பாக நோன்பை நோற்று நற்பண்புகளை வளர்த்துக் கொள்கின்றது. ரமழான் பண்டிகையும் சிங்களப் புத்தாண்டும் ஒரே சமயத்தில் கொண்டாடப்பட இருக்கின்றன. இன, மத பேதமின்றி செயற்படக்கூடிய கலாசாரம் வரலாற்றில் இருந்து இந்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது கல்வி அமைச்சின் கீழ் பிரிவெனா கல்வி முறைப்படுத்தப்படுவது போன்று மத்ரஸா பாடசாலைக் கல்வியையும் கல்வி அமைச்சின் கீழ் மேற்பார்வை செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இஸ்லாமிய புத்தகங்களை தருவிப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள தடைகளை கண்டறிந்து அவற்றை நீக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த கொரோனா தொற்றின் போது, முஸ்லிம் சமூகம் தங்களின் இறுதிச் சடங்குகளை முறையாகச் செய்ய முடியாமல் மிகவும் வேதனையான சூழ்நிலையைச் சந்தித்தது. அந்த நிலையை எதிர்காலத்தில் மாற்றியமைக்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

மதரீதியாகவோ அல்லது இறுதி உயில் மூலமாகவோ யாரேனும் தங்கள் விருப்பப்படி இறுதிச் சடங்குகளைச் செய்யக்கூடிய சட்டங்கள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். அடக்கம் அல்லது தகனம் செய்ய அனைவருக்கும் உரிமை உண்டு. அவரவர் விருப்பப்படி செயற்படத் தேவையான விதிகளை நாங்கள் தயார் செய்வோம்.

இலங்கை முஸ்லிம்கள் இன்று ரமழான் நோன்பை அனுஷ்டிக்கின்ற போதும் காஸா பகுதியில் மிகவும் சோகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகம் சுமார் முப்பத்தையாயிரம் உயிர்களை இழந்துள்ளது. அதனால்தான் இந்த ஆண்டு தேசிய இப்தார் நிகழ்வை நடத்தாதிருக்க முடிவு செய்யப்பட்டதோடு, அந்தப் பணத்தை காஸா முஸ்லிம் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் காஸா பகுதியில் பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதாகவும் உறுதியளித்துள்ளோம். பலஸ்தீன அரசை கலைப்பதை நாங்கள் ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம். எனவே, இந்தப் போரை நிறுத்துவதற்கு எமது ஆதரவை வழங்குகிறோம்".

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

காத்தான்குடி பள்ளிவாசலினால் 10 மில்லியன் ரூபாவும், கட்டுக்கலை ஜும்மா பள்ளிவாசலினால் 2.2 மில்லியன் ரூபாவும், முஸ்லிம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களினால் 3.5 மில்லியன் ரூபாவும் காஸா முஸ்லிம் சமூகத்திற்கு வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

கண்டி, கட்டுக்கலை ஜும்மா பள்ளிவாசல் பிரதம மௌலவி சையித் மௌலானா, அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்த, அனுராத ஜயரத்ன, திலும் அமுனுகம, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# உம்ரா, ஹஜ் யாத்திரிகருக்காக நவீன வசதிகளுடன் மக்கா, மதீனா விஸ்தரிப்பு

காணக்கண் கோடி வேண்டும் கஃபாவை,
ஹஜ்ஜுக் காட்சிக்கிணையாக உலகில் எதுவுமேயில்லை,
தீனோர்கள் கூடுமிடம், திருநபிகள் பிறந்த இடம்,
வானோர்கள் வாழ்த்தி நிற்கும் வல்லோனின் புனித இடம்,
எம் அனைவருக்கும் வாழ்வில் ஒருமுறையாவது
இப்புனித இடத்தைத் தரிசிக்கும் அரிய பேற்றினை வல்ல அல்லாஹ் நல்கிட வேண்டும்'

நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் முதன்முதலில் கஃபாவின் கட்டுமானப் பணியைப் பூர்த்தி செய்துவிட்டு இவ்வாறு பிரார்த்தித்தார்கள்.

என் றப்பே! இந்த மக்கா நகரத்தை மனிதர்களுக்கு அபயமளிக்கும் இடமாக ஆக்குவாயாக. அவ்வூர் மக்கள் உனக்கு நன்றிசெலுத்தும் பொருட்டு உணவு, கனிவர்க்கங்களை அவர்களுக்கு நல்குவாயாக. (அல் குர்ஆன் 2:122).

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், மஸ்ஜிதுல் ஹராமில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஏனைய மஸ்ஜித்களில் நிறைவேற்றப்படும் தொழுகையைவிட ஒரு இலட்சம் மடங்கு அதிக நன்மை தரக்கூடியதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இவ்வாறு மகத்துவமும் சிறப்பும் பெற்று விளங்கும் கஃபா, மற்றும் ஹரம் ஷரீப்கள் நபி (ஸல்) அவர்களது காலத்திற்கு பிற்பட்ட காலம் முதல் கட்டம் கட்டாக விஸ்தரிக்கப்பட்டும் அபிவிருத்தி செய்யப்பட்டும் வருகின்றன. அந்த வகையில் கடந்த 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட இரு ஹரம் ஷரீப்களினதும் சமகால விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் எதிர்வரும் 2030 ஆம் ஆண்டில் நிறைவடையவிருக்கின்றன.



சவூதி அரேபியாவின் 'விஷன் 2030 இல் என்ற தன்னிறைவை நோக்கிய தூரநோக்கு' என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் கீழ் அதிசயிக்கத்தக்க வகையில் மக்கா, மதீனா ஹரம் இரண்டினதும் விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் முக்கியமானவையாகும். இவ்விஸ்தரிப்புக்குப் பின்னரான முழுமைபெற்ற ஹரம் ஷரீபின் ஆச்சரியப்படத்தக்க தோற்றத்தைக் கண்டுகளிக்கும் பாக்கியத்தை 2030 இல் ஹஜ்உம்ரா செல்லவிருக்கும் யாத்திரிகர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

சவூதி அரேபியாவின் மன்னர் மலிக் சல்மானினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்திட்டம் கடந்த 7 வருடங்களாக அரசின் மிக முக்கிய குறிக்கோளாக கருதப்பட்டு துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதுபற்றி மன்னர் குறிப்பிடுகையில், 'உலகின் பல பாகங்களிலிருந்தும் ஹஜ், உம்ராவுக்காக வரும் பல இலட்சம் யாத்திரிகர்கள் மக்கா மதீனாவில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அவர்கள் எவ்வித அசௌகரியங்களுக்கும் முகம்கொடுக்காது பூரண திருப்தியுடன் தமது கிரியைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நவீன தரத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதே எமது அரசின் தலையாய கடமையாகும், ஏனெனில் இரு ஹரம்களும் எமது நாட்டின் சொத்து மட்டுமல்ல. அவை உலக முஸ்லிம்கள் அனைவரினதும் சொத்தாகும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நவீன விஸ்தரிப்பு திட்டத்தின்படி 750,000 சதுரமீட்டர் பரப்பளவு மஸ்ஜிதுல் ஹராத்தைச் சூழவுள்ள நிலப்பரப்பு ஹரம் ஷரீபுக்குள் உள்வாங்கப்படவுள்ளது. இதனால் ஹரத்தைப் சுற்றியுள்ள காலிதிப்னு வலீத் வீதி, அபூஸுப்யான் வீதி, ஸூபைர் வீதி, ஜபல் ஹிந்தி, ஜபல் கஃபா மற்றும் பல்வேறு வீதிகளும் மூடப்பட்டு அப்பகுதியிலுள்ள கட்டடங்களும் அகற்றப்பட்டு விட்டன.

இதன்படி மஸ்ஜித்துக்குள்ளேயே யாத்திரியர்களுக்கான வைத்திய சாலை, முதலுதவி மையங்கள், அவசர சிகிச்சை மையங்கள், பொலிஸ் நிலையம், பாதுகாப்பு மையம், வழிகாட்டல் மையங்கள், பொருட்களை பாதுகாக்கும் பெட்டக மையங்கள், விசேஷட தேவையுடையோருக்கான உதவி நிலையங்கள், தானியங்கி வண்டிகள் மற்றும் பல சிறப்பம்சங்கள் உள்ளடக்கப்படுவதோடு மஸ்ஜிதைச் சூழவுள்ள 79 வாயில்கதவு தொகுதிகளும் தானியங்கி கதவுகளாக மாற்றப்படவுள்ளன.

ஏ.ஜீ.எம். ஜலீல் மதனி
விரிவுரையாளர், பகுதித் தலைவர்
மஃஹத் ஸுன்னா அறபுக் கல்லூரி
காத்தான்குடி

# இஸ்ரேலின் திட்டத்தை வெளிப்படுத்தும் ஈரான் துணைத்தூதரகம் மீதான தாக்குதல்!

ஈரான் இராணுவ தலைமையை அழிப்பதில், அமெரிக்கா இஸ்ரேல் இணைந்து கங்கணம் கட்டியுள்ளமையை சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில், ஈரான் துணை தூதரகத்தை முற்றாக அழித்த இஸ்ரேலின் தாக்குதல் மேலும் உறுதிப்படுத்துகிறது.

1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சி, மேற்கு நாடுகளுக்கு சவால் விடும் வகையிலான ஒரு தலைமையை ஈரானில் அதிகாரத்திற்கு கொண்டு வந்தது. தொடர்ச்சியாக முஸ்லிம்களின் நிலத்தை இஸ்ரேல் ஆக்கிரமிக்கிறது என்பதும் ஈரானின் குற்றச்சாட்டு. ஈரானின் தலைவர்கள், இஸ்ரேலை அழிப்பது தொடர்பாக தொடர்ந்து பேசி வருகின்றனர். இஸ்ரேல் இருப்பதை ஈரானால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஈரான் தன்னிடம் அணு ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது என்றும் இஸ்ரேல் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இஸ்ரேலும் ஈரானை ஒரு அச்சுறுத்தலாகவே எப்போதும் பார்க்கிறது.

இஸ்ரேலும் எந்த வகையிலும் ஈரான் நாட்டின் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளவில்லை என்றாலும், இரு நாட்டினரிடமும் இந்த பதற்றமும் மோதல் போக்கும் தொடர்ந்து இருந்து வருகிறது. இஸ்ரேலும் நேரடியாக புவியியல் ரீதியாக ஈரானுடன் இணைக்கப்படவில்லை என்றாலும், இஸ்ரேலுடன் எல்லையை பகிர்ந்துள்ள லெபனான், சிரியா, பாலஸ்தீனம் உள்ளிட்ட நாடுகளுக்கு ஈரானின் தாராளமான ஆதரவு இருக்கிறது.

கடந்த வாரம் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஈரான் துணைத் தூதரகம் முற்றாக அழிக்கப்பட்டது. இஸ்ரேலால் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும், இத்தாக்குதல் குறித்து இஸ்ரேல் இதுவரை பதிலளிக்கவில்லை. இத்தாக்குதலில் ஈரான் படையின் மூத்த அதிகாரிகள் இருவர் உட்பட 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.



ஈரான் துணைத் தூதரகத்தை முற்றாக அழித்த இஸ்ரேலின் நடவடிக்கையினால், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் தீவிரமடையும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர். காசா பகுதியில் இயங்கி வரும் ஹமாஸ் போராளிகளுக்கும், லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லாவுக்கும் ஈரான் ஆதரவு வழங்கியதே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு ஈரானிய ஜெனரல்கள், 5 அதிகாரிகள் என 7 பேர் தங்களில் கொல்லப்பட்டதை ஈரானிய இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (IRGC) உறுதி செய்துள்ளது. ஜெனரல் அலி ரெசா ஜஹ்தி மற்றும் அவரது துணை முகமது ஹாடி ஹாஜி ரஹிமி ஆகியோர் கொல்லப்பட்டனர். 2016 வரை லெபனான் மற்றும் சிரியாவில் குத்ஸ் படைக்கு ஜஹ்தி தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரான் துணை இராணுவத்தின் சிறப்பு அதிரடிப் படைப் பிரிவு தளபதியாக இருந்தவர் காசிம் சுலைமானி. அந்த நாட்டில் மிகவும் செல்வாக்கு மிக்கவராக விளங்கிய அவர் ஈராக் சென்றிருந்தபோது, அவரைக் குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா 2020 ஜனவரி மாதம் தாக்குதல் நடத்தியது. இதில் சுலைமானி உள்பட 8 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், காசிம் சுலைமானியின் 4ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான கெர்மானில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடித்தன.

இந்தத் தாக்குதலில் 103 பேர் உயிரிழந்ததாகவும், 211 பேர் காயமடைந்ததாகவும், குண்டுவெடிப்பில் இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இரண்டாவது குண்டுவெடிப்பில் உயிரிழந்ததாகவும், முதல் குண்டுவெடிப்புக்குப் பிறகு அங்கு மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக அவர்கள் அங்கு குழுமியதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்காவும், இஸ்ரேலும்தான் காரணம் என்று ஈரான் குற்றஞ்சாட்டியது.

ஆயினும் இத்தாக்குதலுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் கூறியிருந்தன. முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் நேரடி உத்தரவின் பேரிலேயே 2020 ஜனவரியில் ஜெனரல் காசிம் சுலைமானி படுகொலை செய்யப்பட்டதாக பென்டகன் தெரிவித்தது.

ஈரானின் இஸ்லாமிய புரட்சி இராணுவத்தின் குத்ஸ் படைப் பிரிவு, வெளிநாடுகளில் ஈரானுக்கு ஆதரவான மறைமுகப் போரிலும், உளவுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறது. இந்த அமைப்பின் தலைவரான காசிம் சுலைமானி, மிகச்சிறப்பாக செயல்பட்டு ஈரான் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார்.

இத்தாக்குதல் பற்றி முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்கர்களைக் கொலை செய்தது மற்றும் ஏராளமானோர் காயமடைந்ததற்கு சுலைமானி காரணமாக இருந்தார் என்று குற்றம்சாட்டினார். பல ஆண்டுகளுக்கு முன்பே அவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் ட்ரம்ப் கூறினார்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

## “நான் உங்களை மன்னிப்பதுபோல் நீங்களும் பிறரை மன்னியுங்கள்"

# இறை இரக்கப் பெருவிழா



உயிர்ப்பு விழாவை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையைத் தமது இரக்கத்தின் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென இயேசு விரும்புகிறார்.

"அந்நாளில் எனது ஆழ்ந்த இரக்கத்தை அனைவரும் அடைவர். எனது இரக்கத்தின் ஊற்றை அண்டிவரும் ஆன்மாக்கள் மீது எனது அருட்பெருக்கை கடல்மடை போல் திறந்து விடுவேன். அந்நாளில் பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நற்கருணை பெறுவோர் தமது பாவங்களிலும் அவற்றுக்குரிய தண்டனை அனைத்திலிருந்தும் நீக்கம் பெறுவர்." என இயேசு தெரிவித்துள்ளார்.

உலகத்தின் தொடக்கம் முதலே இறைவன் மக்கள் மீது தாம் கொண்டுள்ள இரக்கத்தை வெளிப்படுத்தி வந்துள்ளார். பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகள் மூலமும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துநாதர் மூலமும் இறைவனின் இரக்கம் வெளிப்படுகின்றது.

ஆண்டவரை அன்புசெய்கிறவர்களுக்கு அவரது இரக்கம் தலைமுறை தலைமுறையாய் உள்ளதென்று தேவதாய் தமது கீதத்தில் கூறுகின்றார்.

சமீப காலத்தில் பாவிகளுக்குத் தமது நித்திய அன்பின் புதுத் தன்மைகளை அறிவித்து இறைஇரக்கத்தின் பக்தியை ஏற்படுத்த ஆண்டவர் பல அடியார்களுக்கு காட்சி தந்துள்ளார்.

இந்த பாக்கியத்தைப் பெற்றவர்கள் சகோதரி தெரேசாள்( இறப்பு 1897) சகோதரி பெனினா கோண்சொலாட்டா ( இறப்பு 1916) சகோதரி சோபிய மென்டஸ் ( இறப்பு 1923) சகோதரி மரிய பவுஸ்தீனா கோவல்ஸ்கா (இறப்பு 1938) சகோதரி பெத்ரோன் (இறப்பு 1946) ஆகியோராவர். இறை இரக்கத்தின் பக்தியைப் பரப்பும் பணி சகோதரி பவுஸ்தீனாவிடம் ஒப்டைக்கப்பட்டது.

இரக்கத்தின் அரசரான இயே சு இவருக்குப் பலமுறை காட்சி தந்தார். இக் காட்சிகள் 1930லிருந்து 1938 வரை நீடித்தன. இறை இரக்கத்தின் பக்தி குறித்து இயேசு அவருக்கு பல அறிவுரைகள் கூறினார். தமது வார்த்தைகளை பவுஸ்தீனாவின் கையேட்டில் எழுதிக்கொள்ளுமாறு பணித்தார்.

அவரது 600 பக்கங்களை கொண்ட நாட்குறிப்பிலிருந்தே இக் காட்சிகள் பற்றிய பல தகவல்களை அறியக் கூடியதாய் உள்ளது. ஏனெனில் தமது ஆன்ம குருவையும் மடத் தலைவியையும் தவிர வேறொருவருக்கும் அவர் காட்சிகள் பற்றிய செய்தியை அறிவிக்கவில்லை.

சகோதரி மரிய பவுஸ்தீனா சயரோக நோயால் பாதிக்கப்பட்டு மிகத் துன்புற்றார். தன்னுடைய துன்பங்களை பாவிகளுக்காக ஒப்புக்கொடுத்தார். தமது 33ஆம் வயதில் கிராக்கோ எனும் ஊரில் 1938 ஆம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் இறைவனடி சேர்ந்தார் 1993 ஏப்ரல் 18ஆம் திகதி திருத்தந்தை 2 ஆம் ஜோன் பவுல் முத்திப்பேறுபெற்றவரோக அறிவித்தார். பின்னர் 2000 ஆண்டு ஏப்ரல் 30 திகதி திருத்தைந்தை மரிய பவுஸ்தினாவை "புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா" வாக அறிவித்தார்.



கடவுள் எல்லாரையும் அன்புசெய்கிறார். நாம் எவ்வளவு பெரும் பாவியாக இருந்தாலும் அவரது அளவிடமுடியாத இரக்கத்தில் நம்பிக்கை வைத்து அவரை நாடி நம் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கோரும்போது கடவுளின் அளவிடமுடியாத இரக்கம் நம்மீது பாய்ந்தோடி வரும்.

“பாவியின் சீர்கேடு எவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவுக்கு இரக்கத்தை பெறும் உரிமையும் அதிகமாக உள்ளது. ஆழம் காண முடியாத எனது இரக்கத்தில் நம்பிக்கை வைக்க எல்லா ஆன்மாக்களுக்கும் அழைப்பு விடு, எனெனில் எல்லாரையும் மீட்க நான் விரும்புகிறேன். எல்லா ஆன்மாக்களுக்காகவும் சிலுவை மரத்தில் என் இதயம் ஈட்டியால் குத்தி திறக்கப்பட்டுள்ளது. எனது இரக்கத்தின் ஊற்று. நான் யாரையும் ஒதுக்கி விடுவதில்லை. என் இரக்கத்தை நீங்கள் பெற்றது போல் நீங்களும் பிறருடன் இரக்கத்தோடு நடந்துகொள்ளுங்கள்.

நான் மன்னிப்பதுபோல் பிறர் குற்றங்களை நீங்களும் மன்னியுங்கள். பாவத்தில் வீழ்ந்து கிடக்கும் ஆன்மாக்களை இரக்கமுள்ள என் இதயத்தருகே வரும்படி சொல். நான் அமைதியால் நிரப்புவேன். நம்பிக்கையோடு என் இரக்கத்தை நாடி என்னிடம் வருவோருக்கு மீட்பை அள்ளித்தருவேன்” என்றும் யேசு கூறியுள்ளார்.

**இறை இரக்கமுள்ள இயேசுவின் படம்:**

1931ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி சகோதரி பவுஸ்தீனாவிற்கு இயேசு காட்சி அளித்தபோது அவர் வெண்ணாடை அணிந்தவராகத் தோன்றினார். ஒருகரம் மார்பைத் தொட்டபடியும் மறுகரம் ஆசீரளிக்கும் பாவனையாகவும் இருந்தன. அவரது இதயத்திலிருந்து சிவப்பும் வெண்மையுமான இரு ஒளிக் கதிர்கள் வீசின. இந்த தோற்றத்தைப் படமாக வரையும் படியும் அதற்கடியில் "இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்" என்னும் சொற்களை எழுதும்படியும் இயேசு அவருக்குக் கூறினார்.

அந்த இரு ஒளிக்கதிர்களுக்கு விளக்கம் கேட்டபோது அவை தமது இதயத்திலிருந்து வெளிப்பட்ட இரத்தத்தையும் தண்ணீரையும் குறிக்கின்றன என்றும் வெண்கதிர் ஆன்மாவைத் தூய்மைப் படுத்தும் தண்ணீருக்கும், செங்கதிர் ஆன்மாவின் உயிரான அருளுக்கும் அடையாளமாக இருக்கின்றன என்றும் விளக்கிய இயேசு,

"இந்தக் கதிர்கள் எனது தந்தையின் கோபத்திலிருந்து ஆன்மாவைப் பாதுகாக்கின்றன. இதன் அடைக்கலத்தில் வாழ்பவன் பேறு பெற்றவன் ஏனெனில் இறைவனின் நீதிக்கரம் அவனை ஒருபோதும் தீண்டாது" என்று கூறினார்.

சகோதரி பவுஸ்தீனாவின் வர்ணனைக்கமைய ஒரு நல்ல ஓவியரைக் கொண்டு இப்படம் வரையப்பட்டது. இயேசு கேட்டுக்கொண்டபடியே அப்படம் கோவிலில் வணக்கத்துக்கு வைக்கப்பட்டது.

எல்.எஸ்




## புனித வெள்ளி- ஈஸ்டர் வழிபாடுகள்



கொழும்பு பொலஹேன்கொட திரு இருதய நாதர் ஆலயத்தில் பரிசுத்த வாரத்தின் புனித வெள்ளிக்கிழமை நடைபெற்ற சிலுவைப் பாதை வழிபாட்டு நிகழ்வுகள் மற்றும் ஆண்டவரின் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற உயிர்த்த ஆண்டவரின் திருச்சுரூப பவனி ஆகியவற்றையும் படங்களில் காணலாம்.

பட உதவி :திருமதி நந்தினி நிக்ஸன்

## சந்தேகத்தில் புதையுண்ட நாம் அத்தகைய கல்லறைகளிலிருந்து உயிர் பெறுவோம்

கனவுலகம் ஒன்று அன்று எருசலேமில் உருவாக்கப்பட்டிருந்தது. இயேசுவின் வழியை நம்பினோர் இணைந்து உருவாக்கிய சமுதாயம் எவ்வாறு இருந்தது என்பதை இந்த ஞாயிறு முதல் வாசகம் இவ்வாறு கூறுகிறது:

திருத்தூதர் பணிகள் 4:3235

அந்நாள்களில், நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை; எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. திருத்தூதர் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்து வந்தனர். அவர்கள் அனைவரும் மக்களின் நல்லெண்ணத்தை மிகுதியாகப் பெற்றிருந்தனர்.



தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. நிலபுலங்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று அந்தத் தொகையைக் கொண்டுவந்து திருத்தூதருடைய காலடியில் வைப்பர்; அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும். (திருத்தூதர் பணிகள் 4:3235)

இந்த வாசகம் கத்தோலிக்க உலகின் ஆலயங்கள் அனைத்திலும் இந்த ஞாயிறன்று ஒலித்தது. அதை கேட்கும்போது உள்ளம் மகிழ்வால் நிறைவடைகிறது. அதே நேரம் 'இப்படிப்பட்ட ஒரு சமுதாயம் இருந்திருக்க முடியுமா?' என்ற சந்தேகமும் எழுகிறது. மனித உள்ளம் மகிழ்வில் நிறையும்போதும், வேதனையில் வீழும்போதும், சந்தேகங்கள் எழுகின்றன. தங்கள் தலைவரும், போதகருமான இயேசு உயிர்த்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும், சீடர்களில் ஒருவரான தோமா அதை நம்ப மறுத்ததும், அவரது சந்தேகத்தைத் தீர்க்கும் வண்ணம் இயேசு தோமாவைச் சந்தித்ததும் இன்றைய நற்செய்தியாக (யோவான் 20:1931) வழங்கப்பட்டுள்ளது.

இயேசு கூறும் அழகியச் சொற்களை இன்றைய நற்செய்தியில் நாம் இவ்வாறு கேட்கிறோம்: "காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" (யோவான் 20:29)

சந்தேகமும், இரக்கமும் சந்திக்கும் ஞாயிறு இது. உயிர்ப்புப் பெருவிழாவுக்கு அடுத்த ஞாயிறை, 'இறை இரக்கத்தின்' ஞாயிறு என்று கொண்டாடுகிறோம். இறை இரக்கம் அல்லது இறைவனின் பேரன்பு என்ற கதிரவன் எழும்போது, சந்தேக மேகங்கள் கலைந்துவிடும் என்பதை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கிறது.

கிறிஸ்தவ மறையின் ஆணிவேராக விளங்குவது, இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு. இந்த மறையுண்மை இல்லையெனில், கிறிஸ்தவ மறை அர்த்தமில்லாமல் போய்விடும். (1 கொரிந்தியர் 15:14) நம் கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளமான உயிர்த்த கிறிஸ்துவை மீண்டும் ஒருமுறை இஞ்ஞாயிறன்று சந்தித்தோம்.



சென்ற வாரம், எரியும் மெழுகுதிரிகளை ஏந்தி, பாஸ்காப் புகழுரையைப் பாடி, இயேசுவின் உயிர்ப்பை அறிக்கையிட்டபோது, நமக்குள் ஒரு நிறைவும் மகிழ்வும் தோன்றியதை உணர்ந்தோம். உயிர்த்த இயேசு இன்று நமக்கு முன் தோன்றினால், உடனே அவர் திருவடி பணிந்து நம் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வெளியிட எவ்விதத் தயக்கமும் இருக்காது.

முதல் உயிர்ப்புத் திருவிழாவில் இத்தகைய மகிழ்வு, நிறைவு, உற்சாகம் இருந்ததாகத் தெரியவில்லை. அது ஒரு திருவிழாவாக இருந்ததா என்பதே சந்தேகம்தான். சந்தேகம்... உயிர்த்த இயேசுவைச் சீடர்கள் சந்தித்த நிகழ்வுகள் அனைத்திலும் அடிப்படையில் இழையோடிய ஓர் உணர்வு... சந்தேகம். இந்த நிகழ்வுகள் அனைத்தின் சிகரமாக இன்று நாம் நற்செய்தியில் காண்பது, சந்தேகம் கொண்டிருந்த தோமாவை இயேசு சந்தித்த அழகான நிகழ்ச்சி.

நம் வாழ்வை ஆட்டிப்படைக்கும் உணர்வுகளிலேயே அதிக ஆபத்தானது சந்தேகம்தான். சந்தேகம் ஒரு கூட்டு உணர்வு; பல உணர்வுகளின் பிறப்பிடம் அது. சந்தேகம் குடிகொள்ளும் மனதில் கூடவே பயம், கோபம், வருத்தம், நம்பிக்கையின்மை என்ற பல உணர்வுகள் கூட்டுக் குடித்தனம் செய்யும். தோமா இயேசுவின் உயிர்ப்பைச் சந்தேகப்பட்டார் என்று கேட்டதும், நம்மில் பலர், உடனே ஒரு நீதியிருக்கை மீது அமர்ந்து, "என்ன மனிதர் இவர்? இயேசுவோடு மூன்று ஆண்டுகள் நெருக்கமாய் பழகிவிட்டு, எப்படி இவரால் சந்தேகப்பட முடிந்தது?" என்ற கேள்வியை கேட்டு, "தோமா இப்படி நடந்து கொண்டது தவறு." என்ற தீர்ப்பையும் தந்துவிடுகிறோம். நீதியிருக்கைகளில் அமர்ந்து தீர்ப்பு எழுதுவது எளிது.

இயேசுவின் உயிர்ப்பைப்பற்றி தலைமுறை, தலைமுறையாய் ஆயிரமாயிரம் விளக்கங்களைக் கேட்டு வந்துள்ள கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் இன்று வாழும் நமக்கே அந்த உயிர்ப்பு குறித்த நம்பிக்கையில் அவ்வப்போது தடுமாற்றம் ஏற்படுகிறது. அப்படியிருக்க, உயிர்ப்பு பற்றிய எண்ணங்களில் தெளிவில்லாத யூத சமுதாயத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன் பிறந்து வளர்ந்த சீடர்களில் ஒருவர் இயேசுவின் உயிர்ப்பைச் சந்தேகித்தார் என்பதற்காக அவரைக் கண்டனம் செய்வது தவறு. தீர்ப்பிடுவதும் தவறு.

கல்வாரியில் இயேசு இறந்ததை நீங்களோ, நானோ நேரடியாகப் பார்த்திருந்தால், ஒரு வேளை தோமாவை விட இன்னும் அதிகமாய் மனம் உடைந்து போயிருப்போம். அந்த கல்வாரி பயங்கரத்திற்குப் பின் ஒன்றுமே இல்லை என்ற முடிவுக்கும் வந்திருப்போம். ஆகவே, தீர்ப்புகளை வழங்க நாம் அமர்ந்திருக்கும் நீதி இருக்கைகளிலிருந்து முதலில் எழுந்து வருவோம். குற்றவாளிக் கூண்டில் நாம் நிறுத்தியுள்ள தோமாவின் நிலையில் நம்மை நிறுத்தி, இந்த நிகழ்வைச் சிந்திப்போம்.

எல்லா சீடர்களுமே சந்தேகத்தில், பயத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். அவர்களது பயம், சந்தேகம் எல்லாவற்றிற்கும் காரணம் இருந்தது. அதையும் புரிந்து கொள்ள முயல்வோம்.தங்கள் குடும்பங்களையும், மீன் பிடிக்கும் தொழிலையும் விட்டுவிட்டு இயேசுவை நம்பி மூன்றாண்டுகள் வாழ்ந்தவர்கள் இந்தச் சீடர்கள். இந்த மூன்று ஆண்டுகளில் இயேசுதான் அவர்களது உலகம் என்ற நிலை உருவாகியிருந்த நேரத்தில், அந்த உலகம், ஆணி வேரோடு வெட்டப்பட்டு சிலுவையில் தொங்கவிடப்பட்டது.

அருட்பணி எல்.எக்ஸ்.ஜெரோம்

மிகுதி அடுத்த வாரம்...

நெடுஞ்சாலை வலையமைப்பின் மூலம்

# இலாபம் ரூ.05 பில்.ஆக இருப்பினும் நிலுவைக் கடன் ரூ 800 பில்லியன்

## இதனாலேயே 'சஹஸ்யா' நிறுவனத்திடம் ஒப்படைப்பு



நெடுஞ்சாலைகளினூடாக வருடாந்த இலாபம் 05 பில்லியன் ரூபாவாக இருக்கின்ற போதும் நிலுவையிலுள்ள கடன்கள் 800 பில்லியன் ரூபாவாக உள்ளது.

எனவே தான் இந்தக் கடனை அடைப்பதற்காக நெடுஞ்சாலை கட்டமைப்பு மற்றும் அதன் சொத்துகள் அனைத்தும்100 வீதம் அரசுக்குச் சொந்தமான சஹஸ்யா இன்வெஸ்மன்ட் முதலீட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுவதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் திறைசேரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடும் போதே அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் நெடுஞ்சாலை வலையமைப்பை நிர்வகிப்பதற்கு நிறுவப்பட்ட சஹஸ்யா முதலீட்டு நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையில் 28 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள சிரேஷ்ட பொறியியலாளரான கே. டபிள்யூ. கண்டம்பியிடம் இந்த நியமனம் தொடர்பான கடிதம் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, சஹஸ்யா முதலீட்டு நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாக போக்குவரத்து அமைச்சின் அனுபவமிக்க அதிகாரியான திருமதி பி. ஆர். பி. சுமங்கலி நியமிக்கப்பட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான நெடுஞ்சாலை வலையமைப்பும் அதன் சொத்துக்களும் எதிர்காலத்தில் சஹஸ்யா முதலீட்டு நிறுவனத்தின் கீழ் வைக்கப்படும்.

இதன்போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் திறைசேரிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

## ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில்...

புலமைப்பரிசில்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. அதன்படி மார்ச் மற்றும் ஏப்ரல் வரையிலான நிலுவைத் தொகையை 2024 மே முதல் வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது. அதன்படி, மார்ச் 2024 முதல் அமுலுக்கு வரும் வகையில் மாதாந்தம் 6,000 ரூபா வீதம் 24 தவணைகளுக்கு இந்த புலமைப்பரிசில் தொகை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல்கள் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.presidentsfund.gov.lk) அடுத்த சில நாட்களில் வெளியிடப்படும்.

மேலதிக விவரங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை (www.facebook com/president.fund) like/follow செய்யுமாறு ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது. தரம் 01 முதல் தரம் 11 வரை பொருளாதார சிரமங்களுக்குள்ளான ஒரு இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தற்போது முடிவடைந்துள்ளதுடன், புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றோரின் பட்டியல் எதிர்வரும் நாட்களில் வலய மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்துக்கு கிடைக்கவுள்ளது.

இந்தப் பட்டியல்களைப் பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் 3,000 ரூபாய் வீதம் 12 மாதங்கள் புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இந்தப் புலமைப்பரிசில் தொகையும் 2024 மே மாதம் முதல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## வரலாற்றில் மிக உயர்வான சமூக...

இதனைக் குறிப்பிட்டுள்ளார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ரஜித் கீர்த்தி தென்னகோன், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டு மக்கள் எதிர்நோக்கிய கடுமையான பொருளாதாரச் சிரமங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசாங்கம் தனது பொறுப்பாகக் கருதுகிறது.

சமுர்த்தி உதவி, சமுர்த்தி கடன், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, 100 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, அங்கவீனர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் அஸ்வெசும கொடுப்பனவு என 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 1,84,098.27 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் நிவாரண உதவித்தொகை தேவைப்படும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும மேல்முறையீடுகள் மற்றும் நிலுவைகள் உட்பட 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை சுமார் 1,89,650.95 மில்லியன் ரூபா (189.6 பில்லியன்) ஆகும். முதல் கட்டமாக நிவாரணம் பெறாதவர்களுக்கு 2024 பெப்ரவரியில் 1813 மில்லியன் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது.

இது தவிர அஸ்வெசும மேன்முறையீட்டு மனுக்களை பரிசீலித்த பின்னர் மேலும் 13,697.35 மில்லியன் ரூபா நிதி வறுமையில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமுர்த்தி கடனாக வழங்கப்பட்ட தொகையுடன், 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை ரூ. 1,99,608.62 மில்லியன் அதாவது சுமார் 200 பில்லியன் ரூபா. 2022 ஜூலை மாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர், டிசம்பர் 2023 வரை (17 மாதங்களுக்குள்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 129.93 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது, இதில் சமுர்த்தி கொடுப்பனவாக 65.91 பில்லியன் ரூபா ஏழைகளுக்கு வறுமையில் உள்ள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவுகளுக்கு (பிறப்பு, திருமணம், இறப்பு, நோய்கள், புலமைப்பரிசில்கள், இரட்டைப் பிறப்புகள்) வழங்கப்படும் தொகை 4.52 பில்லியன் ரூபாவாகும். இது தவிர சமுர்த்தி வங்கி இதே காலப்பகுதியில் 59.5 பில்லியன் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில்...

மருந்தான 'றிடொக்ஸ்டெஜ்' ஆகிய மருந்துகள் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தவர்கள் அல்லது இன்றுவரை நோயாளிகளாக உள்ளவர்கள் தொடர்பில் அறிக்கையொன்றை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்துக்கு வழங்குமாறும் அதேவேளை, எதிர்வரும் வழக்கு தினத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்படி அந்த அறிக்கை தொடர்பான விசாரணையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்தினார். இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபரான அயுசுலேற் பயோடெக் பார்மா நிறுவனத்தின் உரிமையாளரான சுகத் ஜானக்க பெர்னாண்டோ மூலம் டெண்டர் முறைமையின் பின்னர் மருத்துவ விநியோகப் பிரிவுக்கு பெற்றுக் கொடுத்துள்ள மேற்படி மூன்று ஊசி மருந்துகளும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டதா? அவ்வாறானால் அந்த மருந்துகள் எந்தெந்த வார்ட்டுகளுக்கு அனுப்பப்பட்டன? அந்த மருந்துகளை வழங்கிய பின்னர் ஏதாவது கடும் நோய் அல்லது அந்த நோயாளிகளில் மாற்றங்கள் ஏற்பட்டதா என்றும் அத்துடன் நோயாளிகள் மரணமடைந்துள்ளார்களா என்றும் அதேவேளை இன்றும் எவரும் நோயாளிகளாக காணப்படுகின்றனரா? அவ்வாறானால் அந்த நோயின் ரகம் என்ன? அதுதொடர்பிலான விசேட தன்மையென்ன? மரணமடைந்தவர்கள் இருப்பார்களாயின் அவர்களது மரண விசாரணை அறிக் கை மற்றும் நோயாளியின் தொலைபேசி இலக்கம், முகவரியுடன் முழுமையான அவரது விபரங்கள் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்திற்கு வழங்கப்படவேண்டுமெனவும் சுகதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அது வழங்கப்பட்டுள்ளதா என்றும் பிரதிசொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

## SLFP யிலிலிருந்து மூவரை நீக்கும்...

திஸாநாயக்க ஆகியோரை நீக்குவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக மூவரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றைய தினம் கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் பிரதிவாதிகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பதில் பொதுச் செயலாளர் சரதி துஷ்மந்த மித்திரபால உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நியாயமான ஒழுக்காற்று விசாரணையின்றி தம்மை கட்சியில் இருந்து நீக்குவதற்கு கட்சி செயற்குழு எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனவும் அதனை செல்லுபடியற்றது என என அறிவிக்க வேண்டும் எனவும் கோரியே சம்பந்தப்பட்ட மூவரும் மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். அதன் போதே இடைக்கால தடையுத்தரவை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்கும் வகையில் நீதிமன்றம் உத்தரப்பட்டுள்ளது.

## தமிழ்க் கட்சிகளுடன்...

பேச்சாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு கூட்டம் கடந்த 06ஆம் திகதி வவுனியா தனியார் விடுதியில் நடைபெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் குழுக்களை அமைக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். 08 மாவட்டங்களுக்குமான குழுக்கள் இந்த மாத இறுதியில் அமைக்கப்படும்.

இதன் பின்னர் அனைத்து மாவட்ட குழுக்களையும் ஒன்று கூட்டி கூட்டமொன்றினை வவுனியாவில் மே மாதம் 25 ஆம் திகதி நடத்தவுள்ளோம்.

இதனூடாக கிராம மட்டத்தில் எமது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை கொண்டு செல்லும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் தொடர்பாக நாம் கொள்கை ரீதியில் முடிவெடுத்துள்ளமை தொடர்பிலும் ஏனையவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். தற்போது இவ்விடயம் இங்கும் புலம்பெயர் தேசத்திலும் பேசுபொருளாக மாற்றப்பட்டுள்ளது. சில சிவில் அமைப்புக்களும் இதனை முன்னெடுத்து செல்லும் பணியை செய்கின்றனர்.

இந்த வகையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியானது தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளுடன் பேசவுள்ளோம்.

அத்துடன் தமிழ் தேசிய பரப்பில் உள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் முக்கிய அமைப்புக்களுடனும் கலந்துரையாடவுள்ளோம்.

அதற்காக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் உள்ள அணியொன்று செயற்படும். இவர்கள் தமிழரசுக்கட்சி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் பேச விரும்பும் கட்சிகளுடனும் கலந்துரையாடுவோம்.

தற்போது இலங்கையில் பொருளாதார பிரச்சினை மாத்திரம் மட்டுமே உள்ளது. இனப்பிரச்சினை இல்லாதது போன்றதும் அது முடிந்து விட்டது போன்றதுமாக சொல்லப்படுகின்றது. ஆனால் இலங்கையில் பொருளாதார பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தீர்க்கப்பட்டால் தான் அது சாத்தியம் என்ற விடயம் இருக்கின்றது.

அதனை சரியாக செயற்படுத்துவதற்கு நாம் இந்த ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்த வேண்டும். எனவே இந்த மாத இறுதிக்கிடையில் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் கலந்துரையாடுவோம் எனத் தெரிவித்தார்.

## மைத்திரி கட்சியையும்...

அளித்துள்ளார் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். அவரால் இழைக்கப்பட்ட தவறுகளையே தற்போது நாம் நிவர்த்தி செய்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளக ரீதியில் பல்வேறு நெருக்கடிகள் நிலவும் நிலையில் நேற்று அந்தக் கட்சியின் செயற்குழு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கூடியது.

அந்த நிகழ்வுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார்நாயக்க குமாரதுங்க வருகை தந்ததுடன் அவரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

2015 ஆம் ஆண்டில் என்னை ஜனாதிபதி தேர்தலில் நிற்கச் சொன்ன போது நான் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக நிறுத்த நடவடிக்கை எடுத்தேன். அவர் பதவியை வைத்துக்கொண்டு

கட்சியை மட்டுமன்றி நாட்டையும் அழித்துவிட்டார்.

கேள்வி: வீழ்ச்சியடைந்த கட்சியை மீண்டும் கட்டி எழுப்ப முடியுமா?

பதில்; நிச்சயமாக பலமானதாக கட்டியெழுப்ப முடியும்.

கேள்வி: அவ்வாறு நீங்கள் செயற்பட அவர் அனுமதிப்பாரா? கட்சியின் யாப்பு பலமானதா?

பதில்: கட்சியின் யாப்பை அவர் மாற்றி யுள்ளார். அதை வைத்து தன்னிச்சையாக செய்யப்பட்டுள்ளார். எனினும் அதனை தாம் மாற்றவில்லை என அவர் தெரிவித்துள்ளார். அவருக்கு மனநிலை பாதிப்பு என்று நினைக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

## பொலிஸ் துப்பாக்கி சூடு...

சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இலங்கை விமானப்படை வீரரென அடையாளம் காணப்பட்டுள்ளார். ஹொரணை தல்கஹவில பகுதியில் இவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (07) மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவரை கொலை செய்தவரென சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இது குறித்து இலங்கை விமானப்படையின் ஊடகப் பணிப்பாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவிக்கையில், நேற்றுக் காலை பாதுக்கையிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிக்கருகில் விமானப்படையின் ரக்பி பகுதியில் கடமையில் இணைக்கப்பட்டிருந்த விமானப்படையின் கோப்ரல் தர வீரர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

## மூன்று மாதங்களில் 635,784...

மாதங்களில் 6,35,784 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அந்த வகையில் கடந்த மூன்று மாதங்களில் 1,02.5கோடி அமெரிக்கன் டொலர் நாட்டுக்கு வருமானமாக கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஒரு வருடத்தில் நாட்டிற்கு வருகை தந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இந்த வருடத்தில் பதிவாக வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 2018 ஆம் ஆண்டே இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் அந்த எண்ணிக்கை 23 இலட்சம் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், அதனை அண்மித்த எண்ணிக்கையானோர் இந்த வருடத்தில் நாட்டுக்கு வருகை தருவரென எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்கள்

(09.04.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கும். ஜாதக ரீதியாக கிரகங்கள் பலம் பெற்றிருப்பவர்களுக்கு வருமானங்கள் பெருகி மகிழ்ச்சி படுத்தும்.

**ரிஷபம் :** உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் அன்பை பெறுவீர்கள். ஒரு சிலருக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கலாம்.

**மிதுனம்:** உடல் நலக்குறைவு, கடன் தொல்லை ஏற்பட வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளிடம் எந்தவித சலுகையும் எதிர்பார்க்க முடியாது.

**கடகம்:** ஒரு சிலருக்கு விருப்பமில்லாத இடத்திற்கு மாறுதல் கிடைத்தாலும் அங்கேயும் உங்களின் தனித்தன்மையால் சிறந்த விளங்குவீர்கள்.

**சிம்மம்:** தொழில் செய்பவர்கள் வேகமான வளர்ச்சி காண்பார்கள். வியாபாரம் நன்கு விருத்தியாவதுடன் வாடிக்கையாளர்களிடமும் நன்மதிப்பு உண்டாகும்.

**கன்னி:** அன்றாட பணிகளை சிறப்பாக செய்து உயர் அதிகாரிகளின் ஆதரவை பெற்றாலே பதவி உயர்வு தானாக உங்களை வந்தடையும். தொழில் செய்பவர்கள் ஓய்வின்றி உழைத்தாலும் வருமானம் போதுமானதாக இருக்காது.

**துலாம்:** பல நன்மைகள் தேடி வரும். என்றாலும் அவற்றில் சிறு சிறு தடைகளும் இருக்கத்தான் செய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்து இருந்த பதவி உயர்வு, இடமாற்றம் கிடைத்து மகிழ்வர்.

**விருச்சிகம்:** தடைகள் பல தோன்றினாலும் அதற்கு இணையான சில சலுகைகளை பெறுவீர்கள். தொழில் செய்பவர்கள் முன்னேற்றமான நிலையை அடைவார்கள்.

**தனுசு:** மின்சாரம் நெருப்பில் பணியாற்றுவோர் எச்சரிக்கையாக செயல்படுங்கள். தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் மிகப்பெரிய முன்னேற்றத்தை காண்பார்கள்.

**மகரம்:** விரும்பிய இட மாற்றம், பதவி உயர்வு கிடைக்கலாம். தொழில் செய்பவர்கள் உழைப்புக்கேற்ற வருமானம் கிடைத்து மகிழ்வர். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**கும்பம்:** தடங்கல்கள் ஏற்பட்டாலும் அதற்கு இணையான நன்மைகளையும் சலுகைகளையும் பெறுவீர்கள். தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**மீனம்:** சொன்னபடியே நடந்து கொள்வது சிரமமாக இருக்கும். உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணிகள் தொடர்பாக எவ்வித நன்மைகளையும் எதிர்பார்க்க இயலாது.

## கெஹலியவின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

*முதலாம், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஐந்தாவது சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன், 10 ஆம் மற்றும் 11 ஆம் சந்தேக நபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பிணை வழங்குவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இதன்படி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 06 சந்தேக நபர்கள் எதிர்வரும் ஏப்ரல் 22 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தரமற்ற இம்யூனோகுளோபியூலின் மருந்தை இறக்குமதி செய்ததன் காரணமாகவே சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

## 1445: ஷவ்வால் தலைப்பிறையை...

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் அஷ்ஷெய்க் எம் ஐ ரிஸ்வி முப்தி, முஸ்லிம் சமய கலாச்சார திணைக்கள பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் மற்றும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாரிக் ரஸீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதுதவிர, கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா பிறைக்குழு உறுப்பினர்கள், மேமன் சங்க பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா ஷரிஆ கவுன்சில் பிரதிநிதிகள், பள்ளிவாசல் கதீப்மார்கள், பேஷ் இமாம்கள், நிர்வாகிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிறை தென்பட்டால் பூரண ஆதாரத்துடன் 0112432110, 0112451245, 0777353789 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்கலாம்.

## கொம்பனித்தெரு இரட்டை மேம்பாலம்...

உள்ளது. மேலும் இந்த முழுமையான திட்டத்துக்கு 5,278,081,272.43 ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், உணவகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைக் கொண்ட மிகவும் பரபரப்பான வர்த்தக நகரமான கொம்பனித்தெரு பிரதேசத்தில் அமைந்துள்ள புகையிரத கடவையின் காரணமாக நாளாந்தம் 03 மணித்தியாலங்கள் விரயமாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மாகா பொறியியல் (Maga Engineering) நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ. ஆர்.பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சமிந்த அதலுவகே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தினகரன் 92ஆவது பிறந்த தின நிகழ்வில் சமூகப் பணியாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்

## விசேட விருது வழங்கி கௌரவிப்பு



தினகரனின் 92 ஆவது பிறந்த தின நிகழ்வு லேக் ஹவுஸ் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. தினகரன் பத்திரிகையுடன் நெருங்கிப் பயணிக்கும் சமூகப் பணியாளர்களும், நீண்ட காலம் ஊடகத்துறையில் பணியாற்றிய ஊடகத்துறை சார்ந்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சபைத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் முன்னிலையில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது சமூகப் பணியாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் விசேட விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

அகில இலங்கை சமாதான நீதவான் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் மனித உரிமை நிறுவனத்தின் முன்னாள் கண்டி மாவட்ட அமைப்பாளர், செஞ்சிலுவை சங்கத்தின் ஆயுட் கால அங்கத்தவர், மாத்தளை காந்தி சபாவின் ஆயுட் கால அங்கத்தவர் மட்டுமல்ல மாத்தளை காந்தி சபாவின் நிதி நிர்வாக சபை உறுப்பினரும் கூட. இலக்கிய ஆர்வலர், சமூக செயற்பாட்டாளர் என பல் துறைகளில் தனது தடத்தை பதித்தவர்.

சுமார் அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக சமூகப் பணிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமைக்காக சில அரச விருதுகளையும் பாராட்டுக்களையும் தனதாக்கிக் கொண்டவர். 2014 இல் தெலுங்கு காங்கிரஸ் அமைப்பினால் தேசகீர்த்தி எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். 2016 இல் மனித உரிமை அமைப்பின் விருது. 2017 விவேகானந்த தமிழ் வித்தியாலயத்தின் சமூகச் சுடர் விருது. அவர் 2018 இல் நடைபெற்ற மலையக தமிழ் சாஹித்திய விழாவில் சமூக சேவைக்கான விருது. 2016 இல் மாத்தளை சுவாமி விபுலானந்தர் கலா மன்றத்தின் முத்தமிழ் விழா விருது. ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக இரத்தின தீப விருது வழங்கும் விழாக்களின் போது தொடர்ச்சியாக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

நா. வை. குமரிவேந்தன் (மகேந்திர ராசா) எழுதிய நூல்வெளியிட்டு விழாவின் சான்றோர்களுக்கான விருது, 2018 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் மாத்தளையில் நடத்தப்பட்ட தேசிய தமிழ் மொழி தின விழாவில் சமூக சேவைக்கான விருது என இன்னும் பல சமூக சேவைக்கென பல்வேறு உயர் சிறப்பு விருதுகளைப் பெற்றவர். தினகரனின் 90 ஆவது, 91 ஆவது, 92 ஆவது ஆகிய மூன்று பிறந்த நாட்களிலும் பாராட்டி கௌரவிக்கப்பட்டவர்.

கலாபூசணம் இரா. அ. இராமன் அவர்களினால் தொகுக்கப்பட்ட சிதம்பரநாதனின் 80ஆவது அகவை அமுத விழா சிறப்பு மலரும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வாழ்க்கையில் பல சவால்களுக்கும் மன அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்பட்டாலும் அதையும் தாண்டி ஒரு நல்ல மனிதனாக வாழ வேண்டும். அடுத்தவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான் தனது நோக்கம் என்று கூறும் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் தினகரன் பத்திரிகைகக்கு வழங்கிய செவ்வி.

**உங்கள் ஆரம்ப வாழ்க்கை பற்றி…?**

நான் புசல்லாவையில் பிறந்தேன். 1952, 1957 ஆம் ஆண்டு வரையிலும் ஹொலி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியினைப் படித்தேன். அதன் பின்னர் கம்பளை சாஹிராக் கல்லூரிக்குச் சென்றேன். அப்பொழுது அப்பாடசாலையின் அதிபராக கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் இருந்தார்கள். ஒரு விபரம் தெரியாத ஒரு காலப்பருவமாக இருந்த போதிலும் அவர் ஒரு கல்வி அமைச்சராக வருவார் என்று நான் அப்போழுது கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அவர் உரைகளையும் படத்தையும் பத்திரிகைகளில் பார்த்து அறிந்து கொள்வேன். அவரைக் காணாது விட்டாலும் எங்கள் அதிபர் தான் கல்வி அமைச்சராக இருக்கிறார் என்ற வகையில் மனதிற்குள் புளகாங்கிதம் அடைந்து கொள்வேன். அவர் பாடசாலையில் காலைக் கூட்டம் நடக்கும் போது அதிகம் ஆங்கிலத்தில் தான் உரையாற்றுவார். தமிழில் பேசுவது ரொம்பக் குறைவு. ஆனாலும் தமிழில் உடனுக்குடன் மொழி பெயர்த்து கூறுவார்கள்.

திடீர் திடீரென வகுப்பறைகளுக்கு வந்து செல்வார். இவரது அந்த வருகையானது மாணவர்களுக்கு மனத்திற்கு சற்று பயங்கலந்த மரியாதையாகவும் சந்தோசமாகவும் இருக்கும்.

அவருடைய நிர்வாக ஒழுங்கு ஒரு கட்டுக்கோப்பைக் கொண்டது. அவர் பெயரையும் பள்ளிக் கூடத்தின் பெயரையும் பாதுகாக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அவர் இன மத சமய வேறுபாடுகளின்றி எல்லா மாணவர்களுடனும் சரி சமனாகப் பழகுவார். அவரிடம் இயல்பாகவே சிங்கள, தமிழ், கிறிஸ்தவ சமய வேறுபாடுகளின்றி எல்லா மனிதர்களோடும் ஒருங்கிணைந்த உறவுப்பாலத்துடன் நெருங்கிப் பழகும் தன்மையை வெளிப்படையாகக் காணக் கூடியதாக இருந்தது. இன்று காணப்படும் வேறுபாடுகளெல்லாம் அன்று காண முடியாது. நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகவும் ஒன்றாகவும் தான் இருந்தோம்.

அதிபர் எங்களை கம்பளை நகரில் கண்டால் அடுத்த நாளே நேற்று ஏன் இந்த நேரத்தில் சுற்றித்திரிந்தா என கூப்பிட்டு கேட்பார். நாங்கள் அவரைக் கண்டால் ஓடி ஒழிந்து விடுவோம். இப்படியானதொரு கட்டுப்கோப்பான ஒழுங்கு விதிமுறைப் பேணி தம் அதிபர் கடமைகளைச் செய்தவர் தான் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள். இன்று இதை நான் ஞாபகப்படுத்தக் காரணம் இன்றுள்ள அதிபர்மார்கள் அவரிடமிருந்து நல்ல செய்திகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவேயாகும்.

எனது வகுப்பாசிரியராக நூன் என்பவர் இருந்தார். வகுப்பில் முஸ்லிம் மாணவர்கள் அதிகம். அவர்கள் தான் நண்பர்களாகவும் இருந்தார்கள். ஆனாலும் படிப்பிப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்மார்கள் தான் அதிகம்.

பள்ளிப் பருவம் என்பது ஆற்றல் மிகுந்த அழகிய பருவம். கள்ளம் கபடமில்லாத பருவம். மனதில் புதுமைகள் பூத்துக் குலுங்கும். அனுபவங்களால் ஏற்படும் அலுப்போ சலிப்போ, வெறுப்போ, விரக்தியோ ஏற்படாத பருவம். இப்பருவத்தை முஸ்லிம் மாணவர் சமூகத்தினரோடு சேர்ந்து பழகிய காலம் என்பது மனதின் உணர்வுகளைத் தட்டி எழுச்சியுறச் செய்த காலமென்பதை இன்றும் நான் மிகவும் உயர்வாக மதிக்கின்றேன்.

ஏனென்றால் என் தந்தை பிரித்தானிய இராணுவத்தில் வேலை செய்தவர். ஆதலால் அவருக்கு புசல்லாவைப் பிரதேசத்தில் நாய்களைப் பிடிக்கும் தொழில் வழங்கியிருந்தார்கள். நான் ஆரம்ப பிரிவில் கல்வி பயிலும் போது என்னை சக மாணவர்கள் அப்பெயரை வைத்து பட்டம் சூடி கிண்டலும் கேலியும் செய்வார்கள். அம்மாணவர்கள் அப்பாவை வைத்து கேலி செய்யும் போது எனக்கு பாடசாலைக்கு செல்லக் கூட மனம் வராது. பாடசாலை செல்லாமல் அதிகம் வீட்டிலேயே இருப்பேன். என்றாலும் வீட்டவர்களின் தெண்டிப்பால் மனதை சமாளித்துக் கொண்டு பாடசாலை சென்ற நாட்கள் தான் கூட.



குறிப்பாக நான் கம்பளை சாஹிரா கல்லூரியில் இரு வருடங்கள் தான் கற்றேன். ஆனாலும் தவறாமல் பாடசாலைக்கு உற்சாகத்துடன் செல்வேன். அன்பு, பாசம், மனித நேயம் என்பவையெல்லாம் நிறையப் படித்தேன். ஆனாலும் காலதேவன் சிறுவயதில் அம்மாவின் உயிரைப் பறித்துக் கொண்டான். நான் ஒரு வயதாக இருக்கும் போது உயிரிழந்து விட்டார். அம்மா பற்றி ஞாபகமே இல்லை. அம்மாவின் அக்காவின் அரவணைப்பிலேயே நான் வளர்ந்தேன். எனக்கு இரு அண்ணன்மார்கள். அவர்கள் இருவரும் தொழில் ரீதியாக குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். தந்தை வேறு திருமணம் செய்து கொண்டார். தொடர்ந்து படிக்க வசதியில்லை. எனக்கு வழிகாட்டக் கூடியவர்கள் யாரும் இருக்கவில்லை.



துரதிருஷ்டவசமாக என்னுடைய பள்ளிப் பருவத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது. பின்னர் நான் அப்பாவினால் ஒரு கடையில் கூலித் தொழிலுக்கு அமர்த்தப் பட்டேன். அத்தொழிலின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டே அத்தொழில் மூலம் உயர் நிலை அடைந்தேன்.

என்றாலும் வேலைக்கு அமர்த்தப்படுவது அவசியமா? அக்கால கட்டத்தில் தம் குடும்ப கஷ்டத்தை போக்குவதற்காக மிகவும் சாதாரணமான சம்பளம் கிடைத்தாலும் போதும் என்கிற நிலைப்பாடும் எத்தகைய தொழிலாக இருந்தாலும் சரி பரவாயில்லை என்ற மனப்பாங்குடன் கூலித் தொழிலுக்கும் அமர்த்தி விடப்படும் நிலைமை தமிழ் தோட்டப்புறங்களில் ஒரு பழக்கமாகவே இருந்து வருகிறது. அது இன்றும் இருக்கிறது.

இதுவே நமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வேலைக்கு அமர்த்தப்பட்ட பல தரப்பட்ட தோட்டப்புற பெண்கள் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு நிர்ப்பந்த ரீதியாக உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். பிழையாக வழிநடத்தப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் அறிவோம். இதனால் ஏற்படும் விளைவு விபரீதங்கள் வியப்புக்கள் எல்லாம் சமகாலங்களிலும் கேட்டறிந்து வருகின்றோம். இது ஒரு கவலையான செய்தியாகும்.

மலையக சமூகம் தனித்தன்மை பெற்ற சமூகம். நற்பண்பு கூறுகளைப் பெற்றுள்ளது. எனினும் மலையகம் சமூகம் இன்னும் பல சீர்திருத்தங்களுடன் கல்விக்கான முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி இளந்தலைமுறையினரின் நலன் கருதி முன்னோக்கி நகர வேண்டி இருக்கிறது. இதற்காக வர்த்தக சமூகம் நிறையப் பங்காற்ற வேண்டிய தேவை இருக்கிறது.



**நீங்கள் உழைப்பால் உயர்ந்தவர் என்ற வகையில் என்ன சமூகப் பங்களிப்பை முதன் முதலில் நல்கினீர்கள் என கூற முடியுமா?**

ஆமாம், மூன்று தசாப்த கால கொடிய யுத்தம் நடைபெற்ற கால கட்டத்தில் அரசாங்கப் படையினருக்கும் புலிப்படையினருக்குமிடையே யுத்தங்கள் நடக்கும் போது இரு தரப்பினர்களுக்கிடையே சமரசமாக நின்று மனிதாபினமான உதவிகளைச் செய்தவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர். போரினால் காயப்பட்டவர்களையும் உயிர் இழந்தவர்களையும் வைத்தியசாலையிலும் உறவினர்களிடம் ஒப்படைப்பதிலும் இரு தரப்பினர்களுக்கிடையே சமாதான முன்னெடுப்புக்களையும் கருத்துப் பரிமாறல்களையும் மேற்கொள்வதற்காக முழு மூச்சுடன் மிகவும் தியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர் என்பது பலராலும் அறிந்த, மறக்க முடியாத உண்மை. இந்தச் சங்கத்தின் நான் ஆயுட் கால அங்கத்தவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் செஞ்சிலுவை அமைப்பில் சிங்கள, தமிழ், முஸ்லிம் எனப் பல எண்ணிக்கையிலான தொண்டர்கள் பணிபுரிந்தார்கள். யுத்த பிரதேசங்களில் தம்முடைய உயிரையும் பொருட்படுத்தாது மிகவும் கஷ்டத்துடன் போர் நடக்கும் களங்களுக்குச் சென்று தொண்டாற்றினார்கள். அவர்களுக்கான சம்பளம் வழங்க உதவி செய்ய வேண்டுமென என்னிடம் கோரிக்கையொன்றை விடுத்தார்கள். அந்த வகையில் தினசரி ஆறு தொண்டு சேவையாளர்களுக்கு தொடர்ச்சியாக நான் உதவி செய்துள்ளேன். இது தான் நான் முதன் முதலில் செய்த மனிதாபிமான உதவியாகும்.



அடுத்து சுனாமி கால கட்டத்தில் அதிகளவிலான உதவிகள் செய்துள்ளேன். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 500 குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அம் மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகளையும் தற்காலிக இருப்பிட இடர் முகாம்கள் அமைப்பதற்கும் உலருணவுகள் என்று அடிப்படை வாழ்வாதார வசதிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தேன். இந்த உதவியினை பனை அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளின் கவனத்திற் கொண்டு வந்து இதனைப் பெற்றுக் கொடுத்தேன். இன்றைக்கும் அந்த வன்னிப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தேவையான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நான் வழங்கி வருகின்றேன்.

**நீங்கள் கண்டி வரக் காரணம் என்ன?**

1977 களில் நாங்கள் குடியிருந்த வீட்டின் மேல் பாரிய கல்லொன்று வந்து வீழ்ந்து வீடு சேதமுற்றது. பின்னர் அந்த அனர்த்தத்தோடு நாங்கள் குடும்பத்தோடு கண்டி வந்து விட்டோம். அன்று முதல் இன்று வரையிலும் கண்டியில் தான் வசித்து வருகின்றேன்.

கண்டி பென்சி ஹவுஸ் முதலாளி சீனி முஹமட் தான் என்னுடைய மிக நெருக்கமான நண்பர். அவர் இந்தியா கீழைக்கரையைச் சேர்ந்தவர். அவருடன் இந்தியவிலுள்ள கீழைகரைக்குக் கூட சென்று இருக்கின்றேன். அப்படி இருவருக்குமிடையே மிக நெருக்கமான உறவு இருந்து வந்தது.

**கண்டியில் நடைபெறும் எந்தவொரு கலை கலாசார நிகழ்வுகளாக இருந்தாலும் அதைப் புறக்கணிக்காமல் நீங்கள் கலந்து கொள்வதை நாங்கள் அவதானித்து வந்துள்ளோம். அந்த வகையில் உங்களுக்கு அந்த ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?**

அன்பு நடமாடும் கலைக்கூடமாகவே ஒவ்வொரு கலாசார நிகழ்வுகளும் எனக்கு அமைந்திருக்கும். கலை இலக்கியத்தை நேசிக்கின்ற ஒரு வட்டம் இருக்கிறது. அந் நிகழ்வுகளை நேரில் பார்த்து ரசித்து சுவைத்தால் மட்டுமே கலை இலக்கியத்தின் மகத்துவம் புரியும். மனதிற்கு ஆறுதலையும் தரும்.

நண்பர் இரா அ. இராமனின் நட்பு கலை இலக்கிய உலகில் பிரகாசிக்கும் எழுத்தாளர்களையும் கண்டியிலுள்ள பெரியதொரு கலை கலாசார சங்கத்தையும் அறிமுகம் செய்தன. கண்டி கலை கலாசார சங்கத்தின் ஸ்தாபக தலைவர் ராஜா ஜெய்கின்ஸ் தலைமையில் மாதத்திற்கு ஒரு தடவை கண்டி கெப்பிட்டிப் பொல மண்டத்தில் விழாக்கள் நடைபெறும்.

குறிப்பாக எம். ஜி. ஆர். ஞாபகார்த்த விழா, பாடகர் ஏ. எம். ராஜா, ஜிக்கி, காமினி பொன்சேகா, தென்னிந்திய பல நடிகர் நடிகர்களின் ஞாபகார்த்த நிகழ்வுகள் மற்றும் மகாத்மா காந்தி விருது, அறிஞர் சித்தி லெப்பை விருது, ஆறுமுகநாவலர் விருது என ஒவ்வொரு பெரியார்களது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு கண்டியில் பல விழாக்கள் தொடர்ந்து நடைபெறும்.

அந்நிகழ்வில் என்னையும் ஒரு முக்கிய பிரதிநிதியாக கலந்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்திருப்பார். அவருடைய அந்த கலை கலாசார முயற்சிகளுக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டுமெனக் கருதி நான் தவறாமல் கலந்துகொள்வேன். இந்த விழாக்களில் நான் கலந்து கொள்ளும் முக்கிய நோக்கம் எமது இளைய சமுதாயத்திற்கு எமது கலை கலாசாரத்தை மேலும் மேம்படுத்துவதற்கும். அதேவேளை ராஜா ஜெய்கின்ஸின் ஆக்கபூர்வமான முயற்சிக்காக கைகொடுத்து உதவவேண்டும் என்பதுமாகும்.

இந்த அமைப்பின் மூலம் இலைமறை காய்களாக உள்ள எழுத்தாளர்கள், பிரபல்யமான இலக்கியவாதிகள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் , சமூக சேவையாளர்கள், கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள் என சுமார் 2000 பேர் வரை பாராட்டி இரத்தின தீபம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கலாம் என நான் கருதுகின்றேன். இது விசேடமாக ஒரு சாதனை என்றே கூற வேண்டும். உண்மையிலேயே நடிகரும் கலைஞருமான ராஜா ஜெய்கின்ஸ் பாராட்டத் தக்க ஒருவர்.

அதே போன்று நண்பர் இராமன் மூலம் கண்டியில் முன்னெடுக்கும் கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு கைகொடுத்து உதவி வருகின்றேன். என்னையொரு சமூகச் செயற்பாட்டாளராக அடையாளப்படுத்தி அதிகளவு கௌரவப்படுத்தியவர் ராஜா ஜெய்கின்ஸ் அவர்களே ஆவார். இந்தச் சந்தர்ப்பத்தில் மனம் நிறைந்த நன்றிகளை அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வேறு என்ன சமூகப் பணிகள் செய்துள்ளீர்கள்?**

ஒவ்வொரு வருடமும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாதணிகள், பாடப் புத்தகங்கள், பாடசாலை பைகள், கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றேன். கொத்மலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு திருவள்ளுவர் சிலையொன்றை நிர்மாணித்து வழங்கியுள்ளேன். பாடசாலைகளின் வேண்டுகோளுக்கு இணங்க தண்ணீர் வசகள் ஏற்படுத்திக் கொடுத்தல் இப்படி அவர்களது தேவையைக் கருத்திற் கொண்டு உதவி செய்துள்ளேன்.

மாத்தளையில் இந்தியாவினால் மிகப் பிரமாண்டமான முறையில் காந்தி கேட்போர் மண்டபம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அதற்கு ஒரு பிரத்தியேகமான சிற்றுண்டிச் சாலை இருக்கவில்லை. அதற்கு சிற்றுண்டிச்சாலை அவசியமாக இருந்தது. காந்தி சபையினரின் வேண்டுகோளுக்கு இணங்க அதன் அங்கத்தவர் என்ற வகையில் அதன் நிர்மாணப் பணிக்காக உதவிகள் செய்துள்ளேன்.

கண்டி மாவட்ட மனித உரிமை அமைப்பின் அமைப்பாளராக நானும் நண்பர் சண்முகநாதன் அவர்களும் இணைந்து செயற்பட்டோம். கண்டி பேராதனை ஹோட்டலில் மனித உரிமை தொடர்பான கருத்தாடலும் பெரிய பாராட்டு நிகழ்வொன்றினையும் நடத்தினோம். இவை போன்ற பல சமூக இயக்க செயற்பாடுகளிலும் பங்கேற்று செயற்பட்டுள்ளேன்.

சமூக சேவை செயற்பாடானது மிக விசாலமானது. அதற்குள் யார் தூண்டலும் இல்லாமல் வெறும் உந்துதல் மூலம் தானாக ஈர்க்கப்பட்டவன் நான். யாராவது வந்து வாழ்வியல் அவலங்களையும் சோகங்களையும் துன்பங்களையும் சொல்லும்போது அவர்களுக்காக மனம் நெகிழ்ந்து ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற உத்வேகம் என்னைப் பீடித்துவிடும். யாருக்கும் தெரியாமல் குறித்த மனிதனைச் சந்தித்து அம்மனிதனின் தேவையை மறைமுகமான முறையில் நிறைவேற்றி வைப்பேன். இப்படி பல தரப்பட்ட தனிப்பட்ட சேவைகளை மனமுவந்து செய்து வருகின்றேன்.

**இக்பால் அலி**

# கிழக்கின் குரல்



## நல்லூர் பழங்குடியின மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆளுநர் விசேட கவனம்

### விசேட குழு நியமனம்

மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நல்லூரில் வாழும் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருகோணமலை அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் அண்மையில் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் தங்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை குறித்து கிழக்கு ஆளுநரிடம் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து நல்லூர் பிரதேசத்திற்கு விஜயம்





செய்த ஆளுநர் செந்தில் தொண்டமான், வெளி ஆக்கிரமிப்பாளர்களால் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவது குறித்து ஆராய்ந்ததுடன் பழங்குடியின மக்களையும் சந்தித்து கலந்துரையாடினார். இதன்பின்னர் அவர்களின் பிரச்சினைகளை ஆராயவும், பழங்குடியின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் உடனடியாக குழுவொன்றை நியமிக்குமாறு திருகோணமலை அரசாங்க அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

## மட்டக்களப்பில் ஆரோக்கிய நடைபவனி!

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

தேசியரீதியில் தொற்றாநோய்களை தடுக்கும் நோக்கத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஆரோக்கிய மாதத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் மாபெரும் நடைபவனியொன்று நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எந்திரி என்.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற நடைபவனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை வளாகத்தில் உடற்பயிற்சியுடன் ஆரம்பமானது அதனைதொடர்ந்து அங்கிருந்து மட்டக்களப்பு மணிகூட்டு கோபுரத்தை சென்றடைந்து அங்கிருந்து காந்திபூங்கா வழியாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு அருகில் அமைந்துள்ள கோட்டை பூங்கா வளாகத்தை சென்றடைந்தது.





நடைபவனி நிறைவடைந்ததைத் தொடர்ந்து கோட்டை பூங்கா வளாகத்தில் பிராந்திய சுகாதார பணிமனையின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு மாநகரசபையினால் பராமரிக்கப்படவிருக்கும் திறந்த வெளி உடற்பயிற்சி நிலையம், பொதுமக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நடைபவனியில் பிரதம அதிதிகளாக வடமாகாண சுகாதார அமைச்சின் (பதில்) பணிப்பாளரும், யாழ்ப்பாண வைத்தியசாலை பணிப்பாளருமாகிய வைத்திய கலாநிதி ரீ.சத்தியமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## சம்மாந்துறை வலயத்தில் நூல் வெளியீட்டு விழா

(காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை வலயக்கல்விப்பணிமனையின் வருடாந்த அமுலாக்க திட்டம் (follow me) என்ற நூல் வெளியீட்டுவிழா திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபரா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் சம்மாந்துறை வலயக்கல்விப்பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யசீர் அரபாத் மொகைடீன் ,திருமதி நிதர்சினி மகேந்திரகுமார், அப்துல் மஜீத், எச் .நைரூஸ்கான், கோட்டக் கல்விப்பணிப்பாளர்களான ஏ.நசீர் பி.பரமதயாளன் யூஎல். மகுமூட்லெவ்வை, கணக்காளர் சீ.திருப்பிரகாசம், ஆசிரியர் பயிற்சி நிலைய முகாமையாளர் எஸ்.சிவேந்திரன், பாடசாலை வேலைகள்



அதிகாரி இ.ஏகாம்பரநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வலய வருடாந்த அமுலாக்கத் திட்ட கைநூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

விழா நிகழ்வுகளை உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாடு நேற்று முன்தினம் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தலைமையில் இடம்பெற்றது. இதில் சுமார் 1000 க்கும் மேற்பட்ட கட்சியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். புதிய தலைவராக அருன்மொழிவர்மன் தம்பிமுத்து மாநில மாநாட்டில் உறுதி செய்யப்பட்டார். செயலாளர் நாயகமாக ஆனந்தசங்கரி தொடர கட்சியின் புதிய மத்திய குழுவும் மாநாட்டில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. சுமார் 300 பேராளர்கள் மாநாட்டில் ஒன்றுகூடினர்.

## கூனித்தீவு படபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த சக்திப் பெருவிழா!

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

மூதூர் கிழக்கு, கூனித்தீவு நவரெட்ணபுரம் அருள்மிகு ஸ்ரீ படபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த சக்திப் பெருவிழா நாளை (10) கூனித்தீவு விநாயகர் ஆலயத்திலிருந்து பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.00 மணிக்கு திருக்கதவு திறத்தல் நடைபெறும்.

நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு பால்குட பவனியும், காலை 10.00 மணிக்கு கொடியேற்றமும் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு பூஜையும் இரவு 8.00 மணிக்கு அபிஷேகமும் இரவு 10.00 மணிக்கு பூஜையும் இரவு 11.00 மணிக்கு அம்பாள் உள்வீதி வலம் வருதலும் நடைபெறும்.

தொடர்ந்து ஒவ்வெரு நாளும் திருவிழா சிறப்பு நிகழ்வாக காசுபதி நினைவரங்கில் கலை நிகழ்வுகள் நடைபெறும்.



எதிர்வரும் 17ஆம்திகதி தீ மிதிப்பும் தொடர்ந்து ஆயுத பூஜை நிகழ்வுகளும் இடம்பெறும், அன்று நண்பகல் 12.00 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

## அறநெறி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் 10 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான அறநெறி புதிய பாடத் திட்டம் மற்றும் அறநெறிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இந்து சமய,கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் செட்டிபாளையம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, ஆரையம்பதி மற்றும் மண்முனை வடக்கு பிரிவின் ஒருபகுதி, ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் கோறளைப்பற்று வடக்கு வாகரை, கோறளைப்பற்று வாழைச்சேனை, கோறளைப்பற்று தெற்கு கிரான், ஏறாவூர்பற்று செங்கலடி, மண்முனை மேற்கு வவுணதீவு, மண்முனை வடக்குப் பிரிவின் மற்றுமொரு பகுதியைச் சேர்ந்த அறநெறிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செங்கலடி மத்திய கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

## பொத்துவிலில் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

பொத்துவில் நகரில் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பவற்றில்



தொடர்ச்சியாக திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலாவதியான பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதாடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் உணவகங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு உணவகங்கள் மூடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.வீதி ஓரங்களில் நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பழங்களை விற்பனை செய்யும் இடங்கள் மற்றும் வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டு தவறான முறையில் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## பொத்துவிலில் காணி உரிமைப்பத்திரம் வழங்கல்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் காணியற்றோருக்கான உரிமைப்பத்திரம் வழங்கும் நிகழ்வு பொத்துவில் பிரதேசசெயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்பு தலைவரு



மான எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்து கொண்டு 9 குடும்பங்களுக்கான காணி உரிமைப்பத்திரத்தை பயனாளிகளிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ராமகுட்டி, கணக்காளர் எஸ்.எம்.ஹாரூன்,பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம். எம்.சப்ரி, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சுபையிர், அலுவலக உத்தியோகத்தர்கள், ஜம்மியத்துல் உலமா சபை பொத்துவில் கிளை தலைவர் உட்பட பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

## மூதூரில் வர்த்தக நிலையங்கள் இரவு 12 மணி வரை திறப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

நோன்புப் பெருநாள் பண்டிகை மற்றும் சித்திரை புத்தாண்டுகள் என்பவற்றை முன்னிட்டு மூதூர் வர்த்தக உரிமையாளர்களின் ஏற்பாட்டில் இன்று தொடக்கம் புதன்கிழமை (10) வரை நள்ளிரவு 12 மணி வரை மூதூரிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் திறக்கப்படவுள்ளன.

மேலும் தற்போது நிலவும் மிக உஷ்ணமான காலநிலையை கருத்திற்கொண்டும் தூர பிரதேசங்களிலிருந்து பொருட்கள் கொள்வனவுக்காக வரும் வாடிக்கையாளர்களின் நலன்கருதியும் சகல வியாபார நிலையங்களும் இரவு 12 மணி வரை திறக்கவுள்ளதாக உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

## கடற்கரை சுத்தம் செய்யும் பணி முன்னெடுப்பு

(சாய்ந்தமருது விசேட நிருபர்)

புனித ரமழான் நோன்பு பெருநாள் மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகை என்பவற்றை முன்னிட்டு கல்முனை மாநகரசபைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகள் சுத்தம்செய்யப்பட்டன.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸியின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸ் மேற்பார்வையில் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களிலுள்ள கடற்கரைப் பகுதிகளில் திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

## குடுவில் அறபா நகர் வீடுகளுக்கு சூரியசக்தி மின் இணைப்பு

(பாலமுனை விசேட நிருபர்)

இறக்காமம், குடுவில் அறபா நகர் கிராமத்தில் மின்சார வசதி இல்லாமல் மிக நீண்ட காலமாக பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வந்த சுமார் 35 குடும்பங்களுக்கு தனவந்தர்களால் சூரிய சக்தி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.35 குடும்பங்களுக்குமான மின் இணைப்பினை உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சமூக செயற்பாட்டாளர் தேசகீர்த்தி எஸ். எம்.சன்சீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸடீன் மற்றும் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஷ்ஷான் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு மின் இணைப்பை வழங்கி வைத்தனர்.

இதன் போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சி.எம்.மாஹீர், இறக்காமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஜஃபர், கிராம உத்தியோகத்தர்களான ஏ.சீ.எம். சமீர், எம்.ஜே.எம்.அதீக், சமூக சேவையாளர் ஜிப்ரி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரையாற்றுகையில்,

அடிப்படை வசதிகளின்றி மிகவும் கஷ்டத்துடன் வாழும் இக்கிராம மக்களின் நலன் கருதி தனவந்தர்கள் முன்வந்து மின்சார வசதிகளை ஏற்படுத்தி கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இங்குள்ள மக்கள் கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களின் சுகாதார ரீதியான பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு கிராமத்தில் மருத்துவ முகாம்களை நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# அன்னதான உணவு ஒவ்வாமை: 60 பேர் வைத்தியசாலையில் அனுமதி

**ஹற்றன் விசேட, பொகவந்தலாவ நிருபர்கள்**

## நல்லதண்ணியில் சம்பவம்

நல்லதண்ணி பிரதேசத்தில் திருவிழாவில் வழங்கப்பட்ட அன்னதான உணவு ஒவ்வாமை காரணமாக 60 பேர் நேற்றுமுன்தினம் இரவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா நல்லதண்ணி வாழமலை தோட்டப் பகுதியில் நடைபெற்ற திருவிழாவில் பக்த அடியார்களுக்கு வழங்கப்பட்ட அன்னதான உணவு ஒவ்வாமை காரணமாகவே 60 பேரும் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர். இவர்களில் 32 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் ஏனைய 28பேரும் சிகிச்சை பெற்று நேற்று காலை வீடு திரும்பியுள்ளதாகவும் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்தார். 60 பேருக்கும் வாழமலை தோட்ட ஆலயத்தில் வழங்கப்பட்ட அன்னதான உணவினை உட்கொண்ட பின்னர் வாந்தி மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொது சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு ஹற்றன் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த 60 பேரில் அதிகமாக பெண்களும் சிறுவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக நல்லதண்ணி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.








இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷின் 2024ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் கோணமுட்டாவ மேற் பிரிவு வீதி, ஹப்புத்தளை தோட்ட வீதி என்பவற்றை புனரமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

# ஹற்றன்– டயகம வீதியில் மரம் முறிந்து வீழ்ந்து விபத்து

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**



ஹற்றனிலிருந்து போடைஸ் வழியாக டயகம செல்லும் வீதியின் குறுக்கே மரம் முறிந்து வீழ்ந்தமையால் அவ்வீதியூடான போக்குவரத்து இரண்டு மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தன.

சம்பவ இடத்திற்கு வந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களுடன் பொது மக்களும் இணைந்து மரத்தை வெட்டி அகற்றிய பின்னர் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது



முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கண்டி மாவட்ட செயலகம் என்பன இணைந்து நடத்திய இப்தார் விசேட நிகழ்வு கண்டி மீராமக்காம் பள்ளிவாசலில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இஸட் ஏ. எம்.பைசல் கலந்து கொண்டு சிறப்பித்தார். முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜெய்னுலாப்தீன் லாபீர் , மாவட்ட மேலதிகச் செயலாளர், முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம். எம். முப்தி மற்றும் ஹாரிஸ் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# வளர்ப்பு மாடுகள் இறைச்சிக்காக திருட்டு

தோட்டப் பகுதிகளில் வளர்ப்பு மாடுகளை திருடி இறைச்சிக்காக விற்பனை செய்து வந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பசறை சங்கபோவ மாவத்தையைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

எல்டப் கிகிரிவத்தை பகுதியில் மாட்டு தொழுவத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த சுமார் 2 வயதுடைய மாட்டை காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

உரிமையாளர்கள் மாட்டை தேடிய போது பசறை மடூல் சீமை வீதி 3 ம் கட்டை பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் அப்பகுதியில் இரத்த கறைகள் காணப்படுவதாக தெரிவித்தனர். அதன்படி அவ்விடத்தில் மாடு வெட்டப்பட்டிருக்கலாம் எனவும் மாட்டு உரிமையாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது அவ்விடத்திற்கு விரைந்த மாட்டு உரிமையாளர்கள் மாட்டின் தலை, தோல் ஆகியன கிடப்பதை அவதானித்து உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பின்னர் அவ்விடத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் சுற்றித் திரிந்த மகேந்திரா ரக லொறியொன்றையும் சுற்றிவளைத்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

பசறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் விபத்தில் ஹற்றன் இளைஞன் பலி

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதி ரெலிக்கொம் சந்திக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் மன்னாரில் உணவகத்தில் பணியாற்றிவந்த 22 வயதான இளைஞன் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹற்றன் பகுதியைச் சேர்ந்த (சந்துரு) சந்திரகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக மன்னார் மாவட்டத்தில் தொழில் நிமித்தம் உணவகங்களில் தொழிலாளியாக பணிபுரிந்து வந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை (7) மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் இளைஞன் உயிரிழந்துள்ளார்.

# பா.ஜ.க தொண்டரை ஆபாசமாக பேசிய பத்திரிகை நிருபர்!

## மன்னிப்பு கேட்க சொல்கிறார் அண்ணாமலை



தனியார் பத்திரிகை நிருபர் ஒருவர், பா.ஜ.க தொண்டரை ஆபாசமாக பேசியுள்ளார். இதனால் ஆவேசமடைந்த தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, 'அந்நிருபர் தொண்டரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்' எனக் கூறினார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் சட்டசபை தொகுதியில் அண்ணாமலை நேற்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். பல்லடம் செட்டிபாளையம் ரோட்டில் பிரசாரம் மேற்கொண்ட போது, தனியார் பத்திரிகை நிருபர் ஒருவர் பா.ஜ.க தொண்டர் ஒருவரை கெட்ட வார்த்தையால் ஆபாசமாக பேசியதாக கூறப்படுகிறது.

இதனால் ஆவேசமடைந்த அண்ணாமலை நிருபர்கள் சந்திப்பை புறக்கணித்தார்.மேலும் அவர் நிருபர்களிடம் கூறுகையில், "தாயை இழிவுபடுத்தும் வகையிலான அந்த கெட்ட வார்த்தையை கூறியதற்காக குறிப்பிட்ட நபர் எங்கள் தொண்டரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். மாலை 6 மணிக்குள் சம்பந்தப்பட்ட மன்னிப்பு கேட்கவில்லை எனில், பல்லடம் பொலிசில் நானே புகார் அளிப்பேன். மன்னிப்பு கேட்கும் வரை நிருபர்களிடம் பேட்டி அளிக்க மாட்டேன்" எனக் கூறி புறக்கணித்துச் சென்றார்.

# சென்னையில் இன்று மோடி பங்கேற்கும் 'ரோட் ஷோ'; பொலிசார் 20 நிபந்தனைகளை விதித்து அனுமதி!



இந்தியாவில் இன்னும் சில நாட்களில் லோக்சபா தேர்தல் ஆரம்பமாக உள்ளதால், தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. இதன் ஒருபகுதியாக சென்னை தி.நகரில் இன்று பிரதமர் மோடியின் வாகன பேரணி (ரோட் ஷோ) நடக்க இருக்கிறது. இதனால் தி.நகர் பகுதியில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ட்ரோன்கள் பறக்க சென்னை பொலிஸ் தடை விதித்துள்ளது.

இந்நிலையில் இந்த 'ரோட் ஷோ'வுக்கு சென்னை பொலிஸ் 20 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியுள்ளது.

நிபந்தனைகள் வருமாறு:

★ பிரதமரின் ரோட் ஷோவின்போது தொண்டர்கள் பட்டாசு வெடிக்கக் கூடாது.

★ வெறுப்புணர்வை தூண்டும் வகையில் முழக்கங்களை எழுப்பக் கூடாது.

★ பிரதமரின் ரோட் ஷோவின் போது உரையாற்றவும் அனுமதியில்லை.

★ மத நம்பிக்கைகளை காயப்படுத்தும் வகையிலும் வெறுப்புணர்வு தூண்டும் வகையிலும் முழக்கங்கள் எழுப்பக் கூடாது.

★ குண்டு துளைக்காத வாகனங்களை மட்டுமே பிரதமர் ரோட் ஷோவில் பயன்படுத்த வேண்டும்.

★ பேனர், கட் அவுட்கள் உள்ளிட்டவற்றை வைக்கக் கூடாது.

★ அனுமதிக்கப்பட்ட பாதையில் மட்டுமே ரோட் ஷோ நடத்த வேண்டும்; வேறு எந்த நிகழ்ச்சியும் நடத்தக் கூடாது.

★ தோல் பை, தண்ணீர் போத்தல் போன்ற எளிதில் தூக்கி எறியக்கூடிய வகையிலான பொருட்கள் எடுத்து வரக்கூடாது.

★ மரத்தால் ஆன கைப்பிடியுடன் கூடிய பதாகைகள் எடுத்து வரக்கூடாது

★ அலங்கார வளைவுகள் அமைக்கக் கூடாது.

இவை உள்ளிட்ட 20 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. நிபந்தனைகள் மீறப்பட்டால் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# விஜயகாந்த் நினைவினால் கதறியழுத பிரேமலதா!



லோக்சபா தேர்தல் பிரசாரத்தின் போது கணவர் விஜயகாந்த் மறைவை நினைவுபடுத்தி தே.மு.தி.க பொதுச்செயலாளர் பிரேமலதா தலையில் அடித்துக் கொண்டே கண்ணீர் விட்டு கதறி அழுதது அக்கட்சியினரை உருக வைத்தது.

பிரேமலதா விஜயகாந்த், அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர்களை தீவிரமாக ஆதரித்து பிரசாரம் செய்து வருகிறார். கடலூரில் நேற்றுமுன்தினம் பிரசாரம் செய்த பிரேமலதா கண்ணீரும் கம்பலையுமாக பேசியது தே.மு.தி.கவினரை உருக வைத்தது.

கடலூர் பிரசாரத்தில் பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:

"கேப்டன் விஜயகாந்துடன் நான் திருமணம் செய்து முதலில் வந்த ஊர் பண்ருட்டிதான். ஆனால் என் துரதிருஷ்டம், நான் இன்னைக்கு கேப்டன் இல்லாமல் வந்திருக்கிறேனே. இன்னைக்கு கேப்டன் இல்லாம முதல் முறையாக உங்க கிட்ட வந்துருக்கேனே. ஏன் கடவுள் இப்படி செஞ்சாரோ? யாருக்கும் எந்த தண்டனையும் நாங்க கொடுக்கலையே... தலைவர் இல்லாமல் இன்னைக்கு நான் உங்களைப் பார்க்க எனக்கு கஷ்டமா இருக்கே. தலைவர் நம்ம கூட இல்லையேனு யாரும் நினைக்காதீங்க.தலைவர் அங்கே (வானத்தை பார்த்து) நம்ம கூட தெய்வமா இருக்கிறார்.தலைவர் நம்ம கூடத்தான் இருக்கார்.எங்கேயும் போகலை. உங்க எல்லாருக்கும் தலைவர் சார்பாக நன்றியை தெரிவிக்கிறேன்".

இவ்வாறு பிரேமலதா விஜயகாந்த் பேசினார். பிரேமலதா விஜயகாந்தின் இந்த கண்ணீரும் கம்பலையுமான பேச்சால் தே.மு.தி.கவினர் உருக்கமாகிப் போனார்கள்.

# புடைவை கேட்ட பெண்ணுக்கு துண்டு கொடுத்த உதயநிதி!

தேர்தல் பிரசாரத்தில் புடைவை கேட்ட பெண்ணுக்கு துண்டு கொடுத்து உதயநிதி சமாளித்தார். இந்த வீடியோ காட்சி சமூகவலைதளத்தில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

தர்மபுரி தொகுதி தி.மு.க வேட்பாளர் மணியை ஆதரித்து அமைச்சர் உதயநிதி பிரசாரம் செய்தார். அப்போது உதயநிதி பேசுகையில் "கடும் நிதி நெருக்கடியிலும் தி.மு.க ஆட்சிக்கு வந்ததும் பெட்ரோல் விலை ரூ.2 குறைக்கப்பட்டது. கல்லூரி செல்லும் மாணவிகள் புதுமைப் பெண் திட்டம் மூலம் பலனடைந்து வருகின்றனர். தேர்தல் நேரத்தில் மட்டும் தான் பிரதமர் மோடி தமிழகம் வருவார்" என்று குறிப்பிட்டார்.

அப்போது புடைவை வாங்கி தாங்க" என அமைச்சர் உதயநிதியிடம் பெண் ஒருவர் கேட்டார். "வணக்கம் அம்மா. பிரசாரத்திற்கு வருவதற்கு முன்பு சொல்லியிருந்தால் புடைவை வாங்கிட்டு வந்திருப்பேன். தற்போது புடைவை இல்லை" என்றார். இதையடுத்து, புடைவை கேட்ட பெண்ணுக்கு துண்டு கொடுத்து உதயநிதி சமாளித்தார்.

# வீணாகிப் போனது 18 வருட வாழ்க்கை!



நடிகர் தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இருவரும் பரஸ்பரம் விவாகரத்து கோரி சென்னை குடும்ப நல நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தனுஷின் ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா இருவரும் முறைப்படி விவாகரத்து பெற்று பிரிய போவதாகவும், இருவரும் நீதிமன்றத்தில் விவாகரத்திற்கு விண்ணப்பித்ததாகவும் ஒரு தகவல் வெளியானது. அது வெறும் வதந்தி என சொல்லப்பட்டு வந்த நிலையில், இருவரும் தங்களுடைய திருமண வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் வகையில் பரஸ்பரம் விவாகரத்து கோரி, சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அதில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தங்களின் திருமணத்தை செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செய்தியை கேள்விட்ட ரசிகர்கள் 18 வருட வாழ்க்கை வீணா போச்சே என இணையத்தில் புலம்பி வருகின்றனர்.

# இலத்திரனியல் பொருட்கள் ஏற்றுமதியில் காஞ்சிபுரம் ஈட்டியுள்ள பெரும் சாதனை!

இந்தியா மிகப்பெரிய மின்னணுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாக உருவெடுத்துள்ளது. அதிலும் குறிப்பாக தமிழ்நாடு மின்னணு ஏற்றுமதியில் முதலாம் இடத்தை அடைந்துள்ளது. 2024ஆம் நிதியாண்டில் அனைத்து மின்னணுப் பொருட்களின் தமிழ்நாட்டின் ஏற்றுமதி மட்டும் 40% இற்கும் மேல் ஆகும். இதற்கு முன், 2022ஆம் நிதியாண்டு வரை உத்தரப் பிரதேசமும் கர்நாடகாவும் முன்னணியில் இருந்தன.

இந்த வளர்ச்சியானது ஸ்மார்ட் போன் ஏற்றுமதியின் அதிகரிப்பால் இருக்கிறது. கடந்த இரண்டு நிதியாண்டுகளில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்மார்ட் போன்களில் கிட்டத்தட்ட 40% தமிழ்நாட்டில் சென்னை அருகே அமைந்துள்ள காஞ்சிபுரத்தில் இருந்து வெவ்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டவை. இந்த இலத்திரனியல் பொருட்கள், முக்கியமாக மொபைல் போன்கள் அமெரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஏப்ரல் 2023 மற்றும் ஜனவரி 2024க்கு இடைப்பட்ட காலத்தில், தமிழ்நாடு 7.4 பில்லியன் டொலர் மதிப்புள்ள மின்னணு பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

# கமலுக்கு மூளை மருத்துவ சோதனை செய்வது அவசியம்!



இந்தியாவின் தலைநகராக நாக்பூர் மாறிவிடும் என்று கமல் எந்த அடிப்படையில் சொல்கிறார் எனப் பார்க்க வேண்டும். கமல் உட்பட யார் சொன்னாலும் அவர்களின் மூளையை பரிசோதனை செய்ய வேண்டும். சுயநினைவுடன் தான் இருக்கிறாரா என கமலுக்கு மருத்துவ பரிசோதனையை செய்ய வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை.

"இந்தியாவின் தலைநகரை எப்படி நாக்பூருக்கு மாற்ற முடியும்? நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ் அலுவலகம் இருக்கிறது என்பதால் இதைக் கூறுகிறார். ஒரு ராஜ்யசபா சீட்டுக்காக தன் கட்சியை அடமானம் வைத்து விட்டுப் பேசுகிறாரா எனப் பார்க்க வேண்டும் என்று அண்ணாமலை தெரிவித்தார்.

# லேக் ஹவுஸ் நிறுவனத்தில் தினகரனின் இப்தார்








தினகரன் இப்தார் நிகழ்வு நேற்று லேக் ஹவுஸில் நடைபெற்றது. லேக் ஹவுஸில் சேவையாற்றி ஓய்வு பெற்ற எம் ஏ எம் நிலாம், ஏ எச் எம் பாரூக் மற்றும் எம் வை எம் நவாஸ் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். மாணவன் சிமாக் ஷிஹானின் கிராஅத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் அஷ்ஷெய்க் பஹாத் பாயிஸ் நழீமி ரமழான் சிந்தனை மற்றும் துஆ பிரார்த்தனை வழங்கினார். இப்தார் நிகழ்வின் ஓர் அங்கமாக லேக் ஹவுஸ் நிறுவனத்தில் மிக நீண்ட காலமாக சேவையாற்றி ஓய்வு பெற்ற தினகரன் தமிழ் பிரசுரங்களுக்கான முன்னாள் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் எம். ஏ. எம். நிலாம், மத்திய செய்திப் பிரிவில் மொழிபெயர்ப்பாளராக சேவையாற்றிய கலாபூஷணம் ஏ. எச். எம் பாரூக் மற்றும் நலன்புரி மற்றும் நிதி முகாமைத்துவ பிரிவில் மிக நீண்ட காலமாக சேவையாற்றிய எம். வை. எம். நவாஸ் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் தினமின பிரதம ஆசிரியர் மனோஜ் அபேயதீர, டெய்லி நியூஸ் பிரதம ஆசிரியர் கேசர அபேவர்தன, சன்டே ஒப்சவர் பிரதம ஆசிரியர் பிரமோத் டி சில்வா, சிலுமின பதில் ஆசிரியர் திருமதி சிரோமி அபேசிங்க, தினகரன் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார், லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் ஷம்ஸ் பாஹிம் உட்பட முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்கள், தினகரன் ஆசிரியபீட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். தினகரன் ஆசிரியபீட ஊடகவியலாளர் ஸாதிக் ஷிஹான் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். படங்கள்: சுலோச்சன கமகே




## பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு




முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவை மற்றும் புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவை லண்டன் கிளை இணைந்து ஏற்பாடு செய்த புதுவை பண்பாட்டு பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார். இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிர்வாக ரீதியாகவும், மக்களின் தேவைகள் தொடர்பாகவும் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு காணப்படுகின்றது.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூக பொது அமைப்புகள் ஊடாக பல்வேறு கோரிக்கைகள் கிடைக்கின்றன. அவற்றை சாதகமான முறையில் பரிசீலித்து வருகின்றோம். வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றங்களை கோட்டக்கல்வி பணிப்பாளர்களும், வலயக்கல்விப் பணிப்பாளர்களும் மேற்கொண்டு வருவதால், ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சுக்கு அறிக்கையிடாமல் இருப்பது பாரிய ஒரு சிக்கல் நிலையாகவே காணப்படுகின்றது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் ஆராயுமாறும், உரிய தரவுகளை சேகரிக்குமாறும், பொருத்தமான நடைமுறைகளை பின்பற்றி ஆசிரியர்களை நியமித்து வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். மேலும் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நிறைவு பெற்றிருக்கின்ற நிலையில் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பஸ் மோதியதில் மாணவன் படுகாயம்

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா, பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் பாடசாலைக்கு சென்ற மாணவன் நேற்று காலை பஸ் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பத்தினியார் மகிழங்குளம்



நோக்கி வந்த பஸ், அதே திசையில் புதுக்குளம் பாடசாலைக்கு சைக்கிளிலில் சென்ற மாணவனை மோதியமையால் மாணவன் படுகாயமடைந்தார்.

காயமடைந்த மாணவன் வவுனியா பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கின் உதயம்

## கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டு விழா




(சாவகச்சேரி விசேட நிருபர்)

தென்மராட்சி கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டு விழா அண்மையில் உதயசூரியன் சனசமூக நிலையம் மற்றும் உதயசூரியன் வெளிநாட்டு ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

சனசமூக நிலையத் தலைவர் வே.குகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் எஸ்.உதயசீலன் கலந்து சிறப்பித்திருந்தார். மேலும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. மதியழகனும், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தங்கவேலு ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது கலை நிகழ்வுகள், வட மாகாண ரீதியான நடனப் போட்டி, பரிசளிப்பு வைபவம், கௌரவிப்பு நிகழ்வு என்பன நடைபெற்றன. இந்நிகழ்வில் விசேட விருந்தினராக பாடகி கில்மிசா கலந்து சிறப்பித்தார்.

## பிரபல வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் காலமானார்



(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் தனது 65ஆவது வயதில் நேற்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை காலமானார். யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலை நிகழ்வொன்றில் வயலின் இசை வழங்கிக் கொண்டிருந்த நேரம் சுகவீனம் ஏற்பட்டு வீட்டிற்கு சென்றுள்ளார். இந்நிலையில் நேற்றையதினம் அதிகாலை காலமானார். நாச்சிமார் கோவிலை அண்மித்த பகுதியிலுள்ள அன்னாரின் வீட்டில் எதிர்வரும் வியாழக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளன.

## முச்சக்கர வண்டியை திருடியவர் தப்பியோட்டம்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டியை திருடி சென்றவரை பொலிஸார் மடக்கி பிடிக்க முற்பட்ட வேளை , சந்தேகநபர் வீதியால் சென்ற மாணவனின் சைக்கிளை பறித்துக் கொண்டு, அதில் தப்பிச் சென்றுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகில் தனது முச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு, மருத்துவமனைக்கு சென்று திரும்பிய வேளை அதை காணவில்லை. இதனையடுத்து இது தொடர்பில் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் வழங்கப்பட்டது. திருடப்பட்ட முச்சக்கர வண்டி யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாக பயணித்த போது, அதனை அப்பகுதியில் கடமையிலிருந்த போக்குவரத்து பொலிஸார் கண்டு முச்சக்கர வண்டியை வழிமறித்துள்ளனர்.

இதன்போது முச்சக்கர வண்டியை திருடிக்கொண்டு சென்றவர், அதனை வீதியில் கைவிட்டு விட்டு, வீதியில் சென்ற மாணவனின் சைக்கிளை பறித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளார்.

முச்சக்கர வண்டியை மீட்ட பொலிஸார், தப்பிச் சென்றவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை:
## 90 ஆயிரம் ரூபா அபராதம் ; ஒருவருக்கு பிடியாணை

(வவுனியா விசேட நிருபர்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியா நகரப்பகுதி, வைரவபுளியங்குளம், குருமன்காடு ஆகிய பகுதிகளிலுள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள், உணவகங்கள் போன்றவற்றில் சுகாதார பரிசோதகர்களால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பழுதடைந்த பொருட்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைகள் பொறிக்கப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 8 பேருக்கு எதிராக முதல் கட்டமாக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் 6 பேருக்கு 90 ஆயிரம் ரூபா அபராதம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றுமொரு வழக்கு திகதியிடப்பட்டுள்ளது. பண்டிகை காலத்தை முன்னிட்டு மக்களுக்கு பாதுகாப்பானதும், சுகாதாரமானதுமான பொருட்களை வழங்கும் பொருட்டு சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.



# கற்பிட்டி வர்த்தக சங்கம் – பொலிஸார் இடையிலான விசேட கலந்துரையாடல்

**புத்தளம் தினகரன் நிருபர்**





கற்பிட்டி வர்த்தக சங்கத்திற்கும் பொலிஸாருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று கற்பிட்டி பஸார் ஜும்ஆ பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை (05) ஜும்ஆ தொழுகையின் பின் இடம்பெற்றது.

கற்பிட்டி வர்த்தக சங்கத்தின் தலைவர் எஸ்.ஏ.எம். ரியாத் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.டபிள்யூ.எஸ். எதிரிசிங்க, கற்பிட்டி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி சமன் மற்றும் சமூக பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெயக்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,

எதிர்நோக்கியுள்ள நோன்பு பெருநாள் மற்றும் தமிழ் சிங்கள புது வருட பிறப்பு என்பவற்றினை முன்னிட்டு கற்பிட்டி நகரின் வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக சனநெரிசல் அதிகரித்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திருட்டு கும்பல் தமது கைவரிசையை காட்டுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

எனவே இவைகளை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை செயற்பாடுகளாக உங்கள் வியாபார நிலையங்களில் முடியுமான வரை கண்காணிப்பு கெமராக்கல் பொருத்துதல் கெமராக்கல் உள்ள இடங்களில் அதன் தொழில்நுட்ப செயற்பாடுகளை உறுதிப்படுத்துங்கள்.

கற்பிட்டி பிரதேசத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் கடல் மார்க்கமான சட்டவிரோத கடத்தல் நடவடிக்கை செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் விற்பனை, பாவனை இவற்றை தடுத்து நிறுத்துவதற்கான சகல செயற்பாடுகளையும் கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகிறது என்றார்.

# பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள் அன்பளிப்பு



**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா நிறுவனம் UNHCR அமைப்பின் அனுசரணையில் சுமார் முப்பது மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய வைத்திய உபகரணங்களை அண்மையில் அன்பளிப்புச் செய்தது.

மேற்படி உபகரணங்கள் கையளிக்கும் வைபவம் வைத்தியசாலை பணிப்பாளர் காஞ்சனா தில்ருக்சி தலைமையில் வைத்தியசாலையில் இடம்பெற்றது. UNHCR அமைப்பின் இலங்கை பிரதானி சன்ஜிதா சத்தியமூர்த்தி, முஸ்லிம் எய்ட் பணிப்பாளர் பைஸர் கான் உள்ளிட்ட பிரதிநிதிகள் வைத்தியசாலை பணிப்பாளரிடம் இதனை கையளித்தனர்.

களுத்துறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் உதே குணவர்தன, சத்திர சிகிச்சை நிபுணர் அஜித் ரணசிங்க மற்றும் சுகாதாரத் துறை பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு நவீன நூலகத்திற்கு ஒரு இலட்சம் நூல்கள் வழங்கி வைப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு நவீன நூலகத்திற்கான புத்தகங்களை சேகரிக்கும் செயற்பாட்டிற்கு BOOK ABROAD நிறுவனத்தினால் இரண்டாவது தொகுதியாக ஒரு இலட்சம் நூல்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் அதிகளவிலான நூல்களை அன்பளிப்புச் செய்த Book abroad தன்னார்வ தொண்டு அமைப்பிற்கு மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்பு குழு நன்றிகளை தெரிவிப்பதுடன், இந் நூல் தொகுதி கிடைப்பதற்கு புலம் பெயர் நாட்டில் இருந்து ஒருங்கிணைப்புச் செய்த, நூலகவியலாளர் என். செல்வராஜாவிற்கும் இப் பாரிய பணியினை நெறிப்படுத்திய கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்பு குழு (Batticaloa Library Book Resource Coordination Panel) சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்பு குழு தலைவர் மு. பவளகாந்தன் மற்றும் செயலாளர் சா.பரணீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு கிடைத்த புத்தகங்களில் கல்வி உளவியல், மருத்துவம், தாதியர் கல்வி, கட்டட நிர்மாண பொறியியல், இலத்திரனியல், இயந்திரவியல், நவீன விஞ்ஞானம், விஞ்ஞானக்கல்வி, ஆராய்ச்சி விஞ்ஞானம், விலங்கியல், தாவர விஞ்ஞானம், வணிகம் கலை கலாச்சார, நாடக அழகியல்நுட்பம், குழந்தை உளவியல், கற்றல் கற்பித்தல் உசாத்துணை, பண்டைய, மேலைத்தேய கலாச்சாரம், பெண்கள் நலன் சார்ந்த, இலக்கிய, அறிவியல், பௌதீகவியல் இரசாயனவியல் உயிரியல், புவியியல், விலங்கியல், விவசாய வானியல் சாஸ்திர, கணித, தத்துவ, கோட்பாடுகள், அறிஞர்கள் வரலாறு, ஆய்வுகள் என பல்வேறுபட்ட பிரிவுகளின் கீழ் இந்தப் புத்தகங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இவை நிச்சயம் எமது எதிர்கால மாணவர் சந்ததியை மெருகூட்டி வளப்படுத்தும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.





பாணந்துறை, ஹேனமுல்லை அஹதிய்யா பாடசாலை ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நிகழ்வு அண்மையில் பாணந்துறை டேட்டா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பாணந்துறை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் மௌலவி அபுல்கலாம் தீனி சிறப்புரை நிகழ்த்துவதையும், அல் முபாரக் ஜும்ஆப் பள்ளி பேஷ் இமாம் மௌலவி யூ.எல்.எம். பைஸல் ஹஸனி துஆப் பிரார்த்தனை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட பிரமுகர்களையும் மாணவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

# சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யாவில் அல் குர்ஆன் தமாம் மஜ்லிஸ் நிகழ்வு





பேருவளை சீனன் கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் புனித ரமழான் மாதம் மாணவர்களால் ஓதப்பட்ட 30 அல்குர்ஆன்கள் தமாம் செய்யும் நிகழ்வும் இப்தார் நிகழ்வும் கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் நடைபெற்றது.

கலாபீட பணிப்பாளர் ரயீஸுல் முகத்தம் மௌலவி எம் ஜே எம் பஸ்லான் (அஷ்ரபி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிபர் மௌலவி எம் ஏ எம் அஸ்மிகான் (முஅய்யிதி) உட்பட விரிவுரையாளர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீக தலைவர் ஷைகுஸ் ஸஜ்ஜாதா அஷ்ஷைக் மஹ்தி அல்பாஸி அன்னவர்களின் அனுமதியுடனும் இலங்கைக்கான கலிபத்துல் குலபா மௌலவி அல் உஸ்தாத் எம். இஸட் முஹம்மத் ஸுஹூர் (பாரி)யின் ஆலோசனையுடன் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த 30 அல்குர்ஆன்கள் இறைத் தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெயரிலும், ஷாதுலிய்யா தரீக்காவின் இமாம் அபுல் ஹஸன் ஷாதுலி (றழி) உட்பட ஷாதுலிய்யா மஷாயிக்மார்கள், அண்மையில் இறையடி சேர்ந்த தரிக்காவின் முன்னாள் உலக ஆன்மீக தலைவர் அஷ்ஷைக் அஜ்வாத் அப்துல்லாஹ் அல்பாஸி (றஹ்), அஹ்லு பைத்துகள், முன்னாள் கலீபத்துல் குலஃபா மௌலவி ஜே. அப்துல் ஹமீத் (பஹ்ஜி), எம்மை விட்டும் பிரிந்த கலீபாக்கள், பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள், சீனன் கோட்டையில் வாழ்ந்து மரணித்தவர்கள், கலாபீடத்துக்கு பாடுபட்டு மறைந்தவர்கள், அனைத்து முஸ்லிமான ஆண்கள் பெண்கள் பேரிலும் தமாம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பலஸ்தீன நாட்டில் நிரந்தர சமாதானம், நிம்மதி, சுபிட்சம் வேண்டியும் இங்கு விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

# உளச்சிகிச்சையை உரியவாறு முன்னெடுப்பதால் ஓட்டிசம் பாதிப்பை பெருமளவில் குறைக்க முடியும்

இன்றைய உலகில் பல மில்லியன்கணக்காண குழந்தைகள் ஓட்டிசம் எனும் நரம்பியல் வளர்ச்சி கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் அகராதியில்'ஓட்டிசம்' என்பதற்கு 'மூளை இறுக்கம்' என அர்த்தம் வழங்கப்படுகிறது. இதனை புரிந்துகொள்ளும் வகையில் கூறுவதாயின் 'ஓட்டிசம்' என்பது வழமைக்கு மாறான மூளை விருத்தியைக் குறிக்கின்றது. அதாவது மூளையின் நரம்புத் தொகுதியின் போதிய வளர்ச்சி இன்மையின் காரணமாக உணர்வுகளும் உணர்ச்சிகளும் சாதாரண மக்களிலும் பார்க்க வித்தியாசமான முறையில் வெளிக்காட்டும் தன்மைக் காணப்படும்.

குறிப்பாக குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரை ஒருவரில் ஓட்டிசம் பாதிப்பு காணப்படும். அதேசமயம் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவும் தொற்று நோய் கிடையாது. ஆனாலும் உலகளாவிய ரீதியில் இன்று கவனத்தை ஈர்க்கும் நோய்நிலைமையாக ஆட்டிசம் கருதப்படுகின்றது.

குறிப்பாக உலகில் பிரான்சில் தான் ஓட்டிச குழந்தைப் பிறப்பு வீதம் குறைவாக காணப்படுகின்றது. அதாவது இங்கு பிறக்கும் 144 குழந்தைகளில் ஒரு குழந்தை ஓட்டிசம் பாதிப்புடன் பிறக்கிறது. மாறாக கட்டாரில் தான் ஓட்டிச குழந்தைப் பிறப்பு அதிகமாக உள்ளது. இங்கு 66 குழந்தைகளில் ஒரு குழந்தை ஓட்டிசம் பாதிப்புடன் பிறக்கிறது.

அதேசமயம் அரபு நாடுகளில் 89 குழந்தைகளில் ஒரு குழந்தை ஓட்டிசம் பாதிப்போடு பிறப்பதாக ஆய்வுகள் கூறுகின்றது. உலகில் சாரசரியாக 100 இல் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்போடு பிறக்கிறது. ஓட்டிசம் உள்ள பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.அதாவது 5:1 என்ற விகித்தில் பாதிக்கப்படுகின்றனர்என உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

இலங்கை நாட்டை பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டிலேயே முதன் முதலில் ஓட்டிசம் கற்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி இலங்கையில் பிறக்கும் நூறு குழந்தைகளில் ஒன்று 'ஓட்டிசத்திற்கு உள்ளாவது கண்டறியப்பட்டது. ஓட்டிசம் நோயினை ஏற்படுத்தும் காரணிகள் வருமாறு:

மரபணு காரணிகள், சுற்றுச்சூழல் காரணிகள், கர்ப்ப காலத்தில் ஏற்படும் அதித இரத்தப்போக்கு, கர்ப்ப காலத்தில் ஏற்படும் நீரிழிவு நோய், மகப் பேறுக்கு முந்தைய மருந்து பயன்பாடு, குழந்தை பிறக்கும் போது தாயின் வயது அதிகமாக இருத்தல் இவ்வாறான காரணிகளால் ஓட்டிசம் குழந்தைகள் பிறக்கின்றன.



ஓட்டிசம் கொண்ட குழந்தையின் இயல்பான வளர்ச்சியில் ஏற்படும் இடையூறுகள் பொதுவாக மூன்று வயதுக்கு முன்பே உருவாகின்றன.

குறிப்பாக ஓட்டிசம் நோயின் அறிகுறிகள் பொதுவாக 24 மாதங்கள் முதல் ஆறு வயது வரை தெளிவாகத் தெரியும். ஓட்டிசத்தின் அறிகுறிகள் லேசானது முதல் கடுமையானது வரை இருக்க கூடும். ஓட்டிசம் கொண்ட சில பிள்ளைகள் எந்தவித பின்னடைவும் இல்லாமல் ஆரோக்கியமான செயல்பாட்டு வாழ்க்கையை நிர்வகிக்க முடியும். கடுமையாக பாதிக்கப்பட்ட ஓட்டிசம் பிள்ளைகள் வாழ்க்கை முழுவதும் செயற்திறன் ஆற்றவர்களாக இருப்பர்.

ஓட்டிசம் குழந்தைகள் ஏனைய குழந்தைகளைப் போன்றே சாதாரண உடல் வளர்ச்சியைக் கொண்டிருப்பர். ஆனால் மந்தநிலையில் செயற்படுபவர்களாக காணப்படுவார்கள். அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை அனுகி ஆலோசனை பெற வேண்டும்.

மருத்துவ சிகிச்சையோடு இணைந்த வகையில் உளவியல் சிகிச்சைகளும் வழங்கப்படுவதால் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளிடையே உடலியல் மற்றும் உளவியல் ரீதியான முன்னேற்றம் அடைந்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றது. குறிப்பாக அமெரிக்காவில் 36 சதவீதமான ஓட்டிசம் குழந்தைகள் சாதாரண மாணவர்களுடன் கல்வி கற்பதுடன் 19 சதவீதமானவர்கள் எவரது உதவியுமின்றி தனியாக வாழ்கிறார்கள் மற்றும் 58 சதவீதமானவர்கள் தொழில் செய்கிறார்கள் என அமெரிக்க ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு காரணம் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் சிகிச்சை முறைகளே காரணமாக அமைகின்றது என்றே கூற வேண்டும். உளவியல் சிகிச்சைகளை நோக்கும் போது ஆசிரியர்கள் பெற்றோர்கள் மருத்துவர்கள் சிகிச்சை முறையை கையாளும் நுட்பத்தை தெரிந்து இருக்க வேண்டும். ஓட்டிசம் குறைப்பாட்டை இலகுவில் நிவர்த்தி செய்து கொள்ள முடியும். மேலும் இத்தகைய சிகிச்சை முறைகள் உள்ளது என்பதை பெற்றோருக்கு மிகத் தெளிவாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் சிகிச்சை முறைகளைக் கொண்டு பிள்ளைகளை குணப்படுத்த முடியும் என்றநம்பிக்கையைஏற்படுத்தவேண்டும்.

மேலும் ஆட்டிசம் பிள்ளைகளுக்கு உள கல்வி வழங்குவது என்பது முக்கியமாகும். இந்த கல்விமுறையானது விசேட தேவை உடையோர் கல்வி கற்கும் பாடசாலைகளில் அல்லது விசேட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.பெற்றோருக்கான ஆலோசனை என்பது மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது. இதன் போது பிள்ளைகளுடன் எவ்வாறு அணுகலாம்.

என்னென்ன வகையில் உதவியாக இருக்க முடியும் போன்ற பல்வேறு விதமான அறிகுறிகளை வழங்குவதன் மூலம் ஓட்டிசம் குழந்தைகளின் நடத்தை குறித்த அறிவு பெற்றோருக்கு ஏற்படும். இதனால் குறித்த பிள்ளையின் நடத்தையே சீரமைக்க பெற்றோருக்கு உதவியாக இருக்கும். மேலும் பிள்ளையின் வீட்டு சூழலைப் பொறுத்தவரையில் பெற்றோர் மற்றும் சகோதரர்களின் ஒத்துழைப்பை பிள்ளைக்கு முழுமையாக வழங்க வேண்டும்.

இத்தகைய உளவியல் சிகிச்சை முறைகளினை தொடர்ச்சியாக வழங்கும் போது ஓட்டிசத்தின் பாதிப்பை குறைத்துக் கொள்ள முடிவதுடன் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியினை விருத்தி செய்துக் கொள்ளக்கூடியதாக காணப்படுகின்றது.

**திருமதி. வினோதர்ஷினி வினோகாந்த்**
உதவி விரிவுரையாளர்
உளவியல் துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

## INVITATION FOR BIDS (IFB)

**THUNUKKAI PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT**

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER: P163305**

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from the European Union towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this grant to payments under the Contract for **Construction of Village Products Sales Center at Mallavi.**

2) The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Thunukkai Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Village Products Sales Center at Mallavi** as described below.

| No | Contract No | Contract Name | Tentative Est. Cost (Rs.Mn) | Required Min. CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/MU /TNKPS/2023 /PT 2/07 | Construction of Village Products Sales Center at Mallavi | 9.99 | C7 or above Building Construction | 84 | 100,000.00 | 14.07.2024 | 11.08.2024 |

3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5) Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

6) Interested bidders may obtain further information from **Secretary, Thunukkai Pradeshiya Sabha,Thunukkai, Mullaitivu.**(T.P No: 0212284532, Fax No: 0212283478) and inspect the bidding documents at the address given below from **09th April 2024** until **28th April 2024** during **09:00**Hrs to **15:00**Hrs on normal working days.

7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Thunukkai Pradeshiya Sabha, Thunukkai, Mullaitivu.** from **09th April 2024** until **28th April 2024** during **09:00**Hrs to **15:00**Hrs on normal working days upon payment of a non-refundable fee of **Three Thousand Rupees (Rs.3,000.00)**. The method of payment will be by cash.

8) Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Thunukkai, Mullaitivu.**on or before**14.00**Hrs **on 29th April 2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9) A pre-bid meeting will be held on **23th April 2024** at 11.00 Hrs in **Thunukkai Pradeshiya Sabha,Thunukkai, Mullaitivu.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Thunukkai, Mullaitivu.**
**09.04.2024**

# தேசிய உணவு மேம்பாட்டு சபை

(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)

**2024 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்**

கமத்தொழில் அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய உணவு மேம்பாட்டு சபையின் கீழ் அரிசி மற்றும் அரிசி மாவு உற்பத்திகள், போசனை உணவுப் பொருட்கள், பழ பானங்கள் உட்பட அனைத்து பதப்படுத்தப்பட்ட உணவுகள் உற்பத்திகள், அக்ரோ ஃபிரெஷ் விற்பனைச் சேகரிப்பு மற்றும் சபையின் மூலம் செயற்படுத்தப்படும் திட்டம் மற்றும் தலைமை அலுவலகத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்காக உள்நாட்டு வழங்குனர்கள் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களைப் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி **2024.04.17** ஆகும்.

1. தானியங்கள் மற்றும் உணவுப்பொருட்கள்
2. விவசாய உள்ளீடுகள்
3. அலுவலக கருவிகள் மற்றும் எழுதுபொருட்கள்
4. கணினிகள் மற்றும் துணைக்கருவிகள்
5. கணினி புதுப்பித்தல் மற்றும் சேவைகள்
6. அச்சிடுதல் மற்றும் தொடர்புடைய சேவைகள்
7. அனைத்து வகை வாகனங்கள் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு
8. தொழில்துறை உபகரணங்கள்
9. பொதிசெய்யப்பட்ட பொருட்கள் - பொலித்தீன் / பொலிசேக்
10. அனைத்து அலுவசேவைகள்
11. கட்டிட பராமரிப்பு அல்லது கட்டுமானம்
12. உணவு இறக்குமதியாளர்கள் தொடர்புடைய சேவைகள்

மேலே பிரதான கணக்கெடுப்பிற்கு அப்பால் தொடர் கணக்கெடுப்பு உட்பட அனைத்து விபரங்கள் உள்ளடங்களாக விளம்பரங்கள் மற்றும் பதிவுகளுக்கான விபரங்கள் உள்ளடங்களாக விண்ணப்பங்கள் **www.nfpb.lk** இணைத்தளத்தின் மூலம் குறித்த விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் - 011-2580194**

**தேசிய உணவு மேம்பாட்டு சபை**

இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்டிய. தொலைபேசி : 2506895, பெக்ஸ் : 2506907

ඕනෑම දෙයක්
පහසුවෙන් හා විශ්වාසයෙන්
මිලදී ගැනීමට
දැන්ම පිවිසෙන්න...
adz.lk
it's what you want
It's Simple, Trusted & Fast...
adz.lk වෙතින් දැන්
වීඩියෝ වෙළඳ දැන්වීම්
ප්‍රචාරය කිරීමේ අවස්ථාව
WE ACCEPT
Contact Us:-
- 011 2 429 369 | - 077 7 270 067
- 077 7 270 845 | - support@adz.lk

# இலங்கை திரிபோஷ லிமிட்டட்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 1000 மெ.தொ. சோளத்திற்கான பெறுகை

**Bid No. SLTL/TB/05/2024**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 1000 மெ.தொ. சோளத்தை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (மேல் மட்டம்) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, விலைமனுதாரரானவர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோரின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011 2236 588/ 011 2237 418.
5. 2024.04.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 29,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 படிவத்துடன் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2024.04.30 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அதாவது 2024.04.30 ஆம் திகதியிலிருந்து 2024.07.30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,400,000 ரூபா பெறுமதியானதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து அதாவது 2024.04.30 ஆம் திகதியிலிருந்து 2024.08.27 ஆம் திகதி வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் (2024.04.30 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு).

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:**

**தலைவர்,**
**மேல் மட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த.பெட்டி 17,**
**கப்புவத்த,**
**ஜா-எல.**

# அறிவித்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**மோட்டார் போக்குவரத்து திணைக்களம்**

**2024.03.06 மற்றும் 2024.03.25 புதன் தினமின, தினகரன், டெயிலிநியூஸ் பத்திரிகைகளில் பிரசுரமான பத்திரிகை அறிவித்தல் பற்றியது**

தலைமையகத்தின் QR குறியீட்டுடனான சாரதி அனுமதிப் பத்திர கார்ட் நான்கு இலட்சம் (400,000)ஐ கொள்வனவு செய்வதற்காக உள்ளூர் போட்டி விலைமனுக்கோரல் என்ற விளம்பரத்தில் கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி மற்றும் விலைமனுக்கள் திறத்தல் **2024.04.19 பி.ப. 2.00** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர், பெறுகைக் குழு,**
**மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்,**
**இல. 341, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு - 05**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.04.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5443 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,034,160.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 7 9 2 3 5 1

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 018 — F ஆங்கில எழுத்து — 2 3 5 1 வெற்றி இலக்கங்கள்

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3685 — சீட்டிழுப்பு திகதி 2024.04.07 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,179,010.16
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 02 06 34 60 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 26964

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1791 — 2024.04.07 — 74921 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 429,742,408.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 19 63 77 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.04.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0269
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 9 0 8 9 6 8
L7 எழுத்து B — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 28,265,593.68

ராசி சுப பலன் — திகதி 2024.04.07 — சீட்டிழுப்பு இலக்கம் 752 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,101,929.84
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 09 33 56 59 — தனயோக இலக்கம் 34227 — நாளுக்கான விதி எண் 24

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1473 — 2024.04.07 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,900,487.60
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 09 18 21 62 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 53173

# கேள்விகோரல்

கடற்றொழில் அமைச்சு

**கட்டிடம் மற்றும் வளாகத்தில் துப்புரவேற்பாட்டு சேவை விடயங்களை நிறைவேற்றுவதற்காக கேள்விகோரல் - 2024**

கடற்றொழில் அமைச்சின் கட்டிடங்கள் மற்றும் அமைச்சிக்குச் சொந்தமான வளாகத்தில் துப்புரவேற்பாட்டு சேவை விடயங்களை நிறைவேற்றல் சார்பாக 2024ம் ஆண்டிற்காக விலைமனுக்கள் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக உங்களது தகவல்கள் அடங்கிய விண்ணப்பத்தை 2024.04.29 மு.ப. 10.00 இற்கு முன்கு கீழ்க்காணும் முகவரிக்கு கையோடு அல்லது பதிவுத்தபாலில் கிடைக்கச் செய்யுங்கள், இதற்காக ரூபா 2,000.00 மீளளிக்கப்படாத வைப்பை மற்றும் ரூபா 90,000.00 கேள்விப்பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த விண்ணப்பங்கள் கடற்றொழில் அமைச்சின் இரண்டாம் மாடியில், கணக்குப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்காக குறித்த அறிவுறுத்தல் பத்திரங்களை www.fisheries.gov.lk இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தொடர்புகள் : கணக்காளர் (வழங்கல்கள்) - 011-2328990

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக்குழு**
**புதிய செயலகம்**
**மாளிகாவத்த**
**கொழும்பு - 10**

The Housewives' companion
Classifieds on
Daily News

# இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## கி.மீ. 1,500 வீதி செயற்திட்டங்களுக்கான விலைமனுக்கோரல் (IFB) (சப்ரகமுவ மாகாணம்)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/01 | காலலகடே கொட்டுன்ன மில்லன்கொட வீதியை மேம்படுத்தல் | 75.03 | C4 மற்றும் அதற்கு மேல் | 1,000,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/02 | மாஸ்பொத்த வெனிவெல்கடுவ வீதியை மேம்படுத்தல் | 24.54 | C5 மற்றும் C4 | 350,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/03 | துல்கல கெந்தேவ குறுக்காக நாரங்கல வீதியை மேம்படுத்தல் | 35.73 | C5 மற்றும் C4 | 500,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/04 | கொப்பேவெல ரிதீதொட்டுவ வீதியை மேம்படுத்தல் | 29.83 | C5 மற்றும் C4 | 450,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/05 | ஹிக்கொட முதல் பஹலபோகல வரையான வீதியை மேம்படுத்தல் | 27.77 | C5 மற்றும் C4 | 425,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/06 | தெஹியோவிட்ட தங்கம்பொல வீதியை மேம்படுத்தல் | 24.90 | C5 மற்றும் C4 | 375,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/07 | குக்குல்பனே கந்த வீதியை மேம்படுத்தல் | 41.48 | C5 மற்றும் C4 | 600,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/08 | தெஹியோவிட்ட அலுத்வத்த முதல் பல்லேகணுகல வீதி வரை மேம்படுத்தல் | 39.02 | C5 மற்றும் C4 | 600,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/KGL/09 | மொரலிய பஸ் போக்குவரத்து வீதியை மேம்படுத்தல் | 28.10 | C5 மற்றும் C4 | 425,000.00 | 119 |
| RDA/SP/1500KM/DPR/SAB/RAT/01 | யட்டிகர மனதுன்கந்த வீதியை மேம்படுத்தல் | 45.52 | C5 மற்றும் C4 | 675,000.00 | 91 |
| RDA/SP/1500KM/DPR/SAB/RAT/02 | பலங்கொட பிரதான விதியில் கெந்தகெட்டிய பாடசாலைக்கு அருகில் காணப்படும் வீதியை மேம்படுத்தல் | 30.52 | C5 மற்றும் C4 | 450,000.00 | 91 |
| RDA/SP/1500KM/DPR/SAB/RAT/03 | குமாரகம சந்தியில் மிரிஸ்வத்த வரை கொரகந்தவல விகாரை வீதியை மேம்படுத்தல் | 30.65 | C5 மற்றும் C4 | 450,000.00 | 91 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.04.09** ஆம் திகதி முதல் **2024.04.30** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

# INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**
**PACHCHILAIPALLI PRADESHIYA SABHA**
**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **Loan** from the **World Bank** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this Loan to payments under the Contract for **work** as describe below.
2. The **Chairman, Local Authority Procurement Committee (LAPC) on** behalf of the **Pachchilaipalli Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) as describe below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/PAPS/2024/BT4/01 | Improvement of Puloppalai Araththinagar Main Road (Stage III ) | 14.20 | C6 or above Highway | 84 | 215,000.00 | 14 July 2024 | 11 Aug 2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Pachchilaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai, Kilinochchi [Telephone No: 021-2050037 / Fax No: 0212050036/ Email ID: pallaips@gmail.com]** and inspect the bidding documents at **Pachchilaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai, Kilinochchi from 09-Apr-2024** until **28-Apr-2024** between **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Pachchilaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai, Kilinochchi** from **09-Apr-2024** until **28-Apr-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3, 500.00 [Rupees Three Thousand Five Hundred only]**.The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Local Authority Procurement Committee (LAPC), Local Development Support Project (LDSP), Pachchilaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai, Kilinochchi** on or before **14.00** Hrs on **29-Apr-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support Project (LDSP),**
**Pachchilaipalli Pradeshiya Sabha,**
**A9 Road, Pallai**
**09-Apr-2024**

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்

### உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் (ஊவா மாகாணம்) சார்பில் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் "1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 03" இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், மொத்த மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால் மட்டும் (இல. ரூபா 5,000,000.00) இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர் அந்தச் சட்டத்தின் 11வது பிரிவின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)
4. விலைக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.)
6. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையின 5ஆம் பிரிவில் (விலைக்கோரல் தரவு / ஒப்பந்த தரவு) வழங்கப்பட்டுள்ளன.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அட்டவணையில் பட்டியலிடப்பட்ட அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் / செயலாளர் அவர்களிடமிருந்து வாரநாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலகம் வரை பெற்றுக்கொள்ளலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது ஊவா - உள்ளூராட்சித் திணைக்கயத்திற்கு 08-04-2024ஆம் திகதி முதல் 28-04-2024ஆம் திகதி வரை 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலகம் வரை மீளளிக்கப்படாத 7500.00 கட்டணத்தைச் செலுத்தி ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
9. 29-04-2024ஆம் திகதி 10.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
10. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சகல விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. 19-04-2024ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் பதுளை, மார்ட்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு (இல.ரூ. மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைக்கோரல் பிணைத் தொகை (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாநகர சபை பண்டாரவளை | LDSP/UP/BD/ MCBW/W/2024/1 | தலைமுறை வருமானத் திட்டமாக பண்டாரவளையில் பகல் நேர காப்பகமொன்றை நிர்மாணித்தல் (கட்டம் 1 மற்றும் 2) | 8.44 | 90 நாட்கள் | C8, C7 மற்றும் C6 - கட்டிடங்கள் | 84,500.00 | 12.08.2024 | |
| மாநகர சபை பண்டாரவளை | LDSP/UP/BD/ MCBW/W/2024/2 | வலஸ்பெத்த கிராமத்தில் பலநோக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (BT 2/3 பூர்த்தியாக்கலின் மிகுதி வேலைகள்) | 11.61 | 105 நாட்கள் | C7, C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 117,000.00 | 12.08.2024 | |
| மாநகர சபை பண்டாரவளை | LDSP/UP/BD/ MCBW/W/2024/3 | நகரத்திற்கு வருகை தரும் மக்களுக்கு உணவு வழங்குவதற்காக உள்நாட்டு உணவுச் சந்தையை நிறுவுதல் | 11.06 | 90 நாட்கள் | C7, C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 111,000.00 | 12.08.2024 | |
| மாநகர சபை பண்டாரவளை | LDSP/UP/BD/ BWPS/W/2024/2 | சபை இடப்பரப்பில் பலநோக்குக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 14.6 | 105 நாட்கள் | C7,C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 146,000.00 | 12.08.2024 | |
| ஹல்துமுல்ல பிரதேச சபை | LDSP/UP/BD/ HMPS/W/2024/3 | ஹல்துமுல்ல வாரச்சந்தையை மேம்படுத்துதல் | 9.36 | 90 நாட்கள் | C8, C7 மற்றும் C6 - கட்டிடங்கள் | 94,000.00 | 12.08.2024 | |
| ஹாலிஎல பிரதேச சபை | LDSP/UP/BD/ HEPS/W/2024/2 | ஹாலிஎல வாரச்சந்தையின் BT 2/3 பூர்த்தியாக்கலின் மிகுதி வேலைகள் | 5.1 | 60 நாட்கள் | C8, C7 மற்றும் C6 - கட்டிடங்கள் | 51,000.00 | 12.08.2024 | |
| ஹாலிஎல பிரதேச சபை | LDSP/UP/BD/ HEPS/W/2024/3 | கொம்போஸ்ட் முற்றவெளியில் நிழலிடம் சகிதமான களஞ்சிய வசதிகளை நிர்மாணித்தல் | 4.6 | 60 நாட்கள் | C9, C8 மற்றும் C7 - கட்டிடங்கள் | 46,000.00 | 29.07.2024 | |
| நகர சபை, ஹப்புத்தளை | LDSP/UP/BD/ UCH/W/2024/2 | ஹப்புத்தளை வாரச்சந்தையை மேம்படுத்துதல் (பூர்த்தியாக்கல் மிகுதி வேலைகள்) | 3.73 | 60 நாட்கள் | C9,C8 மற்றும் C7 - கட்டிடங்கள் | 37,500.00 | 29.07.2024 | |
| நகர சபை, ஹப்புத்தளை | LDSP/UP/BD/ UCH/W/2024/3 | ஹப்புத்தளை நகர சபையில் தற்போதுள்ள அலுவலகக் கட்டிடத்தை விஸ்தரித்தல் | 16.13 | 105 நாட்கள் | C7,C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 162,000.00 | 12.08.2024 | |
| கந்தகெட்டிய பிரதேச சபை | LDSP/UP/BD/ KKPS/W/2024/2 | கந்தகெட்டிய வாரச்சந்தையில் பல நோக்குக் கட்டிடத்தின் BT 2/3 பூர்த்தியாக்கலின் மிகுதி வேலைகள் | 6.28 | 60 நாட்கள் | C8, C7 மற்றும் C6 - கட்டிடங்கள் | 63,000.00 | 12.08.2024 | |
| மஹியங்கனை பிரதேச சபை | LDSP/UP/BD/ MPS/W/2024/1 | மஹியங்கனை வாரச்சந்தையை நிர்மாணித்தல் - 1ஆம் மற்றும் 2ஆம் படிநிலை | 31.85 | 120 நாட்கள் | C6, C5 மற்றும் C4 - கட்டிடங்கள் | 318,500.00 | 23.09.2024 | உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்ட்டின் சில்வா மாவத்தை, பதுளை. 0552222407<br>அல்லது<br>இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனம் |
| மஹியங்கனை பிரதேச சபை | LDSP/UP/BD/ MPS/W/2024/2 | தொடம்வத்த கழிவு முகாமைத்துவ நிலையத்தை மேம்படுத்துதல் ( PT 2 மிகுதி வேலைகள்) | 3.22 | 60 நாட்கள் | C9, C8 மற்றும் C7 - கட்டிடங்கள் | 32,500.00 | 29.07.2024 | |
| பசறை பிரதேச சபை | LDSP/UP/BD/PPS/W/2024/1 | உள்நாட்டு உணவு விற்பனை நிலையத்தை நிர்மாணித்தல் | 14.79 | 90 நாட்கள் | C7, C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 148,000.00 | 12.08.2024 | |
| பசறை பிரதேச சபை | LDSP/UP/BD/PPS/W/2024/2 | பிரதான நூலக மண்டபத்தில் தற்போதுள்ள பலநோக்கு கட்டிடத்தை மேம்படுத்துதல் - கட்டம் 1 மற்றும் 2 | 12.05 | 90 நாட்கள் | C7, C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 120,500.00 | 12.08.2024 | |
| ரிதிமாலியத்த பிரதேச சபை | LDSP/UP/BD/ RDPS/W/2024/2 | தற்போதுள்ள ஆந்தாஉல்பொத்த வாரச்சந்தையில் வாரச்சந்தை கட்டிடமொன்றை நிர்மாணித்தல். | 14.49 | 90 நாட்கள் | C7, C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 145,000.00 | 12.08.2024 | |
| எல்ல பிரதேச சபை | LDSP/UP/BD/EPS/W/2024/2 | எல்ல பிரதேச சபையில் பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல். (கட்டம் 1 மற்றும் 2) | 17.46 | 105 நாட்கள் | C7, C6 மற்றும் C5 - கட்டிடங்கள் | 175,000.00 | 12.08.2024 | |
| புத்தள பிரதேச சபை | LDSP/UP/MO/ BUPS/W/2024/2 | புத்தள வர்த்தக நிலையத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | 2.98 | 45 நாட்கள் | C9, C8 மற்றும் C7 - கட்டிடங்கள் | 30,000.00 | 29.07.2024 | |
| புத்தள பிரதேச சபை | LDSP/UP/MO/ BUPS/W/2024/3 | புத்தளயில் வாரச்சந்தையை நிர்மாணித்தல் | 27.89 | 120 நாட்கள் | C6, C5 மற்றும் C4 - கட்டிடங்கள் | 279,000.00 | 23.09.2024 | |
| கதிர்காமம் பிரதேச சபை | LDSP/UP/MO/ KPS/W/2024/2 | கதிர்காமம் வாரச்சந்தையை மேம்படுத்துதல் - கட்டம் 1 மற்றும் 2 | 27.79 | 120 நாட்கள் | C6, C5 மற்றும் C4 - கட்டிடங்கள் | 278,000.00 | 23.09.2024 | |
| மடுல்ல பிரதேச சபை | LDSP/UP/MO/ MDPS/W/2024/2 | சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்திரிகர்களுக்கான தங்குமிட வசதிகளை மேம்படுத்துதல் | 28.94 | 120 நாட்கள் | C6, C5 மற்றும் C4 - கட்டிடங்கள் | 289,500.00 | 23.09.2024 | |
| மடுல்ல பிரதேச சபை | LDSP/UP/MO/ MDPS/W/2024/3 | உள்நாட்டு உணவு நிலையமொன்றை நிர்மாணித்தல். | 5.22 | 60 நாட்கள் | C8, C7 மற்றும் C6 - கட்டிடங்கள் | 52,500.00 | 12.08.2024 | |
| மெதகம பிரதேச சபை | LDSP/UP/MO/ MGPS/W/2024/3 | மெதகம பொது விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல் | 7.69 | 60 நாட்கள் | C8, C7 மற்றும் C6 - கட்டிடங்கள் | 77,000.00 | 12.08.2024 | |
| மொனராகலை பிரதேச சபை | LDSP/UP/MO/ MOPS/W/2024/3 | பொது மலசலகூட கட்டிடத்தொகுதி, கொம்போஸ்ட் நிலையம் மற்றும் மொனராகலை புதிய பஸ் நிலையம் என்பவற்றின் தொடர்ச்சியான மிகுதி வேலைக்கான திட்டம் | 4.5 | 60 நாட்கள் | C9, C8 மற்றும் C7 - கட்டிடங்கள் | 45,000.00 | 29.07.2024 | |
| சியம்பலாண்டுவ பிரதேச சபை | LDSP/UP/MO/ SPS/W/2024/1 | பிராந்திய மட்டத்தில் ஆரம்ப உற்பத்தி விற்பனை நிலையத்தை அமுல்படுத்துதல் மற்றும் பல்லேவெல வாரச்சந்தையிலுள்ள புதிய கட்டிடத்தை நடைமுறைப்படுத்துதல் | 27.39 | 120 நாட்கள் | C6, C5 மற்றும் C4 - கட்டிடங்கள் | 274,000.00 | 23.09.2024 | |
| சியம்பலாண்டுவ பிரதேச சபை | LDSP/UP/MO/ SPS/W/2024/2 | சியம்பலாண்டுவயில் புதிய சிறுவர் பூங்காவொன்றை நடைமுறைப்படுத்துதல் | 5.9 | 60 நாட்கள் | C8, C7 மற்றும் C6 - கட்டிடங்கள் | 59,000.00 | 12.08.2024 | |

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**ஊவா மாகாணம்.**

**0552222407**
**08-04-2024**

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் – செயற்றிட்ட அடையாளம் : P 163305

## கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனத்தின் சார்பில் உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழு தலைவர் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரம் மற்றும் விசேடத்துவத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் விலைக்கோரல் தரவில் (பிரிவு 5) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சேருவில, சேருவில பிரதேச சபை செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சேருவில பிரதேச சபைக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 08-04-2024ஆம் திகதி முதல் 09-04-2024ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
8. 30-04-2024ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களில் 2024 ஏப்ரல் 19ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.
11. ஒப்பந்தங்களைக் கையளித்தல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**உதவி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**திருகோணமலை மாவட்டம்.**
**08-04-2024.**

| தொ. இல. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | வேலை விபரங்கள் மற்றும் விலைக்கோரல் இலக்கம் | கேள்விபிடக்கூடிய விலைக்கோரல் தொகை (வெட் இன்றி) மில்லியன் | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் மற்றும் விசேடத்துவம் | பெறுகை நிறுவனத்தின் பெயர் | விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் | விலைமனுக்கள் திறக்கப்படும் மற்றும் வைப்புச் செய்யப்பட வேண்டிய இடம் | விலைமனு ஆவணத்தின் விலை (ரூபா) | தேவையான விலைமனுப் பிணை முறி | | விலைமனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | விலைமனுப் பிணை முறி தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| 01 | பிரதேச சபை, கோமரன்கடவல | கோமரன்கடவலயில் Dug Well மற்றும் பம்பி இல்லத்தை நிர்மாணித்தல் EP/TR/GOPS/LDSP/ PT2/2024/W/01 | 9.57 | 75 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, கோமரன்கடவல | பிரதேச சபை, கோமரன்கடவல 026-2255045 | பிரதேச சபை, கோமரன்கடவல | 4,000.00 | 96,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 02 | பிரதேச சபை, பதவி சிறிபுர | காவன்திஸ்ஸபுரயில் நீர்த் தாங்கியை நிர்மாணித்தல் EP/TR/PSPS/LDSP/PT2/2024/W/01 | 13.80 | 105 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் அல்லது நீர் வழங்கல் மற்றும் சாக்கடை | பிரதேச சபை, பதவி சிறிபுர | பிரதேச சபை, பதவி சிறிபுர 025-4934654 | பிரதேச சபை, பதவி சிறிபுர | 5,000.00 | 140,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 03 | பிரதேச சபை, கந்தளாய் | சூரியபுரயிலுள்ள கொம்போஸ்ட் முற்றவெளியின் மிகுதி நடவடிக்கைகள் EP/TR/KAPS/LDSP/ BT4/2024/W/02 | 4.06 | 60 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, கந்தளாய் | பிரதேச சபை, கந்தளாய் 026-2234275 | பிரதேச சபை, கந்தளாய் | 2,000.00 | 41,000.00 | 30.07.2024 | 02.07.2024 |
| 04 | கிண்ணியா நகர சபை, கிண்ணியா | பெரியாற்றுமுனையிலுள்ள பலநோக்கு சேவை நிலையத்தின் மிகுதி வேலைகள் EP/TR/KIUC/LDSP/ BT4/2024/W/01 | 2.04 | 45 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | நகர சபை, கிண்ணியா | Urban Council, Kinniya 026-2236232/-2236172 | நகர சபை, கிண்ணியா | 1,500.00 | 21,000.00 | 30.07.2024 | 02.07.2024 |
| 05 | பிரதேச சபை, மொரவெவ | பன்குளத்தில் சந்தைக் கட்டிட கடைகளின் ஒரு பகுதியின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல் EP/TR/MOPS/LDSP/ BT4/2024/W/01 | 3.20 | 60 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, மொரவெவ | பிரதேச சபை, மொரவெவ 026-2225830 | பிரதேச சபை, மொரவெவ | 1,500.00 | 33,000.00 | 30.07.2024 | 02.07.2024 |
| 06 | பிரதேச சபை, தம்பலகாமம் | முள்ளிப்பொத்தானையில் உள்ள ஏனைய வசதிகளுடன் கூடிய சந்தைக் கட்டிடத்தின் பூர்த்தியாக்கல் வேலைகள் EP/TR/THPS/LDSP/ BT4/2024/W/01 | 5.35 | 60 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, தம்பலகாமம் | பிரதேச சபை, தம்பலகாமம் 026-2246055 | பிரதேச சபை, தம்பலகாமம் | 2,000.00 | 54,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 07 | திருகோணமலை நகர சபை, திருகோணமலை | மனையவெளியில் உள்ள பொது மண்டபத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல் EP/TR/TRUC/LDSP/ BT4/2024/W/01 | 5.61 | 60 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | நகர சபை, திருகோணமலை | நகர சபை, திருகோணமலை 026-2222275 | நகர சபை, திருகோணமலை | 2,000.00 | 57,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 08 | பிரதேச சபை, கோமரன்கடவல | கோமரன்கடவலயில் சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் EP/TR/GOPS/LDSP/ BT4/2024/W/01 | 18.10 | 105 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, கோமரன்கடவல | பிரதேச சபை, கோமரன்கடவல 026-2255045 | பிரதேச சபை, கோமரன்கடவல | 5,500.00 | 190,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 09 | கிண்ணியா நகர சபை, கிண்ணியா | கிண்ணியா, கட்டயாறு, பூங்கா வீதியில் வெளி உடற்பயிற்சி சகிதம் நடக்கும் பூங்காவை நிறுவுதல் EP/TR/KIUC/LDSP/ BT4/2024/W/02 | 8.56 | 75 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | நகர சபை, கிண்ணியா | நகர சபை, கிண்ணியா 026-2236232/-2236172 | நகர சபை, கிண்ணியா | 3,500.00 | 86,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 10 | குச்சவெளி பிரதேச சபை, குச்சவெளி | குச்சவெளியில் சுற்றுலா வசதிகள் நிலையத்தை நிர்மாணித்தல் படிநிலை Stage I & II EP/TR/KUPS/LDSP/ BT4/2024/W/01 & EP/TR/KUPS/LDSP/ PT3/2024/W/01 | 17.28 | 105 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, குச்சவெளி | பிரதேச சபை, குச்சவெளி 026-2252526 | பிரதேச சபை, குச்சவெளி | 5,500.00 | 180,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 11 | பிரதேச சபை, மொரவெவ | கித்துளன்துடுவயில் அரிசி ஆலைக்கான கட்டிடத்தை நிர்மாணித்தல் EP/TR/MOPS/LDSP/ BT4/2024/W/02 | 6.42 | 75 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, மொரவெவ | பிரதேச சபை, மொரவெவ 026-2225830 | பிரதேச சபை, மொரவெவ | 2,500.00 | 65,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 12 | பிரதேச சபை, மூதூர் | மூதூர் நகரத்தில் உள்ள சந்தைக் கட்டிடத்தொகுதியை மேம்படுத்துதல். EP/TR/MUPS/LDSP /BT4/2024/W/01 | 14.54 | 90 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, மூதூர் | பிரதேச சபை, மூதூர் 026-2238376/ 026- 2238573 | பிரதேச சபை, மூதூர் | 5,000.00 | 150,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 13 | பிரதேச சபை, சேருவில | சேருவில பிரதேச சபை வாகனத் தரிப்பிடத்தில் பொதுக் கழிவறையை நிர்மாணித்தல் EP/TR/SEPS/LDSP/ BT4/2024/W/01 | 8.12 | 75 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, சேருவில | பிரதேச சபை, சேருவில 026-2251475 | பிரதேச சபை, சேருவில | 3,500.00 | 82,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 14 | பிரதேச சபை, கோமரன்கடவல | மதவாச்சியில் சந்தைக் கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல். EP/TR/GOPS/LDSP/ PT3/2024/W/02 | 14.33 | 90 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, கோமரன்கடவல | பிரதேச சபை, கோமரன்கடவல 026-2255045 | பிரதேச சபை, கோமரன்கடவல | 5,000.00 | 145,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 15 | பிரதேச சபை, கந்தளாய் | கந்தளாயில் உள்ள பொது நூலகத்தின் புதுப்பித்தல் வேலைகள் EP/TR/KAPS/LDSP/ PT3/2024/W/01 | 8.21 | 60 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, கந்தளாய் | பிரதேச சபை, கந்தளாய் 026- 2234275 | பிரதேச சபை, கந்தளாய் | 3,500.00 | 83,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 16 | பிரதேச சபை, கந்தளாய் | கந்தளாயில் உள்ள வாகன நிறுத்துமிடத்தின் திருத்தவேலைகள் EP/TR/KAPS/LDSP/ PT3/2024/W/02 | 4.65 | 45 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, கந்தளாய் | பிரதேச சபை, கந்தளாய் 026- 2234275 | பிரதேச சபை, கந்தளாய் | 2,000.00 | 47,000.00 | 30.07.2024 | 02.07.2024 |
| 17 | பிரதேச சபை, மொரவெவ | மகாதிவுல்வெவயில் சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் EP/TR/MOPS/LDSP/ PT3/2024/W/01 | 13.54 | 90 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | பிரதேச சபை, மொரவெவ | பிரதேச சபை, மொரவெவ 026-2225830 | பிரதேச சபை, மொரவெவ | 4,500.00 | 140,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 18 | பிரதேச சபை, பதவி சிறிபுர | சிறிபுர நகரத்தில் உள்ள பலநோக்கு சேவை நிலையத்தில் தற்போதுள்ள கட்டிடத்தின் மேல் மாடியினை மேம்படுத்துதல் EP/TR/PSPS/LDSP/PT3/2024/W/01 | 16.08 | 105 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம | பிரதேச சபை, பதவி சிறிபுர | பிரதேச சபை, பதவி சிறிபுர 025-4934654 | பிரதேச சபை, பதவி சிறிபுர | 5,500.00 | 165,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 19 | பிரதேச சபை, தம்பலகாமம் | கல்மெட்டியாவ தெற்கில் சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் EP/TR/THPS/LDSP/ PT3/2024/W/01 | 10.95 | 90 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம | பிரதேச சபை, தம்பலகாமம் | பிரதேச சபை, தம்பலகாமம் 026-2246055 | பிரதேச சபை, தம்பலகாமம் | 4,000.00 | 110,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 20 | பிரதேச சபை, தம்பலகாமம் | சிராஜ் நகரில் மாட்டிறைச்சி மற்றும் கோழியிறைச்சி விற்பனை நிலையத்தை அமைத்தல் EP/TR/THPS/LDSP/ PT3/2024/W/02 | 2.38 | 45 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம | பிரதேச சபை, தம்பலகாமம் | பிரதேச சபை, தம்பலகாமம் 026-2246055 | பிரதேச சபை, தம்பலகாமம் | 1,500.00 | 25,000.00 | 30.07.2024 | 02.07.2024 |

**உதவி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**திருகோணமலை மாவட்டம்.**
**08-04-2024.**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want
Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

### தலைமைச் செயலகம் சப்ரகமுவ மாகாண சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இரத்தினபுரி நகரத்தில் அமைந்துள்ள சபரகமுவ மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி மற்றும் மாகாண சபைக்குரித்தான நிறுவனங்களுக்கு பின்வரும் சேவைகளை 2024-08-01ஆம் திகதி முதல் 2025-07-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு வினைத்திறனுடன் வழங்குவதற்கு இயலுமை உள்ள நிறுவனங்களிடமிருந்து கேள்விப் படிவங்கள் 2024-05-03ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு |
|---|---|---|---|
| 08/04/2024/ 2025/1 | பாதுகாப்புச் சேவை - சப்ரகமுவ மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி மற்றும் மாகாண சபைக்குரித்தான நிறுவனங்களில் பாதுகாப்புச் சேவைகளை நடாத்திச் செல்லல் | ரூபா 3,500.00 | ரூபா 200,000.00 |
| 08/04/2024/ 2025/2 | சுத்திகரிப்புச் சேவை - சப்ரகமுவ மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி மற்றும் மாகாண சபைக்குரித்தான நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவைகளை நடாத்திச் செல்லல் | ரூபா 3,500.00 | ரூபா 100,000.00 |

01. தலைமைச் செயலகத்தின் பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகப்) பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளும் மாதிரிப் படிவங்களில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மாதிரிப் படிவங்கள் மற்றும் இயைபுடைய ஏனைய விபரங்களை பிரதான செயலாளர் பெயரில் 3,500.00 ரூபாவுக்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை சப்ரகமுவ மாகாண சபையின் பிரதிப் பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அவர்களுக்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்விகளை 2024-05-03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''பிரதான செயலாளர், சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சப்ரகமுவ மாகாண சபைக் கட்டிடத்தொகுதியின் 2ஆம் மாடியில் அமைந்துள்ள பிரதான செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
04. மேற்கூறப்பட்ட பெறுமதியிலான கேள்விப் பிணை முறியை பிரதான செயலாளர் பெயரில் ரொக்கப் பணமாக வைப்புச் செய்யலாம். அவ்வாறல்லாவிட்டால் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 2024-05-03ஆம் திகதி முதல் 2024-09-30ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும், நிபந்தனையற்ற கோரப்பட்டவுடன் பணமாக்கக்கூடிய (Unconditional On demand) கேள்விப் பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
05. மேற்கூறப்பட்ட வகையில் கேள்விப் பிணை முறி கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பயன்பெறுநராக ''பிரதான செயலாளர், சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி'' எனவும், விடயமாக ''சப்ரகமுவ மாகாண சபைக் கட்டிடத்தொகுதிக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு கேள்விப்படிவம் சமர்ப்பித்தல்'' எனவும், ''சப்ரகமுவ மாகாண சபைக் கட்டிடத்தொகுதிக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்கு கேள்விப்படிவம் சமர்ப்பித்தல்'' எனவும், இயைபுடைய சேவையின் பிரகாரம் குறிப்பிட்டு வெவ்வேறாக கேள்விப் பிணை முறிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பாதுகாப்புச் சேவைக்காக ''பாதுகாப்புச் சேவைக்கு கேள்விப் படிவம் சமர்ப்பித்தல்'' எனவும் மற்றும் சுத்திகரிப்புச் சேவைக்காக ''சுத்திகரிப்புச் சேவைக்கு கேள்விப்படிவம் சமர்ப்பித்தல்'' என்றும் இயைபுடைய சேவையின் பிரகாரம் குறிப்பிடுதல் வேண்டும்.
06. பெறுகை ஆவணங்கள் 2024-04-09ஆம் திகதி முதல் 2024-05-02ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் வழங்கப்படும் என்பதுடன், இந்தக் காலப்பகுதியில் பெறுகை ஆவணங்களை இலவசமாக பிரதான செயலாளர் அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம். அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டவர்களால் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் கூடாது.
07. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் 2024-05-09ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கேள்விகள் 2024-05-03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்க வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
08. மேலதிக விபரங்களை 0452223080 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**மஹிந்த எஸ். வீரசூரிய,**
**பிரதான செயலாளர்,**
**சப்ரகமுவ மாகாணம்.**
**2024-04-09ஆம் திகதி சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலகத்தில்.**

## சிறிய அளவிலான விவசாய தொழில் முயற்சிகளுக்கான பாதிப்புகளை கட்டுப்படுத்தும் செயற்றிட்டம்

SARP

### விவசாய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

சிறிய அளவிலான விவசாய வியாபாரத்திற்கான பாதிப்புக்களை கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்தின் மூலம் கீழ்க்காணும் பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்காக சன்டே ஒப்சர்வர் பத்திரிகையில் 2024.04.07ம் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. குறித்த தகைமைகள், அனுபவம் மற்றும் விண்ணப்பிக்கும் செயற்பாடுகள், சம்பள அளவு பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக தயவு செய்து www.sarp.lk இணையதளத்திற்கு பிரவேசியுங்கள் குறித்த இணைய தளத்தை பரிசீலித்து உங்களது விண்ணப்பத்தை கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு SARP செயற்றிட்டம் கேட்டுக் கொள்கிறது.

1. செயற்பாடு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் (PS 03) - 01 பதவி
2. விவசாய மற்றும் விலங்கு நிபுணர் (PS 03) - 01 பதவி
3. கணக்காளர் (PS 04 Category A) - 01 பதவி

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.04.22

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறிய அளவிலான விவசாய தொழில் முயற்சிகளுக்கான**
**பாதிப்புகளை கட்டுப்படுத்தும் செயற்றிட்டம்,**
**2/2/1, கந்தவத்த வீதி, பெலவத்த, பத்தரமுல்ல**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### நீர்ப்பாசன அமைச்சு

**கேள்வி கோரல் - பொருட்கள்**

## காலநிலை பாதிப்புக்களை கட்டுப்படுத்தும் வெளிக்கட்ட பிரவேசம்

### தேசிய போட்டி கேள்விகோரல்
### நீர்ப்பாசன திணைக்களத்திற்கு
### நிகழ் நேர வெள்ள வரைபடலிடலிற்கான
### LiDar Drones மூன்று (03) கொள்வனவு செய்தல்

## SUPPLYING THREE (03) LIDAR DRONES FOR REAL-TIME FLOOD MAPPING INCLUDING TRAINING FOR OPERATIONS

**RFB இணைப்பு இலக்கம் - SLMOI/CRES/ID/G/NCB/11**

உலக வங்கியின் உதவியின் கீழ் செயற்படும் காலநிலைப் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தும் வெளிக்கட்ட பிரவேசம் மூலம் மேற்படி இலக்கம் கொண்ட பெறுகை செயற்பாடு சார்பாக பொறியிடப்பட்ட கேள்விகோரல் சார்பாக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அறிவித்தல் இன்றைய தினம் அதாவது 2024.04.09ம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக்குழு,**
**காலநிலை பாதிப்பை கட்டுப்படுத்தும் வெளிக்கட்ட பிரவேசம்,**
**இல. 11, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-05.**
2024.04.09

### விலைமனுக்களுக்கான அழைத்தல்
### மின்வலு மற்றும் சக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
### Supply, Install Reinforced Concrete Pole and Aerial Bundle Cable at Upper Tank Farm, China Bay
### B/19/2024

1. "Supply, Install Reinforced Concrete Pole and Aerial Bundle Cable at Upper Tank Farm, China Bay " என்ற ஒப்பந்தத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இந்த பணியின் நிர்மாணக் காலமானது 03 மாதங்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்/ பெயர் குறிப்பிடப்பட்ட உபஒப்பந்தக்காரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவும் உரித்தான சிவில் வேலைகளில் சி-6 மற்றும் சி-5 ஆம் தரங்களில் அல்லது மேற்பட்ட தரங்களையும் உரித்தான பொறியியல் வேலைகளில் ஈஎம்-2 அல்லது மேற்பட்ட தரத்தையும் CIDA உடன் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் கொண்டிருத்தல் வேண்டும்.
4. இந்த பெறுகையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த ஆகுசெலவானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/2016 (ii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 10,000 ரூபாவை (ரூ.8,267.88 + 2.5% SSCL + 18% பெசேவ) செலுத்திய பின்னர், 2024.04.26 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளருக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், அவரது அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் அல்லது http://ceypetco.gov.lk/public-tenders/ என்ற இபெகூ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்ட மூலத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் https://eroc.drc.gov.lk என்ற இணையதளத்தினூடாக கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அவர்களின் விலைமனுவுடன் பிசிஏ -3 சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024.04.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும். 011-5455142 என்ற இலக்கத்தினூடாக மின்னியல் பொறியியலாளர் பின்வருமாறு தொடர்பு கொள்ளவும். priyantha@ceypetco.gov.lk

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் முகாமையாளர் மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல.: 609,டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
தொலைபேசி: 5455335


**Applicable Rates for Obituary Notices of Daily News**

**For 15 Words - Rs. 300**
* Each additional word Rs. **20/-**
N. B. - Death Certificate is essential

**011 2 429 342 / 011 2 429 343**
classified@lakehouse.lk
frontoffice@lakehouse.lk


## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு
### உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் — செயற்றிட்ட அடையாளம்: P 163305
### கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனத்தின் சார்பில் உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழு தலைவர் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் IIIஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரம் மற்றும் விசேடத்துவத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சேருவில, சேருவில பிரதேச சபை செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சேருவில பிரதேச சபைக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-04-08ஆம் திகதி முதல் 2024-04-29ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
8. 30-04-2024ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களில் 2024 ஏப்ரல் 19ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.
11. ஒப்பந்தங்களைக் கையளித்தல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**உதவி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**திருகோணமலை மாவட்டம்.**
**08-04-2024.**

| S. No | Descriptions of Goods & Bid No. | Name of Procurement Entity | Place of Purchase of Bidding Document & T.P No. | The Place where bids should be deposited & bids will be opened | Price of the Bid Document (Rs) | Required Bid Security: Bid Security Amount (Rs) | Required Bid Security: Validity Period up to | Bid Validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Supply and Installation of Play Equipments - Improvement of facilities of Green park at Pulmoddai EP/TR/KUPS/LDSP/PT2/2024/G/01 | Pradeshiya Sabha, Kuchchaveli | Pradeshiya Sabha, Kuchchaveli 026-2252526 | Pradeshiya Sabha, Kuchcaveli | 2,500.00 | 60,000.00 | 13.08.2024 | 16.07.2024 |
| 02 | Supply and Installation of Rice Mill - Construction of Building for Rice Mill at Kithuluthuwa, Stage II EP/TR/MOPS/LDSP/PT3/2024/G/01 | Pradeshiya Sabha, Morawewa | Pradeshiya Sabha, Morawewa 026-2225830 | Pradeshiya Sabha, Morawewa | 2,000.00 | 35,000.00 | 30.07.2024 | 02.07.2024 |
| 03 | Supply and Installation of Computers and Accessories - Completion of market building with other facilities at Mollipothana EP/TR/THPS/LDSP/BT4/2024/G/01 | Pradeshiya Sabha, Thampalagamam | Pradeshiya Sabha, Thampalagamam 026-2246055 | Pradeshiya Sabha, Thampalagamam | 2,000.00 | 35,000.00 | 30.07.2024 | 02.07.2024 |
| 04 | Supply of Furnitures - Completion of market building with other facilities at Mollipothana EP/TR/THPS/LDSP/BT4/2024/G/02 | Pradeshiya Sabha, Thampalagamam | Pradeshiya Sabha, Thampalagamam 026-2246055 | Pradeshiya Sabha, Thampalagamam | 1,000.00 | 15,000.00 | 30.07.2024 | 02.07.2024 |
| 05 | Supply and Installation of Out Door Exercise Items - Establishment Walking Park with Out Door Exercise at Park Road, Kattayaru, Kinniya EP/TR/KIUC/LDSP/BT4/2024/G/01 | Urban Council, Kinniya | Urban Council, Kinniya 026-2236232/-2236172 | Urban Council, Kinniya | 1,000.00 | 15,000.00 | 30.07.2024 | 02.07.2024 |

**உதவி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**திருகோணமலை மாவட்டம்.**
**08-04-2024.**

# அபிலாஷையை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

## (EOI) (MOPA) (DMS) (HRMIS)

## தகைமையுள்ள தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்களிடமிருந்து தகவல் தொழில்நுட்ப சேவையைப் பெற்றுக்கொள்ளல்

**பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MOPA )**

பொது நிருவாக அமைச்சின் மனித வள முகாமைத்துவத் தகவல் கட்டமைப்பு (HRMIS) மற்றும் ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பு (DMS) ஆகியவற்றின் ஆய்வு, வடிவமைப்பு, விருத்தி, நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு தகைமை கொண்ட ஆலோசனை நிறுவனங்களைத் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் என்பவற்றுக்கான பெறுகை

**அறிமுகம்**

2022 ஜுன் 22 ஆம் திகதியிலிருந்து பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என அழைக்கப்படும் பொது நிருவாக அமைச்சு (MOPA), அதீத அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் செயற்பட்டு பொதுச்சேவை ஊழியர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் முன்னேற்றத்துக்காக விஷேட சேவையொன்றை வழங்குகின்றது. இந்த அமைச்சின் வரலாறு 80 வருடங்களைக் கடந்தது.

எனவே தான் தமது மனித வள முகாமைத்துவத் தகவல் கட்டமைப்பு மற்றும் ஆவண தேவைப்பாடுகளைப் பூர்த்தி முகாமைத்துவக் கட்டமைப்பு அல்லது அவ்விரண்டினதும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு தகைமை கொண்ட தகவல் தொழில்நுட்ப ஆலோசனை நிபுணர்களது உதவியைப்பெறுவதற்கு பொது நிருவாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

**ஆலோசனையின் குறிக்கோள்**

1. தேவைப்பாடுகள் பற்றிய விரிவான ஆய்வொன்றினை மேற்கொண்டு பொது நிருவாக அமைச்சுக்கு பரிபூரணமான இணைந்த மனித வள முகாமைத்துவத் தகவல் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பொன்று மற்றும் ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை வடிவமைத்தல்
2. தொழில் வழங்குநரால் வழங்கப்படும் மெய்நிகராக்கல் வன்பொருள் மேடையொன்றில் புதிய மனித வள முகாமைத்துவத் தகவல் கட்டமைப்பு மற்றும் ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை வாழும் சூழலுக்காக விருத்தி செய்தல் அல்லது தனிப்பயனாக்கல், பரீட்சித்தல், ஈடுபடுத்துதல், உரித்தாக்கல்
3. பொது நிருவாக அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்றுவிப்பு உபகரணங்களை அதிகரித்தல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சி வழங்கல்
4. பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அதன் பின்னரான பராமரிப்புச் சான்றிதழ்

**தகைமை முறை**

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள தகைமையுள்ள ஆலோசனை நிறுவனங்களுக்கு EOI சமர்ப்பிக்கலாம். அந்த ஆலோசனை நிறுவனத்துக்கு இலங்கையினுள் அல்லது வெளிநாட்டில் தனிப்பயனாக்கல் மென்பொருள் தீர்வுகள் தொடர்பில் 05 வருட அனுபவமொன்று கடந்த 10 வருடங்களுக்குள் காணப்பட வேண்டும் என்பதோடு கடந்த 10 வருடங்களுக்குள் அந்த ஆலோசனைப் பணிக்கு சமனான விதத்தில் இரண்டு (02) விடயங்களை மேற்கொண்டிருக்க வேண்டும்.

**அபிலாஷை வெளிப்பாட்டினை சமர்ப்பிக்கும் நடைமுறை**

கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் 2024.05.13 ஆம் திகதி வரை மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை ரூ. 12,500.00 கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் ஆர்வம் காட்டும் ஆலோசனை நிறுவனங்களுக்கு EOI ஆவணங்களின் பூரண தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட EOI ஆவணங்களை 2024.05.14 ஆம் திகதி பி.ப 2.00 அல்லது முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்க வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 071-5242410 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் அபிவிருத்தி உத்தியோகத்தரை, IT பிரிவின் அலுவலக நேரங்களுக்குள் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சு உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழு,**
**பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள்,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

# மார்ச் மாதத்தின் ஐ.சி.சி. சிறந்த வீரரானார் கமிந்து



பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சோபித்த இலங்கை அணியின் சகலதுறை வீரர் கமிந்து மெண்டிஸ் 2024 மார்ச் மாதத்திற்கான சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் சிறந்த வீரருக்கான விருதை வென்றுள்ளார்.

அயர்லாந்தின் மார்க் அடைர் மற்றும் நியூசிலாந்தின் டெட் ஹென்ரி ஆகியோருடன் போட்டியிட்டே இந்த கௌரவத்தை பெற்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று (08) இந்த வீரர்கள் பரிந்துரையில் இருந்து கமிந்து மெண்டிஸ் மார்ச் மாதத்திற்கான சிறந்த ஆடவர் கிரிக்கெட் வீரராக வாக்குகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சில்ஹட் நகரில் கடந்த மாதம் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷுக்கு எதிராக இலங்கை வெற்றி பெற முக்கிய காரணமாக கமிந்து மெண்டிஸ் அமைந்திருந்தார்.

அவர் அந்த டெஸ்ட் போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் விளாசியதோடு அதன் மூலம் சில சாதனைகளையும் நிலை நாட்டினார்.

மெண்டிஸ் குறிப்பிட்ட டெஸ்ட் போட்டியில் வெளிப்படுத்தியிருந்த ஆட்டமே அவர் மார்ச் மாதத்திற்கான சிறந்த வீரராக தெரிவாக முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தில் நடைபெற்ற டி20 தொடரிலும் கமிந்து மெண்டிஸ் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தான் ஐ.சி.சி. இன் மாதத்திற்கான சிறந்த வீரராக தெரிவாகிய விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் கமிந்து மெண்டிஸ், அதற்காக மிகவும் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஐ.சி.சி. இன் மார்ச் மாதத்திற்கான சிறந்த மகளிர் கிரிக்கெட் வீராங்கனையாக இங்கிலாந்தின் 25 வயது மய்யா போச்சியர் தெரிவாகியுள்ளார்.







டயலொக் அனுசரணையில் நடைபெற்ற 50ஆவது ஜோ பீட் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் புனித பீட்டர்ஸ் கல்லூரி 3 விக்கெட் வித்தியாசத்தில் புனித ஜோசப் கல்லூரியை வீழ்த்தி வெற்றியீட்டியது. இதில் டயலொக்ஆசி ஆட்டாபிஎல்சி குழுமத்தின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி லசந்ததெவரப்பெருமவிடமிருந்து சிறந்த துடுப்பாட்டக்காரர் விருதை திலான் தர்மசேன (புனித பீட்டர்ஸ் கல்லூரி) பெற்றுக்கொள்வதை காணலாம்.

## ஜோலிபோய்ஸ் கழகம் சம்பியன்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டியின் எல்லே மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் ஜோலி போய்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அக்கரைப்பற்று தர்மசங்கரி மற்றும் பனங்காடு அக்கினி விளையாட்டு மைதானங்களில் கடந்த சனிக்கிழமை (06) நடைபெற்ற இந்தப் போட்டிகளில் எல்லே போட்டியில் அக்கரைப்பற்று யங்பிளவர் மற்றும் பனங்காடு அக்கினி அணிகளையும் கரப்பந்தாட்ட போட்டியில் யங்பிளவர் அணியையும் ஜொலி போய்ஸ் வீழ்த்தியது.

## ஜூலை 1ஆம் திகதி எல்.பி.எல். ஆரம்பம்

இலங்கை கிரிக்கெட் சபையினால் இந்த ஆண்டு நடத்தப்படவுள்ள 5ஆவது லங்கா பிரீமியர் லீக் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.



இதன்படி எதிர்வரும் ஜூலை 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தத் தொடர் ஜூலை 21 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டிகள் கொழும்பு, தம்புள்ளை மற்றும் கண்டியில் நடத்தப்படவுள்ளன.

ஜூலை 1 ஆம் திகதி முதல் நாளில் ஆரம்ப நிகழ்வுடன் நடப்புச் சம்பியன் கண்டி மற்றும் தம்புள்ளை அணிகள் மோதவுள்ளன. ஜூலை 16 ஆம் திகதி வரை நடைபெறும் ஆரம்ப சுற்றுப் போட்டியில் போட்டியிடும் ஐந்து அணிகளும் தலா 4 போட்டிகளிலும் ஆடும்.

இதனைத் தொடர்ந்து முதலாம் தகுதிச் சுற்றுப் போட்டி ஜூலை 18 ஆம் திகதி நடைபெறுவதோடு ஜூலை 20 ஆம் திகதி இரண்டாவது தகுதிப் போட்டியில் இடம்பெறும்.

ஜூலை 21 ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறுவுள்ள நிலையில் ஜூலை 22 ஆம் திகதி மேலதிக நாளாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## மொசம்பிக்கில் படகு மூழ்கி 90 பேர் பலி

மொசம்பிக் வடக்கு கடற்கரைக்கு அப்பால் படகு மூழ்கி 90க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பதாக உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சுமார் 130 பேர் இருந்ததாக நம்பப்படும் அந்தப் படகில் இருந்து ஐவர் மீட்கப்பட்டாக நம்புலா மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் வாந்திபேதி நோய் பரவலை அடுத்து தப்பிச் சென்றவர்கள் என்று நம்புலா மாகாண செயலாளர் ஜமி நெடோ தெரிவித்தார். உயிரிழந்தவர்களில் பல சிறுவர்களும் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.



'அதிகம் பேரை ஏற்றி இருந்தது மற்றும் அதிகம் பேரை ஏற்றிச் செல்வதற்கு பொருத்தமற்றதாக இருந்ததால் அந்தப் படகு மூழ்கியுள்ளது' என்று நெடோ குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் தெற்கு ஆபிரிக்காவில் பரவி வரும் வாந்திபேதி நோயில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியாக நம்புலா மாகாணம் உள்ளது. தற்போது ஏற்பட்டிருக்கும் இந்தப் பாதிப்பு 25 ஆண்டுகளில் மிக மோசமானது என்று யுனிசெப் குறிப்பிட்டுள்ளது.

2023 ஒக்டோபர் தொடக்கம் மொசம்பிக்கில் 13,700 வாந்திபேதி நோய் சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

## 111 வயது முதியவர் உலகின் வயதான ஆடவராக சாதனை

உலகின் வயதான ஆடவர் என்ற கின்னஸ் சாதனையை இங்கிலாந்தைச் சேர்ந்த 111 வயது ஜோன் அல்ப்ரட் டென்னிஸ்வூட் படைத்துள்ளார்.

இந்த சாதனையை படைத்திருந்த 114 வயதான வெனிசுவேலாவின் ஜுவான் விசன்டே பெரெஸ் மரணித்த நிலையிலேயே டென்னிஸ்வூட் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

அவர் தனது நீண்ட ஆயுளின் இரகசியத்தை யூடியூப்பில் பகிர்ந்துள்ளார்.



அதில் நீண்ட ஆயுளுக்காக உணவு இரகசியங்கள் என்று எந்த சிறப்பு அம்சமும் இல்லை. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மீன் மற்றும் சிப்ஸ் சாப்பிடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். எதைப்பற்றியும் அதிகமாக சிந்தித்தால் அதிகம் எதையும் செய்ய முடியாது. பிறந்த திகதி, மரபியல், குடும்ப வரலாறு போன்றவை நீண்ட ஆயுளில் பங்கு வகித்தாலும் தனிநபரின் வாழ்க்கை முறை மற்றும் சுற்றுச் சூழல் காரணிகளும் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உலகின் வயதான ஆடவருக்கான கின்னஸ் சாதனைக்கான சான்றிதழ் கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி டென்னிஸ்வூட்டுக்கு கிடைத்துள்ளது.

உலகின் வயதாக பெண் மற்றும் வயதானவர் என்ற சாதனை ஸ்பெயினின் மரியா பிரன்யாஸ் மொரேராவிடம் உள்ளது. அவர் அண்மையிலேயே தனது 117 ஆவது வயதை கொண்டாடினார்.

## சர்வதேச செய்திகள்

# கான் யூனிஸில் இருந்து வாபஸ் பெற்ற இஸ்ரேல் படை ரபாவை தாக்க திட்டம்

### மரண வாடையை எதிர்கொண்ட ஊர் திரும்பிய மக்கள்

தெற்கு காசா மற்றும் அதன் பிரதான நகரான கான் யூனிஸில் இருந்து இஸ்ரேல் தனது துருப்புகளை வாபஸ் பெற்ற நிலையில் காசாவின் தென் கோடியில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா நகர் மீதான படை நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக அறிவித்துள்ளது.



கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பமான காசா போருக்கு அரையாண்டுகள் எட்டிய நிலையிலேயே கடந்த ஞாயிறன்று (07) தெற்கு காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெறப்பட்டு பிரதான நகரான கான் யூனிஸுக்கு மக்கள் திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் விடுத்த அறிவிப்பில், 'ரபா உட்பட எதிர்கால படை நடவடிக்கைகளுக்கு தயாராவதற்கு பல மாத போருக்குப் பின்னர் கான் யூனிஸ் நகரை விட்டு துருப்புகள் வெளியேறின' என்று குறிப்பிட்டுள்ளார்.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா மீது இஸ்ரேல் திட்டமிட்டிருக்கும் படை நடவடிக்கை குறித்து உலக நாடுகள் கடும் கவலையை வெளியிட்டு வருகின்றன.

'காசா போர் தொடரும், நாம் அதனை நிறுத்துவதற்கு தொலைதூரத்தில் இருக்கிறோம்' என்று இஸ்ரேலிய இராணுவத் தளபதி ஹெர்சி ஹல்வி தெரிவித்துள்ளார். 'இது பல்வேறு தீவிரத்துடனான ஒரு நீண்ட போர்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும் அழிவுகளுக்கு உள்ளாகி இருக்கும் கான் யூனிஸில் இருந்து துருப்புகள் வெளியேறியதை அடுத்து, இடம்பெயர்ந்த மக்கள் அங்கு வருகைதர ஆரம்பித்துள்ளனர். சற்று தெற்காக இருக்கும் ரபாவில் அடைக்கலம் பெற்ற இந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பும் நம்பிக்கையை பெற்றுள்ளனர்.

எனினும் அங்கு மரண வாடை வீசுவதாக கான் யூனிஸுக்குத் திரும்பிய நான்கு குழந்தைகளின் தாயான மாஹா தயிர் குறிப்பிட்டுள்ளார். 'இனியும் எமக்கு ஒரு நகர் இல்லை... வெறும் இடிபாடுகளே எஞ்சியுள்ளன. எதுவுமே மிஞ்சவில்லை. வீதிகள் வழியாக நடக்கும்போது என்னால் அழுகையை நிறுத்த முடியவில்லை' என்று 38 வயதான அந்தத் தாய் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

'அனைத்து வீதிகளும் தகர்க்கப்பட்டுள்ளன. மக்கள் இடிபாடுகளை தோண்டி உடல்களை எடுப்பதை நான் பார்த்தேன்' என்று பகுதி அளவு அழிக்கப்பட்டுள்ள தமது வீட்டில் இருந்து தயிர் மேலும் கூறினார்.

படைகளை வாபஸ் பெறுவதாக இஸ்ரேல் அறிவித்த விரைவில் மக்கள் கான் யூனிஸ் நகரில் வெளிப்பட ஆரம்பித்தனர். அவர்கள் தமது இடிந்த வீடுகள் மற்றும் காணாமல் போனவர்கள் தேடி வருகின்றனர்.

ஒக்டோபர் 7 இல் போர் வெடிப்பதற்கு முன் கான் யூனிஸில் சுமார் 400,000 மக்கள் வசித்ததோடு இஸ்ரேலின் கடுமையான குண்டு மழைக்கு மத்தியில் அது தற்போது அழிவடைந்த பூமியாக மாறியுள்ளது. மக்கள் கழுதை வண்டிகள், பைசிகல்கள் மற்றும் டிரக்குகளில் கான் யூனிஸை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், போர் இன்னும் முடியவில்லை என்றும் பணயக்கைதிகள் வீடு திரும்பி ஹமாஸ் ஒழிந்த பின்னரே அது முடியும் என்றும் இஸ்ரேல் பாதுகாப்பு படையின் பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் பீட்டர் லேர்னர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

'படைகள் குறைக்கப்படுகின்றபோதும், மேலும் படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. ரபா தெளிவான கோட்டையாக உள்ளது. நாம் ஹமாஸிடம் உள்ள திறன்களை நீக்க வேண்டி உள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**பேச்சில் இழுபறி**

காசா போருக்கு அரை ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இஸ்ரேல் வெற்றிக்கு ஒரு படி தொலைவில் இருப்பதாக தெரித்துள்ளார்.

இந்தப் போருக்கு எதிராக இஸ்ரேல் சர்வதேச அளவில் அழுத்தத்தை எதிர்கொண்டிருப்பதோடு குறிப்பாக இஸ்ரேலின் வான் தாக்குதலில் தொண்டுப் பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம் அதன் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா உட்பட மேற்கத்திய உலகிலும் கடும் கண்டனத்திற்கு காரணமாகியுள்ளது.

மறுபுறம் நெதன்யாகு அரசு இஸ்ரேலுக்குள்ளும் கடும் எதிர்ப்பை சந்திப்பதோடு அந்த அரசுக்கு எதிராக டெல் அவிவில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சியாக எகிப்து தலைநகர் கெய்ரோவில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

'உடன்படிக்கை ஒன்றுக்கு இஸ்ரேல் தயாராக உள்ளது' என்று தனது அமைச்சரவைக்கு கூறிய நெதன்யாகு, 'பணயக்கைதிகள் திரும்பாத வரை போர் நிறுத்தம் இல்லை' என்றார்.

எனினும் கெய்ரோவில் இடம்பெறும் புதிய சுற்று காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை என்று ஹமாஸ் அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'ஆக்கிரமிப்பாளர்களின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதோடு, கெய்ரோ பேச்சுவார்த்தைகளில் புதிதாக எதுவும் இல்லை' என்று அந்த ஹமாஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். இன்னும் எந்த முன்னேற்றமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டு கூறினார்.

முன்னதாக பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக எகிப்து மூத்த அதிகாரிகளை மேற்கோள் காட்டி அந்நாட்டு அரசுக்கு தொடர்புடைய அல் கஹரா செய்தித் தொலைக்காட்சி குறிப்பிட்டிருந்தது.

இந்தப் பேச்சுவார்த்தைக்காக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. தலைவர் வில்லியம் பர்ன்ஸ் கடந்த சனிக்கிழமை கெய்ரோ சென்றடைந்த நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தமது பிரதிநிதிகளையும் கெய்ரோவுக்கு அனுப்பியது.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக போரில் ஈடுபட்டு வரும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தமது பிரதான நிபந்தனைகளில் உள்ள முரண்பாட்டை தீர்க்க தவறியுள்ளன.

இஸ்ரேலின் தாக்குதலை முடிவுக்குக் கொண்டுவந்து இஸ்ரேலிய துருப்புகள் காசாவில் இருந்து முழுமையாக வாபஸ் பெற வேண்டும் என்று ஹமாஸ் நிபந்தனை விதிக்கும் அதேநேரம், போரை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றி எந்த உறுதியையும் வழங்காத இஸ்ரேல், தமது சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகளுக்கு பகரமாக காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக உடன்பாடு ஒன்றை எட்ட முயற்சிக்கிறது.

**மேற்குக் கரையில் பெண் பலி**

போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் மற்றும் தெற்கு காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெற்றபோதும் காசாவில் மோதல் தொடர்ந்து நீடிப்பதோடு 185 ஆவது நாளாக நேற்று இஸ்ரேலிய தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

மத்திய காசா மற்றும் ஷுஜையா முகாமில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

இதில் ரபா நகர் மற்றும் அதனை சூழவுள்ள பகுதியில் வீடுகள், விவசாய நிலங்களை இலக்கு வைத்து இஸ்ரேல் வான் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்ததாக அங்கிருக்கும் வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை தற்போது 33 ஆயிரத்தை தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசா போரை ஒட்டி ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றம் நீடிப்பதோடு அங்குள்ள இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகில் நேற்று பலஸ்தீன இளம் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். சோதனைச் சாவடியை தாண்டிச் செல்லும் பெண் மீது இஸ்ரேலிய படை சூடு நடத்தியதாக பார்த்தவர்கள் கூறியபோதும் அந்தப் பெண் கத்திக் குத்து தாக்குதலில் ஈடுபட முயன்றதாக இஸ்ரேல் கூறுகிறது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இதுவரை குறைந்தது 427 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பெரும்பாலான மரணங்கள் இஸ்ரேலிய துருப்புகளுடனான மோதலின்போது இடம்பெற்றதாகும்.

மறுபுறம் இந்தப் போர் பிராந்தியத்திலும் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் சூழலில் தெற்கு லெபனானில் நேற்றுக் காலை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். தாக்குதல்கள் தீவிரம் அடைந்து வருவதாகவும் வன்முறைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு எச்சரித்துள்ளது.

காசாவில் போர் நீடிப்பதற்கு இணையாக இஸ்ரேலிய இராணுவம் மற்றும் ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையில் பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிரியத் தலைநகர் டமஸ்கஸில் உள்ள ஈரான் தூதர வளாகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏழு ஈரான் புரட்சிக் காவல் படை உறுப்பினர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து, 'இஸ்ரேலிய தூதரகங்கள் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களாக இருக்காது' என்று ஈரான் உயர்மட்ட தலைவரின் ஆலோசகர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

ஈரான் ஆதரவு பெற்ற யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்களும் செங்கடலைச் சூழ பயணித்த மேலும் மூன்று கப்பல்களை இலக்கு வைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக குறிப்பிட்டுள்ளது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் – செயற்றிட்ட அடையாளம் : P 163305

## கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனத்தின் சார்பில் கிழக்கு மாகாணம், மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள துறை மற்றும் தரத்திற்கு நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் விலைக்கோரல் தரவில் (பிரிவு 5) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மட்டக்களப்பு, கல்லடி, சரவணா வீதி, உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து (தொலைபேசி இல. 065-2223512) / அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மட்டக்களப்பு, கல்லடி, சரவணா வீதி, உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு/அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர்களுக்கு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 2024-04-09ஆம் திகதி முதல் 2024-04-29ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ள வேண்டும்.
8. விலைமனுக்களை உதவி உள்ளூராட்சி ஆணையாளர், சரவணா வீதி, கல்லடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகமந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.
10. விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் 2024-04-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.
11. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
13. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் எந்தநேரத்திலும் இந்தப் பெறுகையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை தொழில்வழங்குநர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

| தொ. இல. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | வேலை விபரங்கள் மற்றும் விலைக்கோரல் இலக்கம் | கேள்விபிடக் கூடிய விலைக் கோரல் தொகை (வெட் இன்றி) மில்லியன் | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் மற்றும் விசேடத்துவம் | விலைமனு ஆவணத்தின் விலை (ரூபா) | தேவையான விலைமனுப் பிணை முறி | | விலைமனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | விலைமனுப் பிணை முறி தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| 1 | கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, வாகறை | வாகறை பிரதேச சபையிலுள்ள முன்னரங்கு அலுவலகத்துடன் கூடிய அலுவலக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் மற்றும் மேம்படுத்தல்கள் (மீள்கேள்வி) LDSP/EP/BT/KPWPS/2024/PT3/01 | 24.00 | 90 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 5,000.00 | 240,000.00 | 2024-08-05 வரை | 2024-07-16 வரை |
| 2 | போரதீவுபற்று பிரதேச சபை, வெள்ளாவெளி | வெள்ளாவெளியிலுள்ள பலநோக்கு சேவை நிலையத்தின் தொடர்ச்சியான நிர்மாண வேலைகள் LDSP/EP/BT/PPPS/2021/01 | 30.80 | 90 நாட்கள் | C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 5,000.00 | 308,000.00 | 2024-09-24 வரை | 2024-08-27 வரை |
| 3 | ஏறாவூர் நகர சபை | ஏறாவூரில் உள்ள பழைய சந்தைக் கட்டிடத்தை மேம்படுத்துதல் LDSP/EP/BT/EUC/2024/PT3/01 | 35.50 | 90 நாட்கள் | C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 5,000.00 | 356,000.00 | 2024-09-24 வரை | 2024-08-27 வரை |
| 4 | மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபை, களுதாவளை | களுவாஞ்சிக்குடியில் உள்ள பொதுச் சந்தையை மேம்படுத்துதல் LDSP/EP/BT/MSEPPS/2024/PT3/01 | 26.70 | 90 நாட்கள் | C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 5,000.00 | 267,000,00 | 2024-09-24 வரை | 2024-08-27 வரை |

**தலைவர், மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு, கிழக்கு மாகாணம்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**வரோதயா நகர், திருகோணமலை.**
**2024-04-09.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம். செயற்றிட்ட ID: P 163305

## கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து கடனொன்றை உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள அம்சங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பொருத்தமான உள்ளூர் அதிகாரசபைகளின் சார்பாக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறான தரம் மற்றும் விஷேடத்துவத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
